275

திரித்வைக நம.

சத்திய வேத சங்கீத கீர்த்தனை

—:O:—

இஃது

மணப்பாடு

(குருஸ் கோஸ்த என்று அழைக்கப்படும்)

மகா-ா-ாஸ்ரீ மிக்கேல்-பேதுரு கோஸ்த
அண்ணாவியவர்களால்

இயற்றப்பட்டது.

(*Copyright Reserved*)

3-ம் பதிப்பு.

PRINTED AT

THE GOOD PASTOR PRESS, MADRAS.

Publishers

THOMAS RODRIGO & SONS,

Madras.

1940.

12 MAR 1941
MADRAS

✠

திரித்வைக நம.

சத்திய வேத சங்கீத கீர்த்தனை

—:O:—

இஃது

மணப்பாடு

(குருஸ் கோஸ்த என்று அழைக்கப்படும்)

மகா-ா-ாஸ்ரீ மிக்கேல் பேதுரு கோஸ்த

அண்ணாவியவர்களால்

இயற்றப்பட்டது.

(*Copyright Reserved*)

3-ம் பதிப்பு.

PRINTED AT

THE GOOD PASTOR PRESS, MADRAS.

பிரசுரகர்த்தர்

தாமஸ் ரொட்ரீகோ அன் சன்ஸ்,

165, பிராட்வே, மதறஸ்

1940.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAR 1941
MADRAS

264.1

333

Q6:4146

Imprimatur

+ FRANCISCUS, TIBURTIUS ROCHE S. J.

Ep. Tuticorin.

5th Aug. 1939.

வித்வான் தா. அருளப்பமுதலியாரவர்களால்
கொடுக்கப்பட்ட
சாத்துக்கவி.

சீர்மருவு மைரோப்பாவினில் வழங்கு மிசைச் சுரங்க
டெரிந்தப் போக்கில்
ஏர்மருவு பரன்மேலுந் தேவதாய் மேலுமவர்
இணைத்தாள் போற்றும்
தார்மருவு மும்பரார்ச்ய சிஷ்டர்கள் மேலுஞ் செழுங்
கீர்த்தனங்கள் செய்து
பேர்மருவினுன் குருசுக்கோஸ்த வெனும் அண்ணுவி
பெட்ப மன்னே.

AN APPRECIATION

It affords me great pleasure to be offered an opportunity to recommend this hymn book composed by the late Mr. Cruz Costa. His son, Mr. Manuel Costa, endowed with the same poetical gift as his father, has prepared a second edition of this book, after adding a good many hymns of his own composition.

I know that opinions differ as to the advisability of adapting Tamil words to Western melodies, and I respect the feelings of those whose contention is that such adaptation tends positively to deform both the music and the words. Still, I may be allowed to quote instances where this combination of Tamil words and Western music has proved a real success. I have heard most of these canticles sung, at Manapad itself, and from the way they were sung, it was clear that the music powerfully appealed to the choristers. Again, here at Palamcottah, the four hundred boarders

3090

daily sing similar canticles, recently composed by the Rev. Fr. J. M. Gnanadickam, S. J.,[1] and do so most enthusiastically, as has been remarked by more than one visitor.

After several tentative experiments, I have come to the conclusion that congregational singing is made much easier, if Western melodies are adapted. Now, if a poet chooses to express his ideas in such a way that they may be set to Western music, who can reasonably object to his doing so? Is it not a fact that Lambillotte's melodies are sung all over the world, and in most cases not with the original French words?

I trust this little book will work its way into the parishes of this Diocese and will help towards the spreading of congregational singing.

St. Francis Xavier's H. S.,
Palamcottah
6—3—22.
A. LEBEAU, S. J.

---

1. ஞானக் கீர்த்தனைகள், The Palamcottah Printing Press.—1921.

முகவுரை

கடல் சூழ்ந்த இவ்வுலகத்தி னெத்திசையிலும் பரவி யிரா நின்ற சத்திய கத்தோலிக்கு திருச்சபையில் வழங்காத அருமையான கீதங்களுமில்லை, இனிமை யான பாடல்களுமில்லை. இதில் வழங்குஞ் செபங்களும், பிரார்த்தனைகளும் திருச் சடங்குகளும் பெரும்பான்மையுங் கீதம் பாடலின்றி நடப்பதில்லை.

கீதராஜனாகிய தாவீதென்பவர் "**சகல ஜாதி ஜனங் களே! புதிய கீதத்தால் நன்றாய்ச் சப்திக்கும் தாள வாத்தியங்களால் சுவாமியைப் புகழ்ந்து கொண்டாடுங்கள்**" என்று சொல்வது போலவே, நமது வேதாகமங்களி னெவ்வோரேடும் இனிய வீணையின் தந்திகளைப்போலச் சர்வேசுரனுடைய மகிமை, மாட்சிமை, மகத்துவத்தை கொண்டாடு கின்றது.

சத்திய திருச்சபையின் அலங்கிர்த ஆலயங்களில் பூசை நைவேத்திய ஆராதனைக் காலங்களில், அதி விநோத கீத வாத்தியங்களோடு பாடப்படுந் துத்தி யப் பாடல்கள், எவர்க்கும் ஆனந்த பரவசத்தை வரு விக்கத் தக்கவையே.

சாதாரண சத்திய திருச்சபையால் ஏற்படுத்தப் பட்ட திருப்பாடல்க ளன்றி, அத்திருச்சபையானது, மிகவுந் தழைத் தோங்காநின்ற ஐரோப்பாக்கண்ட முழுமையும் அந்தந்தத் தேச பாஷைகளிலும் தேவஸ்

தோத்திரமாக வெவ்வேறநேக பாடல்களுண்டுபட்டுத், திருச்சபை யதிகாரிகளின் அங்கீகாரத்தின் மேல் தேவாலயங்களிலுஞ், செபக்கூடங்களிலும், பற்பல சமயங்களிற் பாடப்பட்டு வருகின்றன வென்று அநேக பாடற்புஸ்தகங்கள் வழியா யறிகிறோம்.

அவ்வாறு இந்தத் தமிழ் நாட்டிலும் பலவிடங்களிலுள்ள தேவாலயங்களில் தமிழ் இராகங்களில் தேவஸ்தோத்திரப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன வென்றாலும், ஷை தமிழிராகப் பாடல்கள் மிருதங்கம், ஜாலர் முதலிய வாத்தியக் கருவிகளோடு இசைந்து பாடினு லினிமை தோன்றுமேயொழிய மற்றப்படி தோன்றாதாகையாலும், மேற்சொல்லிய இரைச்சலுள்ள வாத்தியக்கருவிகள் கோவிலுக்குளுபயோகிக்கக் கூடாதென்று திருச்சபை விலக்கியிருப்பதினாலும், இக்காலத்தி லிந்நாட்டில் அநேக இடங்களிலுள்ள தேவாலயங்களில் "அர்மோணியம்" என்னும் வாத்தியக் கருவியை யுபயோகித்து வருவதால் அத்துடன் இசைந்து பாடுவதற்கும், எந்த வாத்தியக் கருவிகளுமே இல்லாமல் பலர் சேர்ந்து பாடுவதற்கும், சீர்மை யிராகங்களே யொத்துவருமாதலாலும், முன் சொன்ன இராகங்களில் இயற்றிய பாடல்களை யொருங்கு சேர்த்துச் "**சத்திய வேத சங்கீத கீர்த்தனம்**" என்னும் பெயருடன் ஓர் சிறு புஸ்தகம் **1914**-ம் வருடம் முதல் முறையாக வெளியிடப்பட்டது.

சர்வேஸ்பரனின் அதி மிக ஸ்தோத்திரத்தையே தமது ஏக எண்ணமாகக்கொண்டு, காலஞ் சென்ற எனது தந்தை இயற்றிய இப்புஸ்தகத்தின் முதற் பதிப்பு, பிரசுரஞ் செய்யப்பட்ட சொற்ப காலத்துக்குள்ளாக முடிவாகி விட்டமையால், தமது அந்திய காலத்தில் எமதூர் பங்குக் குருவாயிருந்த சேசு சபை சங். பிளாசியூஸ் டிலிங்கர் சுவாமிகளினதும், சேசு சபை கனம் ஆல்பர்ட் லெபோ சுவாமிகளினதும் பெரும் முயற்சியால், அநேக சிறந்த இராகங்களில் இயற்றியுள்ள பாடல்களைக் கொண்டு இப்புஸ்தகத்தின் இரண்டாம் பதிப்பு 1922-ம் வருடம் (2000 புஸ்தகங்களுடன்) வெளியிடப்பட்டது. தென் இந்தியாவின் பலவிடங்களிலும், தூத்துக்குடி மேற்றிராசனத்தின் அநேக பங்குகளிலும், இலங்கையின் பல பாகங்களிலும் இப்பாடல்கள் இப்போது பாடப்பட்டு வருகின்றன.

இதில் முதலாவதாக திவ்ய இஸ்பிரீத்துசாந்துவின் மந்திரக் கீர்த்தனமும், விசுவாச மந்திரக் கீர்த்தனமும், அப்பால், கர்த்தர் பிறப்பின் பேரிலும் அவருடைய திருப்பாடுகளின் பேரிலும், அர்ச். கன்னி மரியம்மாள், அர்ச். சூசையப்பர், சில அர்ச்சியசிஷ்டவர்கள் பேரிலுமான கீர்த்தனங்களோடு புதிய சில கீர்த்தனங்களையுஞ் சேர்த்து, இம் மூன்றும் பதிப்பை வெளியிடலானேன். இவற்றில், இங்கிலீஷ், பிராஞ்சு இராகமென்று குறிப்பிட்டிருப்பவை தவிர, மற்றவையினிராகங்களை அந்தந்தக் கீர்த்தனங்களுடன் குறிப்

பிட்டிருக்கும் புஸ்தகங்களிலுள்ள இராகப் பெயரால் தெளிவாயறிந்து கொள்ளலாம்.

இனிமையான இராகங்களில் இசைத்துள்ள இப் பாடல்களை அவச்சுரமின்றி, பதங்களிலுள்ள நெடிலை நெடிலாகவும். குறிலை குறிலாகவும் உச்சரித்துப் பாடுவது அகத்தியமென்பதைப் பாடகர்கள் அறிந்து கொள்வார்களாகவும்.

மனுவேல் கோஸ்த.

சரியாய் வந்திக்கத்தக்க

தூத்துக்குடி மேற்றிராணியாண்டவரவர்களின்

முன்னுரை

தென்னிந்தியாவில் தென்கோடியில் பொலிவுற்றுத் திகழும் மணவையம்பதியானது சங்கீதம், சித்திரம், சிற்பம், சாகித்தியம் இதுபோன்ற நுட்பநூல்களை பிரக்கியாதையுடன் அபிவிருத்தி செய்துவந்த தொன்மைவாய்ந்த ஓர் சிறந்த பட்டணம்.

“சத்தியவேத சங்கீத கீர்த்தனை.”

என்கிற அரியநூலை இயற்றிய ஆக்கியோன் மணப்பாட்டில் பிறந்த உயர் திருவாளர் **மிக்கேல் பேதுரு கோஸ்த** அண்ணாவியார்.

“புலவர் வன்மை பிறப்பின் உரிமை
பிரசங்கியின் வன்மை முயற்சியின் தன்மை”

என்பது இலத்தீன் பழமொழி.

(POETA NASCITUR—ORATOR FIT)

இம்முதுமொழிக்கு நமது ஆக்கியோன்
ஓர் சீரிய சான்று.

ஏனெனில், இவர் மிக்கேல் பேதுரு கோஸ்த அண்ணாவியார், அந்தோனிக்குட்டி அண்ணாவியார், இன்ப கவிராயர் முதலிய மகா வித்வான்களுக்கு பெந்துவும், வித்வான் சூசை அந்தோனிக் கோஸ்த அண்ணாவியாருக்கு பௌத்திரரும், மனுவேல் அந்தோனிக் கோஸ்த அண்ணாவியாருக்குப் புத்திரருமாவர்.

"விளையும்பயிர் முளையில் தெரியும்"

என்பதற் கொப்ப இவருக்கு 18 வயது நடக்கும் போது "சம்பேதுரு" என்கிற நாடகம் இயற்றி, தாமே பிரதம பாத்திரமாக நடித்ததாகவும், இதனால் இவருடைய பேரும் கீர்த்தியும் அண்மையிலும் சேய்மையிலும் விளங்கத் துவக்கினதாகவும் அறியக் கிடக்கின்றது.

இதன்னியில் இவரியற்றிய பிரபந்தங்கள் பல உள உதாரணமாக : அர்ச். எரோணிமுஸ், அர்ச். ஜூலியானம்மாள், அர்ச். உர்சுலம்மாள், அர்ச். மார்த்தம்மாள் இவர்கள் நாடகங்கள், திரு இருதயமாலை, நன்மரணமாலை, திருச்சிலுவை ஆராதனைப் புஞ்சம், திருக்குடும்ப மான்ய மாலை முதலியன.

இவர் இறுதியில் இயற்றியது.

"சத்திய வேத சங்கீத கீர்த்தனை"

இவருடைய பேர் இதுவரையில் மங்கா ஒளியுடன் பிரகாசிப்பதற்குக் காரணம் இந்நூலே. இவர் எழுதிய காவியங்களையும் பிரபந்தங்களையும் மகாவித்வான் அருளப்ப முதலியார் பரிசோதித்து, இவருடைய சொல்நயம் பொருள்நயம் முதலியவைகளைக் கவனித்து இவருடைய வாக்கு **தேன் சுவை போன்று** இனிமையா யிருக்கிறதென்று சொல்லி யிருக்கிறாரென்றால் வேறு புகழ்மாலை சாற்றுவான் என் ?

மேலும் நமது ஆக்கியோன் தமிழ் சங்கீதத்திலும் தேவாலயத்தில் பாடும் இலத்தீன் பாடல்களிலும் திறமை வாய்ந்தவர் என்று அறிந்த, சங்கீதத்தில் தேர்ச்சிபெற்ற கனம் சேசு சபை லாசூஸ் சுவாமி, அர்ச். யாகப்பர் தேவாலயத்து சங்கீத உபாத்தியாய ராகவும் தலைவராகவும் 1888ஷ நியமித்தார். இவர் மணவையம்பதிக்கு ஆற்றிய தொண்டு எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று.

இம்மகான் 1917ஷ பெப்ரவரிமீ 10-ம்உ தமது 62-ம் பிராயத்தில் பரலோக பிராப்தியானர்.

நமது மேற்றிராசனத்தில் பற்பல இடங்களிலும், ஏனைய மேற்றிராசனங்களிலும் சத்தியவேத சங்கீத கீர்த்தனைகளை கோவில்களிலும், பள்ளிக்கூடங்களி லும், மடங்களிலும் நன்கு உபயோகித்து வருவதை நாம் அறிவோம். ஆகவே பலர் பலநாள் எதிர்பார்த் திருந்த செப்பரிய இச்சங்கீத நூலை குருக்களும், கன்னியர்களும், உபாத்திமார்களும், மாணவர்களும் ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

“ சங்கீதம் பாடுபவன் இருமுறை ஜெபிப்பவன்” என்பது சுலோகம்.

சங்கீத வேந்தன் தாவீதன், சங்கீதத்தைப்பற்றி பாடினதை சகல கிறீஸ்துவர்களும் அறிந்து அதன் பிரகாரம் நடக்கக்கடவார்கள்.

"நமது சுவாமிக்குச் சங்கீதம் பாடுங்கள், சங்கீதம் பாடுங்கள்—நமது இராஜாவுக்கு சங்கீதம் பாடுங்கள், சங்கீதம் பாடுங்கள்—ஏனெனில் தேவன் பூமி முழுவதற்கும் அரசர். ஞானத்தோடு சங்கீதம் பாடுங்கள்" (சங். 46.)

"ஆண்டவருடைய நவமான பாட்டைப் பாடுங்கள். பூமியின் குடிகள் யாவரும் ஆண்டவரைக் குறித்துப் பாடுங்கள். ஆண்டவருக்குத் தோத்திரமாகப் பாடி, அவருடைய நாமத்தை வாழ்த்தி, நாள் தோறும் அவருடைய இரட்சிப்பைப் பிரசுரப் படுத்துங்கள். ஜனங்களுக்குள்ளே அவருடைய மகிமையை அறிவியுங்கள். சகல ஜனங்களுக்கும் அவருடைய அதிசயங்களை வெளிப்படுத்துங்கள்." (சங். 95)

+ FRANCIS TIBURTIUS ROCHE S.J.
தூத்துக்குடி மேற்றிராணி ஆண்டவர்.

தூத்துக்குடி.
8—12—40.

A. M. D. G.

சத்திய வேத

சங்கீத கீர்த்தனை

திவ்ய இஸ்பிரீத்துசாந்து பேரில்

1. *Air* :—**Hail! Thou Living Bread.**

"*Crown of Jesus Music*" *No. 178.* (ii.)

1 மெய்ப் பரம த்ரீத்துவத்தின்
விமல மூன்றும் ஆளாம்
இஸ்பிரீத்து—சாநதுவே நீர்
எழுந்தருளி வாரும்.

2 தேவுலகத்தில் நின்றே நும்
திவ்விய ப்ரகாசத்தின்
மேவு கதிரை வருக
விடுத்தருள்வீராக. (மெய்ப்பரம)

3 தரித்ரர்களின் பிதாவே!
தயை கொடைக் கர்த்தாவே!
இருதயங்கட் கொளியே!
எழுந்தருளி வாரும். (மெய்ப்பரம)

4 உத்த மாறுதலானோரே!
உலகின் ஆத்மங்கட்கு
நித்தியமான மதுரம்
நிறை விருந்தாடியே! (மெய்ப்பரம)

5 பேரின்ப இளைப்பாற்றியே !
ப்ரயாசத்திற் சுகமே !
ஆர்வெய்யிலிற் குளிர்ச்சியே !
அழுகைத் தேற்றரவே ! (மெய்ப்பரம)

6 வெகு ஆனந்தத்தோ டென்றும்
விளங்கு ப்ரபையே நும்
தகை விஸ்வாசிக ளிரு
தயங்களை நிரப்பும். (மெய்ப்பரம)

7 நாதர் நுந் தெய்வீக மின்றி
நரரானவர் தம்மில்
ஏதமென்னுங் குற்றமதே
இல்லாத தொன்றுமிலை. (மெய்ப்பரம)

8 புவியில் அசுத்தத்தையே
போக்கி நீர் சுத்தம் பண்ணும்
நுவ லுலர்வை நனையும்,
நோவைக் குணப்படுத்தும். (மெய்ப்பரம)

9 வணங்கா திருக்கின் றதை
வணங்குதற்குப் பண்ணும்,
பிணி குளி ருள்ளவையைப்
பெற்ற குளிர் போக்கிடும். (மெய்ப்பரம)

10 தவறியதை நடத்தும்,
சதமென் றுமை நம்பும்,
இவர் விஸ்வாசிகட்கே நும்
ஏழ் கொடையுமே ஈயும். (மெய்ப்பரம)

11 புண்யப் பேறுகளையும் நற்
புனிதச் சாவையுமே
எண்ணில் மோக்ஷ வாழ்வையுமே
ஈந்திடும். ஆமென்சேசு. (மெய்ப்பரம)

2. *Air* :—**Holy Spirit, Lord of Light.**

Hymn Book by Christian Bros. No. 190

1 தேவ ஸ்பிரீத்துசாந்துவே
தேவரீர் வாரும் எமில்
மாவரப்ரசாதம் நும்
மைந்தரெங்கட் கீயவே
வாரும் ஸ்பிரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

2 தேவுலகில் நின்று நும்
திவ்விய ப்ரகாசத்தின்
மேவு மோர் கொள் காந்தியை
வேதனீர் வரவிடும்
வாரும் ஸ்பிரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

3 ஏதிலார்களின் பிதா
வே கொடைக ளீகின்ற
வாதியே யிதயங்கட்
காதபமே வாரும் நீர்
வாரும் ஸ்பிரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

4 ஓ! உத்தமாறுதலே
ஓது மாத்துமங்கட்கு
தாவில் மாதுர்ய விருந்
தாடியே வாரும் எமில்
வாரும் ஸ்பிரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

5 பன்னும் பேரின்ப விளைப்
பாற்றியே ப்ரயாசத்தில்
மன்னிடும் நன்மைச் சுக
வாரணமே வாரும் நீர்
வாரும் ஸ்ப்ரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

6 வெய்யிலிற் குளிர்ச்சியே
வெந்துய ரழுகையில்
துய்ய தேற்றரவே எம்
தோட நீவ வாரும் நீர்
வாரும் ஸ்ப்ரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

7 பேரானந்தத்தோ டொளிர்
ப்ரபையே விஸ்வாசிகள்
நாரார் ஹ்ருதய வுற்ப
னங்களை நிரப்புவீர்
வாரும் ஸ்ப்ரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

8 நுந் தெய்வீக மின்றியே
நொய்மை மானிடர் தமில்
நந்தன் மேவு மேதமில்
லாத தொன்றுமே யிலை
வாரும் ஸ்ப்ரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

9 தோமுறும் வாலாமையைத்
தூய்மை யாக்குங் காய்ந்ததை
வாமமா நனையு நோ
வைக் குணப்படுத்துவீர்
வாரும் ஸ்ப்ரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

10 காசினி மிசை வணங்
காதலை வணங்கிட
ஈசனீர் செயுங் குளிர்
எற்றதைத் தண் போக்குவீர்
வாரும் ஸ்பரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

11 ஆர்வின்றித் தவறிய
தைச் செவ்வே நடத்திடும்
ஏர் விஸ்வாசிகட்கு நும்
எழ் கொடையு மீகுவீர்
வாரும் ஸ்பரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

12 புண்யப் பேறியா மிவண்
பொன்றும் வேளை நல்லவி
வெண்ணில் மோக்ஷ பாக்கியம்
எங்கட் கன்பி னீகுவீர்
வாரும் ஸ்பரீத்துசாந்துவே
வல்லப வநாதியே.

---

3. *Air* :—**O Saint Esprit, Venez en Nous.**

Vade Mecum, 3rd Vol : No. 103.

பல்லவி.

ஸ்பிரீத்துசாந்துவே வாரும்
ஸ்பிரீத்துசாந்துவே வாரும்
ஈரில்லா நாதனே } *bis.*
எம்மில் நீவீரெழுந்தருளும். }

சரணங்கள்.

1 தற்பரன்னும் வரப்ரசாதம்
தந்திட வாரும் தாதர் யாம்
துற்பலத்தாற் றீங்கில் வீழாமல்
துணைதந்தே காப்பாற்ற வாரும்
வாரும் திவ்யாக்னி நாவே
வாரும் எம் வேதாவே. (ஸ்பிரீத்து)

2 வேதத்தி லெம்மைத் திடப்படுத்தும் யாம்
விண் மார்க்கமா வுயிர் வரையுமே
கோதின்றியிங் கொழுகியுய வுந்தங்
கொடைக ளேழையுந் தந்தருளும். *bis.*
(ஸ்பிரீத்து)

3 மண் மெய் வெந்தீயில் விழும் குணுங்காற்றும்
மாவினைப் போரில் தமியேம் வெலத்
திண்மை தயை செய்தீந்தருளும் புண்யத்
தினில் யாமோங்கச் செய்யும். (ஸ்பிரீத்து)

அர்ச். தமதிரித்துவத்தின் பேரில்

4. *Air* :—**Morning Hymn.**

Hymn Book by Christian Bros : No. 188.

1 ஓ ! தேவ தேவனே
உம்பரிறைவனே
உமக்கே தோத்ரமே
நாதா அளவிலா
நன்மைச் சுரூபனே
ஞான்றுமே தோத்ரமே. — *bis.*

2 சீரார் பிதாச் சுதன்
தேவாவி யென்னு மெய்
த்ரீத்வைகா தோத்ரமே
காராரும் வானுல
கம் யாவையுந் தந்த
கர்த்தாவே தோத்ரமே. *bis.*

3 அதி தயையுடன்
அல்லாரி ராவிற் காத்
தாட்கொண்டீர் தோத்ரமே
உதியிவ் வெல்லையின்
உதய காலையில்
உமக்கே தோத்ரமே. *bis.*

4 இற்றைவரையுந் தீங்
கெய்தா தெமைக் காத்தீர்
எங்கோவே தோத்ரமே.
மற்றுாரி லெங்கட்கு
மானன்றென் றுஞ் செயும்
மாதேவே தோத்ரமே. *bis.*

விசுவாச மந்திரம்.

5. *Air* :—**Joy, Joy, The Mother Comes.**

Hymn Book By Christian Bros., No. 79.

1 பரலோகம் புவி
படைத்துக் காக்கின்ற
சருவ வல்லபத்
தாதையாந் தேவனை
மிகவே பத்தியாய்
விசுவசிக்கின்றேன்

தகைப் பிதா வவர்
தனையனுகிய.

2 எமது நாதராம்
இயேசு க்றீஸ்துவை
விமல பக்தியாய்
விசுவசிக்கின்றேன்
இவ ரிஸ்ப்ரீத்துசாந்
தெனும் பரமனுல்
அவனி சொல் கர்ப்ப
மா வுற்பவித் தர்ச்ய

3 சிஷ்ட கன்னிமரி
திரு வுதரத்தில்
மட்டில் நவமதா
மனுவாய்ப் பிறந்தே
பன்னும் பிலாத்தன் கீழ்ப்
பாடுபட்டே இவண்
மன்னுஞ் சிலுவையில்
மரித் தடக்குண்டார்.

4 இரும் பாதாளமே
இறங்கி மூன்ரும் நாள்
மரித்தோரில் நின்றே
உயிர்த் தெழுந்தனர்
சுரலோக மேறிச்
சொலுஞ் சர்வ வல்ல
பரம பிதா வலப்
பாலி லிருக்கின்ருர்.

5 அவிடத்தில் நின்றே
அமரர் சூழவே
இவுலக முடி
வினிலே சீவியர்
செத்தவரை நடுத்
தீர்க்க வருகுவார்,
அத்தனு மிஸ்பிரீத்
தமல தேவனே.

6 மிகவே பக்தியாய்
விசுவசிக்கின்றேன்
அகிலத்தின் பொது
வாக விருக்கின்ற
தரும மார் திருச்
சபையையுஞ் சிஷ்டர்
பெருஞ் சமுதீத
ப்ரயோசனத்தையும்.

7 புன்மைப்பவ வினைப்
பொறுத்தல் தன்னையும்,
உண்மை மாமிசத்தின்
உத்தானத்தையுமே,
சததமாகிய
தண் சீவியத்தையும்
சிதமாக விஸ்வ
சிக்கின்றனன். ஆமென்.

ஆகமனகாலத்தில் பாடத்தகும் பாடல்.

6. *Air :*—**Venez, Divin Messie.**

Vade Mecum, 3rd Vol : No. 34.

பல்லவி.

தேவா எங்கோவே வாரீர்
ஜெக விரட்சக ருமை
ஆவாய் எதிர் பார்க்கின்ரும்
அநாதியே வாரீர்.

சரணங்கள்.

1 பூவில் ஏதேன் காவில் அதாம்
ஏவை புரிபவ வினை
நீவி யெம்மைப் புரந்திட. (தேவா)

2 ஆதோனுயி நாதா மகா
காதலாய்க் காத்திருக்கும் நும்
தாதரெமைச் சந்தித்திட (தேவா)

3 மன்றீயில் வீழ்ந்தென்றுங் கவல்
கின்ற பைசாசங் கையினில்
நின்றே நீயேமை மீட்டிட. (தேவா)

4 ஏன விருளே நூங்கிய
ஈன வுலக மெங்கணும்
ஞான வொளி பரப்பவே. (தேவா)

5 பன்னு நும் ப்ரசன்னந் தர
இன்னமு மேனோ தாமதம்
உன்ன மெம் மீதிரங்கியே. (தேவா)

6 உம்மா லன்றித் தின்மை மல்கும்
இம் மாநில மீடேறுமோ
எம்மானுவே லெனுந் துய்ய. (தேவா)

கர்த்தர் பிறப்பின் பேரில்.

7. *Air :*—**Angels we have heard.**

Hymn Book By Christian Bros. No. 9.

Les anges Dans Nos. Compagrnes.

Vade Mecum 3rd Vol : No. 36.

சரணங்கள்.

1 ஆ ஈடேதென்னமா நவம்
ஆர்கலிசூழ் பூவினில்
தீயரான எம்பவம்
தீர்க்க அல்லிராவினில்

பல்லவி.

வானிறை மானிடனுனரே. *bis.*

2 சீர் வெல்லைப் பொகுட்டினில்
தீதில் நித்ய கன்னிகை
ஏர் மருவ கட்டினில்
ஈறில்லாத மாதகை (வானிறை)

3 சூழ்ந்தமரர் பாடவே
சோகின் வல்லபங் கெட
வேங் தெரோது வாடவே
மெய்மறை துலங்கிட. (வானிறை)

4 ஆயரடி பேணவே
அற்புத பங் தோன்றிட
ராயர் மூவர் காணவே
எங்கும் நல மூன்றிட. (வானிறை)

8. *Air* :—**Berger, berger, vois tu la bas ?**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி

வாரும் வாரும் வணங்குவோம் வணங்குவோம்
வானோர் போற்றும் வல்லப தேவ மைந்தனை
மனுகுலம் புரக்கவே
மன்னும் வெல்லை யென்னு மெழில்
மலையிலோர் குகையினில்
மாசற்ற கன்யாஸ்த்ரி யிடம்
மையா ரிராவிலே யவர்
மானிடனாகவே வந்தார்.

சரணங்கள்

1 பாருமுயர் வானுலகும்
பன்னருஞ் சர்வ பொருளும்
ஒருரையால் ஓர் நொடியில்
உண்டு பண்ணி யாண்டருளும்
சீரற்புத பராபரன் சூழ்ந்தே
ஜெகத்தினர்க்காத் தாதை முன் நேர்ந்தே
ஆரிற் பிறந்தார் யாவருஞ் சேர்ந்தே
||: அவரன்பை யோர்ந்து களிகூர்ந்தே :|| (வாரு)

2 நாடுமின்றி வீடுமின்றி
நாம மற்றூர் போற் புவியில்
மாடுகளுண்ணும் பசிய
வைக்கோலின் மீதோர் கெபியில்
ஈடில் பரனுயர் பரலோகத்
தினை யகன்றே பாவிகட்காகப்
பாடுற்றிடக் கன்னித்தாயின் ஏக
||: பாலகனா வந்தார் ஆவலாக :|| வாரு)

3 அல்லிரவில் புல்லணை மேல்
ஆடை யில்லாதே கூடிரால்
சொல்லரிய வல்ல பரன்
சோர்ந் தழுகின்ற ராதலால்
கல்லா மனத்தாராற் செய்தீதாரும்
கன்ம வினையங்களையே யோரும்
பொல்லாதாராம் நம்மீதன்பு கூரும்
||: புனித பாலகன் முன் எல்லாரும் :|| (வாரும்)

---

9. *Air :*—**The end of my creation.**

Crown of Jesus Music Book. No.

1 ஆதி தேவ தேவனே!
பூதலத்தை மீட்டிடப்
பாதிராவிற் சாரலிற்
||: பாலனு வுதித்தனர் :||

2 எவை செய்த மாவினை
நீவ வேகனே கொடும்
பாவிகளெம் ரூபமாப்
||: பூவினிற் பிறந்தனர் :||

3 சர்வ லோக நாதனே!
சாற்றருந் தரித்ரராய்ப்
பர்வதத்தின் மாடுகள்
||: பந்தியிற் பிறந்தனர் :||

4 பேயினங் கலங்கவே
ஆயர்கள் வணங்கவே
தூய தேவ ஞோர் கன்னித்
||: தாயிடம் பிறந்தனர் :||

5 வானிலங்கும் வானவர்
மங்களங்கள் பாடவே
கோனெரோது வாடவே
|| : கோன்கள் கோன் பிறந்தனர் : ||

---

10. *Air* :—**Volez, volez Anges de la Priere.**
Vade Mecum, 3rd Vol : No. 177.

பல்லவி.

ஆராரோ ஆரிரரோ பாலனே
ஆராரோ தேவ பாலனே
ஆராரோ ஆரிரரோ ஈறில்
ஆதி தேவ திருப்பாலனே. *bis*

சரணங்கள்.

1 சூரார் நரர் உருவங்கொண்டு
தொல்லுகை நீர் மீட்கவே
காரார் இரவினில் வந்தீதோ
கர்த்தனே அயர்ந்தழுகின்றீர். (ஆராரோ)

2 சர்வ வல்லப தேவன் நீரோ
தங்குதற்கோர் வீடின்றியே
பர்வதத்தின் மாடாடுகள் சேர்
பந்தியிற் பிறந்தழுகின்றீர். (ஆராரோ)

3 வீசும் பனிக்காற்றால் நும் திவ்ய
மென் சரீரம் நடுங்கியே
தூசின்றி வைக்கோல் மீது தேவே
துன்பமுற் றயர்ந்தழுகின்றீர். (ஆராரோ)

4 மாடம் உமக்கொன் று பஞ்சமோ
வைக்கோல் நீர் தூங்கு மஞ்சமோ
ஈடில் பரனே எங்கட்காக
ஏங்கி நீர் அயர்ந்தழுகின்றீர். (ஆராரோ)

---

11. *Air* :—"**Arm for deadly fight**"

Crown of Jesus Music Book. No. 18.

பல்லவி.

வாரும் போற்றுவோம்
வாரும் போற்றுவோம்
வானுட்டிறையவன் பிறந்தார்
வாரும் போற்றுவோம்
வாரும் போற்றுவோம்
மண்ணோர் நம் ரட்சகர் பிறந்தார்.—*bis.*

சரணங்கள்.

1 பாரும் வானும் திரை பரந்த
பௌவமு மற்றனைத்துந் தந்த
ஏரும்பர் கோன் நம்பாவப் பந்த
மீர்த் தாதரித்திடப் பிறந்தார். (வாரும்)

2 தீதார் மனுக்குலத்தின் பாவத்
தீமை யதனை முற்று நீவ
மாதாமரி வயிற்றிற் றேவ
மைந்தன் நம் ரூபமாப் பிறந்தார். (வாரும்)

3. வானோர் குழாஞ் சங்கீதம் பாட
மன்னன் ஏரோதனுள்ளம் வாடக்
கானார் கோபாலர்கள் கொண்டாடக்
கர்த்தன் பெத்லேகேமிற் பிறந்தார். (வாரும்)

4 ஆதி பிதாக்கள் சிறை நீக்க
ஐயன்பேய் ராஜ்யபாரம் போக்க
மாதுன் பாழ்ந்தே நமைவான் சேர்க்க
மாட்டின் கொட்டாயினிற் பிறந்தார். (வா)

12. *Air* :—**Yes ! Heaven is the Prize.**

Hymn Book By Christian Bros. No. 129.

சரணங்கள்

1 பரம தேவன் நம்
பவந் தவிர்த்திட
தரையிலோர் குகை
தனிற் பிறந்தனர்.

பல்லவி

வாரீர் வாரீர் வணங்குவோம் வாரீர்
வாரீர் வாரீர் வணங்குவோம் வாரீர்.

2 பருவதந் தனில்
மிருகப் பந்தியில்
நரர் உருவமா
நாதன் பிறந்தனர். (வாரீர்)

3 மகா பரிசுத்த
மரியனையின் பால்
பகாப் பொருள் தேவ
பாலன் பிறந்தனர். (வாரீர்)

4 ஏவை பவம் கெட
எமைப் புரந்திட
மாவற்புத நாதன்
பூவிற் பிறந்தனர். (வாரீர்)

---

13. *Air* :—**" O Mary Mother Mary."**

Hymn Book by Christian Bros. No. 60.

சரணங்கள்

ஓ ! நிமல நாதனே
ஓ ! தேவ பாலனே
மானிட வடிவமா
வந்திங் கழுகின்றீர்.

பல்லவி

ஆரீரரோ பாலனே
ஆராரோ பாலனே
ஆரீரரோ பாலனே
ஆராரோ பாலனே.

1 பார் மனுவா மெங்கள் மேற்
பட்சம் பெருகியே
ஓர் சிறிய பாலனு
வுதித் தழுகின்றீர். (ஆரீரரோ)

2 தேவுலக ராயன் நீர்
தீமை புரிந்த மா
பாவிக ளெம்மா லுளம்
பதைத் தழுகின்றீர். (ஆரீரரோ)

3 மக்களெம்மை மீட்கவே
மாட்டின் கொட்டாயினில்
வைக்கோலின் மீதே யுளம்
வாடி யழுகின்றீர். (ஆரீரரோ)

4 ஏதமில்லா நாதன் நீர்
எழின் மலை மிசை
கூடிரினுலே யனுர்
கொண்டிங் கழுகின்றீர். (ஆரீரரோ)

5 வாடை பனி கொண்டுடல்
வருந்தி மூடவோர்
ஆடையே யில்லாம லெம்
ஐயே அழுகின்றீர். (ஆரீரரோ)

14. *Air* :—" **De concert avec les anges.**"

Vade Mecum, 3rd Vol : No. 108.

1 தேவதேவன் தேவதேவன்
தேவ பாலன் பிறந்தார்
காவிலாதாம் எவை செய்த
மாவினையை நீவவே. (தேவதேவன்)

2 பேயடியாரா யிருந்த
தீய வெம்மை மீட்கவே
மீயுலக நாயக னெம்
சாயலாகப் பிறந்தார். (தேவதேவன்)

3 பெத்லேகமூ ரத்திரியிற்
கத்தப மாடாடுகள்
மத்ய மத்தில் நித்ய கன்னி
புத்ரனுகப் பிறந்தார். (தேவதேவன்)

4 தேவ தூதர் மூவிறைவர்
சோபனங்கள் கூறவே
பாவிகளுக்கா வமலன்
பூவுலகிற் பிறந்தார். (தேவதேவன்)

5 எல்லை யில்லா வல்லமை சேர்
சொல்லரு மநாதியே
அல்லிராவில் வெல்லை யேந்தற்
புல்லணையிற் பிறந்தார். (தேவதேவன்)

---

15. *Air* :—**A Notre-Dame De Lourdes.**

Vade Mecum, 3rd Vol : No. 158.

சரணங்கள்

1 ஒ! தேவ குழந்தாய்
உள்ளங் கசிந்தெம்
தீதோர்ந் தழுகின்றாய்
தேவா ஆராரோ.

பல்லவி

ஆராரோ ஆராரோ ஆராரோ பாலனே *bis.*

2 எம்மேலுள்ள வன்பால்
எம் ரூபங் கொண்டே
ஜென்மித் தழுகின்றாய்
தேவா ஆராரோ. (ஆராரோ)

3 என் தீமையைப் போக்க
இல்லாவாளனு
நைந்திங் கழுகின்றாய்
நாதா ஆராரோ (ஆராரோ)

4 மாடடை தொழுவில்
வைக்கோ லணையில்
வாடி யழுகின்றாய்
வல்லோய் ஆராரோ. (ஆராரோ)

5 மோதும் பனிக்காற்றில்
மூடத் தூசின்றி
நீ தோய்ந்தழுகின்றாய்
நித்தன் ஆராரோ. (ஆராரோ)

6 இன்பார்ந்த விண்ணுட்டில்
யாமுய்யச் செயத்
துன்பாழுந் தழுகின்றாய்
தூயா ஆராரோ. (ஆராரோ)

16. *Air* :—**O ! Holy Night.**

De La Salle Hymnal, No. 8.

சரணங்கள்.

1 மூவாமுதல்வன் பூவுலகை மீட்பத்
தேவ கன்னிபாற் சிறுபாலனுக்
காவார் பெத்லேமில் ஆவிடையிற் பாதி
ராவிற் பிறந்தாரிதோ போற்றுவோம்
எல்லாரும் வாரீர் போற்றுவோம் வேதாவை
எல்லாரும் வாரீர் போற்றுவோம் அன்பாய்.

பல்லவி.

தேவாதி சேய் பூவிற் பிறந்தாரீதோ
தீயார் நம்மை வான் வீட்டிற் சேர்க்கவே (*bis*,)

2 ஏதேனி லேவை ஆதஞ் செய்த பாவத்
தீதோர்வவே ஓதரு மன்பினுல்
மாதீன ளுத்தம் வல்லமை மறைத்தே
நாதன் பிறந்தாரிதோ போற்றுவோம்
எல்லாரும் வாரீர் போற்றுவோம் வேதாவை
எல்லாரும் வாரீர் போற்றுவோம் அன்பாய்.
(தேவாதி)

3 தூய விண்ணேர்கள் சூழ்ந்து கீதம் பாட
ஆயர் தொழப் பேய் நரகில் விழத்
தீய வெரோது தேம்ப வானுலக
ராயன் பிறந்தாரிதோ போற்றுவோம்
எல்லாரும் வாரீர் போற்றுவோம் வேதாவை
எல்லாரும் வாரீர் போற்றுவோம் அன்பாய்.
(தேவாதி)

17. *Air* :—**Laus Deo semper.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி.

ஆதி தேவ குழந்தாய்
ஆராரோ ஆராரோ
மாதுன் பாழ்ந் தேங்குகின்ருய்
வல்லோனே ஆராரோ.

சரணங்கள்.

1 ஏதேனிலன் றேவை செய்தீமை போக்கி
ஈறில் பிதாவின் முனிவாற்றவே
தீதாருலகில் வான்வழி யுண்டாக்கிச்
சிதையுரு தெமை யீடேற்றவே
நாதா நீயே வானுட்டினின் றிறங்கி
நரவடி வெடுத்தருள் பொங்கி
மாதா மரியின் பாற் பிறந்தீங்கிதோ
வருந்தி யேங்குகின்ருய் ஆராரோ. } *bis.*

2 வானோர்கள் கீதம்பாடப் பேய்கள் நாண
மன்னனெரோ தின்னலால் மான்றிடக்
கானுயர்கள் விரைந்து வந்து காணக்
கார்வானிலோர்நவ பந் தோன்றிட
ஈரைரெமை நித்யாக்கினையில் நின்றே
ரட்சை செய்து புரந்திட வின்றே
மாநீதி தேவனீ பிறந்தீங்கிதோ
வருந்தி யேங்குகின்ருய் ஆராரோ } *bis.*

3 வாகார் பெத்லேகேம் வெல்லைக்குன்றின் மாடு
வசிக்கின்ற கீழ்மைசேர் கோட்டமோ
ஏகாவிண்ணுட் டிறைவ வுன்றன் வீடு
எமக்குத் தாழ்ச்சி காட்டு நாட்டமோ

ஆகாதாரெம் பொருட்டிகன் மறைத்தே
அற்ருன்போற் சோர்ந்து பற்றெம்மேல்
[வைத்தே
மாகாருண்யனே நீ பிறந்தீங்கிதோ
வருந்தி யேங்குகின்ருய் ஆராரோ. *bis.*

கர்த்தருடைய திருப்பாடுகளின் பேரில்

18. *Air :*—**France Debout !**

Vade mecum, 3rd vol : No. 62.

பல்லவி

தேவாதி தேவே லோகாதி கர்த்தாவே
பாவாக்கிரமர் எங்கள் பாவ மீட்புக்காத்
தூயே தாவில் துமையே பலியாய்
ஈய வுவந்தீர் நீசராம் எந்தம்
பாவம் மன்னிப்பீர் ஒ! ஸ்நேக தேவனே.

சரணங்கள்

1 ஜெத்சேமனி யெனுஞ் சீர்காவில் நீர் சென்றே
ரத்த வியர்வையைச் சிந்தித் துயர் கொண்டீர்
தீதன் யூதாசெனும் சீடனுல் நீர் பொல்லாக்
காதக யூதர் கை காட்டிக் கொடுக்கப்பட்டீர்.
(தேவாதி)

2 அன்னுஸ் கைப்பாசெனும் ஆசாரியர் தமால்
இன்னுவநேக மீராவெல்லாம் நீர்பட்டீர்
சேரார்களாற றூணிற் சேர்க்கப்பட்டே
[சாட்டை
வாராலேயாயிரஞ் சில்வாண வடிபட்டீர். (தே)

3 சர்வாங்க காயமாய்ச் சாற்றுஞ சபையின்முன்
நிர்வஸ்திராங்கராய் நிந்தை மிகவுற்றீர்
மூங்கிற்றடி செங்கோல் முட்கள் கிரீடமாயத்
தாங்கி யாகடியம் தீயராற் செயப்பட்டீர். (தே

4 ஈதோ மனிதனென் றீனப் பிலாத்தனுல்
தீதோர்ந்த யூதர்க்குத் தேவே காட்டப்பட்டீர்
சூர்க்காயத்தே நின்று சோரியாறு யோடச்
சீர்ச் சிலுவைதனைச் சுமந்தே தரை வீழ்ந்தீர்.
(தேவாதி)

5 காயங்களோ டொட்டிக் காய்ந்த துகிலை மா
தீயருரிந்ததாற் றேம்பித் துயர் கொண்டீர்
செய்ய சிலுவையிற் சேர்த்தே யறைந்தஞ்சா
வெய்யவர்களாற் கல்வாரியில் நாட்டப்பட்டீர்.
(தேவாதி)

6 தொல்லாருலகி லெம் தோஷவினை போக்க
எல்லா முகிந்தன வென்றே யுயிர்விட்டீர்
வேலால் விலாவையோர் வெய்யவனேற்றசெம்
பாலு நீருஞ் சிந்திப் பாவிகளெமை மீட்டீர்.
(தேவாதி)

---

19. *Air* :—**Vive Jesus ! Vive Sa Croix !**

Vade mecum, 3rd vol : No. 51.

சரணங்கள்

1 மாசேது மிலாரே பொல்லா
வஞ்சக நெஞ்ச யூதர்க்குக்
காசாரும் யூதாசா லிவண்
காட்டிக் கொடுக்கப்பட்டீரே.

பல்லவி

ஓ! சேசுவே எம்நாதனே
ஓ! தேவ தேவசுதனே
நீசரெங்கட்கா நீர்மகா
நிந்தை வாதைகட் குள்ளானீர்.

2 பொல்லாதவராம் எம்பவம்
போக்கியே எம்மை மீட்டிட
கன்மன மா யூதர்கள் தங்
கையிற் பிடிகொடுத்தீரே. (ஓ! சேசுவே)

3 பாரும் ஈனர்களாற் கள்வன்
பாவனேயே போன்றவராய்
கூறும் ப்லாத்தென்பான் முனமாய்க்
கொண்டு நிறுத்தப்பட்டீரே. (ஓ! சேசுவே)

4 தாட்சண்யமே யிலா மனத்
தாராம் யூதர்கள் தமால் நீர்
கற்றூணில் மானபங்கமாய்க்
கண்டுண் டடிக்கப்பட்டீரே. (ஓ! சேசுவே)

---

20. *Air :—* **"To Jesus Heart all burning."**

Hymn book by Christian Bros. No. 45.

சரணங்கள்.

1 தேவாதி தேவதேவே
தீயாரெம்மை மீட்ப
ஜீவ பலியானீர் நும்
ஸ்நேகம் யாமென் சொல்வோம்.

பல்லவி.

ஓ! சேசுக்கிறீஸ்துவே
ஓ! தேவ மைந்தனே
நீசரெம்மேல் நீர் வைத்த
நேசம் யாமென் சொல்வோம். } *bis.*

2 ஈடில் பரனே பூவில்
எங்கட்கா நீர் பட்ட
பாடுகள் செய் நலன்கள்
பன்ன வெம்மாலாமோ. [ஓ! சேசு

3 பொல்லாதவரா மெங்கள்
புன்மைப் பவம் போக்க
வெல்லை மலேயில் வந்தீர்
வெய்ய துயருற்றீர். [ஓ! சேசு

4 வேதாசார ப்ரகாரம்
வேலேசூழ் பூமீதே
நாதா வ்ருத்தசேத
னத்தால் மிக நொந்தீர். [ஓ! சேசு

5 மண்ணில் முப்பான் மூவாண்டாய்
வானின் வழிகாட்டி
எண்ணில்லாத நவங்கள்
எந்தையே நீர் செய்தீர், [ஓ! சேசு

6 சென்னைக் கொலு வென் றோதும்
சீர் சாலே தன்னில் நீர்
உன்னத சத்ப்ரசாதம்
உண்டு பண்ணித் தந்தீர். [ஓ! சேசு

சுவாமியுடைய திரு மரணத்தின் பேரில்

21. **பிரஞ்ச் இராகம்.**

பல்லவி

ஐயையோ வுயிர் விட்டார்
ஆண்டவ ருயிர் விட்டார்
செய்ய சிலுவை மிசை
சேசுபர னுயிர் விட்டார்

வெய்யவராம் யூதரால்
வேதனை அடைந்திதோ
வைய மனுவோர்கட்கா
வல்லபர னுயிர் விட்டார்.

சரணங்கள்

1 ஓ! உன்னத சர்வேசனே
ஓ! ஸ்நேக தேவனே
பாவிகட்கா நீர் மகா
பாடுகள் பட்டுயிர்விட்டீர். } *bis.*

2 மாற்றலரான யூதர்கள்
மன்னிடப்பாற் கள்ளன்
தூற்றும் நிந்தை சகித்தெம்
தூயகோனே யுயிர்விட்டீர். } *bis.*

3 ஏகபிதாவின் மைந்தன் நீர்
ஈனர் கூடிச் செய்த
ஆகடியஞ் சகித்தே
அன்பெம்மேற்கூர்ந் துயிர்விட்டீர். } *bis.*

4 தீதறியாமற் செய்கின்றார்
தேவை பொறு மென்றே
வாதை யுமக்குச் செய்ப
வர்க்கா விரந் துயிர்விட்டீர். } *bis.*

5 நும் வலப்பாற் கள்ளனை நீர்
நோக்கி மோக்ஷத்தின் று
நம்மோ டிருப்பா யென்றே
நல்வாக்களித் துயிர்விட்டீர். } *bis.*

6 ஏதமில் தாய்க்கு யோவானை
ஈதோ வுன் மைந்தனென்
றாதரவாய்க் காண்பித் தெம்
மையனே நீ ருயிர்விட்டீர். } *bis.*

7 சீடர்க்குமே யவ்வாறுந்தம்
திவ்ய தாயைத் தாயாய்
ஈடிலெம் பரனே நீர்
ஈந்ரிய வுயிர்விட்டீர். } *bis.*

8 சோரியாறுய்ச் சொரிந்ததாற்
சோர்வுற்றுத் தாகமென்
றேருறும் வாயான் மொழிந்
தேகனே நீ ருயிர்விட்டீர். } *bis.*

9 வாகாரும் சீர்ச் சிலுவையில்
மாறுத் துயருற்றென்
ஏகா வென்னைக் கைவிட்ட
தேதென்றுரைத் துயிர்விட்டீர். } *bis.*

10 சாற்று முச்சியுருமத்தோர்
சாம மட்டும் துயர்
ஏற்றிரு கள்வர் நடு
வே நாதன் நீ ருயிர்விட்டீர். } *bis.*

11 பொல்லாதாரான எம்பவம்
போக்கி எம்மை மீட்ப
எல்லா முடிந்தனவென்
றின்பா யுரைத் துயிர்விட்டீர். } *bis.*

12 தாமாவிருக்கு நித்யராம்
தாதையைக் கூவியென்
ஆன்மாவைக் கைக்கொள்ளு மென்
றையே யுரைத் துயிர்விட்டீர். } *bis.*

மனஸ்தாபம்

22. *Air :*—**Au sang qu' un Dieu va repandre.**
Vade mecum, 3rd vol : No. 50.

சரணங்கள்

1 ஓ! தயையுள்ள கர்த்தாவே
உம்மை நோகச்செய் மகா
பாதக ரெமை யருட் கண்
பார்த்தெங்கள் பாவம் பொறும்.

பல்லவி

சேசுவே எந்தேவே எம்மேல்
தேவரீர் உமக்குள்ள
நேசத்தை நீர் நோக்கி யின்றே
நீசரெம்மை மன்னியும்.

2 ஊதாரி மைந்தராய் எந்தை
உம்மையா மகன்று மா
தீதுகட்குள்ளாகி மீண்டும்
தேவே யும்மை யண்டினோம். (சேசுவே)

3 எந்தை யென்றுமை யழைக்க
யாம பாத்ரராய் மகா
நிந்தையை யுமக்கே நாளும்
நீசர் யாம் வருவித்தோம். (சேசுவே)

4 எம்மை யன்பாய் நேசித்தென்றும்
எண்ணில் நன்மை செய்கின்ற
நும்மிதயந் தன்னை நாளும்
நோகச் செய்தோம் ஏகனே. (சேசுவே)

5 நீரெம்மை யளவிலாமல்
நேசிக்கின்றீர் யாமும்மைப்
பாரின்மீ தந்தோ பகைத்தோம்
பாவத் தீமை பண்ணியே. (சேசுவே)

6 நீசரெங்கட்கா வுயிரை
நீர் கொடுத்தீர் யாமிவண்
மாசிலாத தேவரீர்க்கே
மாதுரோகஞ் செய்தனம். (சேசுவே)

7 தேவனேயா மின்றளவும்
செய் பவங்கட்கா மனஸ்
தாபத்தா லுளம் நொந்தே நும்
சன்னிதியில் நிற்கின்றோம். (சேசுவே)

8 செய்த பாதகங்கட்காகச்
சிந்தை மிக நொந்தழும்
வெய்ய பாவவாளரா மெம்
மீதிரங்கும் நாதனே. (சேசுவே)

9 நாதனே இனிமேல் யாமோர்
நாளுந் தீமையே செய்யோம்
ஏதமில்லானே எம்பாவம்
யாவையும் வெறுக்கின்றோம். (சேசுவே)

10 எங்கண்மே லுமக்குண்டான
வெண்ணில் நீதிக் கோபத்தை
நுங் கை கால் விலாக் காயத்தை
நோக்கியே நீர் ஆற்றுவீர். (சேசுவே)

11 எங்கட்காக நீரடைந்த
வெண்ணில்லாத பாடுகள்
பங்க வவமானம் யாவும்
பார்த்தெம் மீதிரங்குவீர். (சேசுவே)

12 எம்மை மீட்க இவ்வுலகில்
ஈனப்பட்டடைந்த நும்
தம்மை யண்டும் பாவிகளைத்
தள்ளுவீரோ? இல்லையே. (சேசுவே.)

13 தேவனே நீர் பாவிகட்காச்
சிந்துதிரத்தின் பலன்
பூவிலெங்கட் கென்றும் வீணுப்
போக நீர் விடாதேயும். (சேசுவே.)

திவ்விய சற்பிரசாதத்தின் பேரில்.

23. *Air* :—**Contre Le Respect Humain.**

Vade mecum, 3rd Vol: No. 21.

சரணங்கள்.

1 வானோர் போசனமே பூவில்
மாம்சமாயின வார்த்தையே
ஈனோர்க்காப் பலியாயினீர்
ஏக தேவனே தோத்ரமே.

பல்லவி.

ஓயாத தோத்ரமே ஓ! தேவ சத்ப்ரசாதமே
ஓ! தயையின் ஊற்றே
தியாரெம் பாவநோய் நீக்கும்
ஜீவாமிர்தமே தோத்ரமே.

2 பாரில் நீரெங்கட்காப் பட்ட
பாடுகளை யாம் நினைவு
கூருதற்காப் பலியானீர்
கோதில் நாதனே தோத்ரமே. (ஓயாத)

3 அன்று சிலுவைமீதே நீர்
அன்பாற் செலுத்தும் பூசையை
இன்றும் பூவி லென்றென்றுமே
ஈய வுவந்தீர் தோத்ரமே. (ஓயாத)

4 லோகாந்த மட்டுமே யுட
லுஞ், செந்நீரும் நீரெங்கட்கே
ஆகாரமாகவே தந்தீர்
அன்பே ஸ்நேகமே தோத்ரமே. (ஓயாத)

5 என் மாம்ஸ மீதுண்பா னென்னில்
என்றும் வாழ்கின்ருன் ; வாழ்கின்றேன்.
அன்னுனில் யானுமே யென்றீர்
ஆதி தேவனே தோத்ரமே. (ஓயாத)

---

24. *Air* :— **1. " To Jesus Heart all burning "**
11. " Octave of the nativity "

1. Hymn book by christian Bros. No. 45.
11. " No. 84.

சரணங்கள்.

1 ஓ! சேசுவே எங்கோவே
உம்மை யுணவாய் நீர்
தாசரெமக் கீந்தீர் நுந்
தாட்கென்றுந் தோத்ரமே.

பல்லவி.

எந்நாளுமே நீர் அன்பால்
எம்மோடிருக்கின்ற
உன்னத நற்கருணைக்
கோயாத தோத்ரமே. } *bis.*

2 தீதார்ந்த வெங்கட்கா நும்
சீவன் நீர் தந்ததும்
போதாம லெம் ஆன்மாவின்
போசனமாப் பூவில். (எந்நாளுமே)

3 சேட்டு மந்தை விட்டேனத்
தீங்காற் சிதறுண்ட
ஆட்டின் மேய்ப்பரா யெம்மீ
தாவல் கொண்டே பூவில், (எந்நாளுமே)

4 விண்ணோர் விருந்தே பாவ
வீவு மருந்தே நும்
புண்ணீரினூற் றீயேமைப்
போஷித்திடப் பூவில். (எந்நாளுமே)

5 எந்தை யுமக் கீனோராம்
எம்மால் வருகின்ற
நிந்தையை நோக்கா தெம்மை
நீள் வான்றலஞ் சேர்ப்பா. (எந்நாளுமே)

6 தொல்லாருலகில் யாஞ்செய்
தோஷச் சுமை நீக்கி
நல்லார்களாகச் செய்ய
நாதா யெம் வேதாவே (எந்நாளுமே)

---

25. *Air* :— **I All for thee O ! Heart of Jesus.**
II Banner of the Sacred Heart.

Music for this canticle, can be had from Mr. Manual costa, Manapad.

சரணங்கள்.

1 ஓ ! சேசுவே என் தேவனே நீர்
உன்னத சத்ப்ரசாதத்தில்
மாசா துள்ளோராய் வீற்றிருந்தே
வாரும் நீர் நம்முன் என்கின்றீர்.

பல்லவி.

ஓ! சேசுவே எம் ஸ்நேக தேவே
ஓ! தேவுலகோர் அப்பமே
மாசிலரே நும் சந்நிதியில்
வந்தோம் எம்மை நீர் கைக்கொள்வீர்.—*bis.*

2 கன்மாத்துமாக்கள் யாம் திரும்பக்
காத்திருந்தீர் இற்றைமட்டும்
எம்மேல் நும் இதயத்துண்டான
ஈரத்தாலெங் தீங்கோராமல். (ஓ! சேசுவே எம்)

3 தீதேதுமில் நும் இதயத்தைச்
ஸ்நேகிப்பதற்கு மாறுக
மாதீங்காய் வ்ரோதித்தோம் ஆனாலும்
வாரும் தேற்றுவோம் என்கின்றீர். (ஓ! சேசுவே எம்)

4 பாசம் செய் தந்த்ரத்துக்குள்ளான
பாவிகள் யாம் நும் இதய
நேசத்தில் மூழ்க ஆசித்தே நீர்
நேரில் அன்போடழைக்கின்றீர். (ஓ! சேசுவே எம்)

---

26. *Air :*—**Reine des cieux.**
Vade mecum 3rd Vol. No. 117.

1 ஓயாத தோத்ரம் தோத்ரமே
ஓ! தேவ சத் ப்ரசாதமே
தீயாரெம் பாவநோய் நீக்கும்
ஜீவாமிர்தமே தோத்ரமே.

2 வானவர்கள் போசனமே
மாம்ஸமாயின வார்த்தையே
ஈனோர் கடக்காப் பலியான
ஏக தேவனே தோத்ரமே.

3 நிந்தை மானிடர்க்கா வானில்
நின்றிறங்கி வந்தே ரத்தஞ்
சிந்தாத பலியாயினீர்
ஸ்நேக தேவனே தோத்ரமே.

4 பாதகர் யாமே நாளுஞ் செய்
பாவத்தா லுண்டாகுந் தேவ
நீதிக் கோபத்தை யாற்றவே
நீர் பலியானீர் தோத்ரமே.

---

27. *Air* :—**O Jesus Jesus dearest lord.**
Hymn Book by christian Bros. No. 44.

1 ஓ! சேசுக்கிறீஸ்து நாதரே
மாசேதுமில்லா எம்
ராசாதி ராசனுன நீர்
நீசரெங்கட் கும்மைக்
காசாரம் ஆத்மத்தின் ஞான
போசனமாத் தந்தே
மாசிலரே நீர் காண்பிக்கும்
நேசம் யாம் என் சொல்வோம்.

2 வேதா வநாதி தேவனீர்
பாதக ரெங்கட்கா
தீதார் யூதரால் மாய்ந்ததும்
போதாதென்றோ சத்ப்ர

சாதத்தி லெழுந்து பூவின்
மீதே எமைத் தேற்ற
மாதாகங் கொண்டீர் நும் எண்ணில்
லாத வன்பென் சொல்வோம்.

3 தானான தேவே யாம் செயும்
நானாவிதத் தீங்கா
லேநோகச் செய்தனம் உம்மை
ஆனாலும் நீரெங்கள்
ஈனப்பாவம் நோக்காதே யாம்
வானாட்டுய வெங்கள்
ஞானேதனமானீர் உந்தம்
மாநேய மென்சொல்வோம்.

4 சீரார் கோவே நீர் பூவின்பக
காராழ்ந்த மைந்தரே
வாரீர் நும் பாவ நோயதின்
வேரானதைக் கிள்ளி
ஆரோக்கியந் தந்து தீமை
சாராது காப்போம் நீர்
வாரீரென் றழைக்கின்றீர் நும்
பேரார்வ மென் சொல்வோம்.

---

28. *Air* :—**All ye who seek a sure relief.**

Hymn Book by christian Bros. No. 43.

சரணங்கள்

1 ஓ! தேவ சத்ப்ரசாதமே
ஓ! தயையின் ஊற்றே
மாதேவே எம்மில் என்றும் நீர்
வாசஞ் செயலானீர்.

பல்லவி

ஓ ! சேசுக்கிறீஸ்துவே நமோ !
ஓ ! ஸ்நேக தேவனீர்
நீசர்களாம் எம்மேல் வைத்த
நேசமென் சொல்வோம் யாம்.

2 விண்ணோர் விருந்தே நீரெங்கள்
வெம்பவம் நோக்காமல்
மண் மீதெஞ்ஞான்றும் அன்பினால்
வாசஞ் செயலானீர். (ஓ ! சேசு)

3 வானாட் டிறைவனான நீர்
வன் சிறைப்பட்டோர் போல்
ஈனோர் செய்த பீடங்கண்மேல்
என்றும் வசிக்கின்றீர். (ஓ ! சேசு)

4 தாதரா மெங்கட்கா வுயிர்
தந்ததல்லா தெங்கட்
கோது முணவாய் நாதனே
உம்மை நீரே தந்தீர். (ஓ ! சேசு)

5 தற்பரனு மும்மைப் பெறத்
தைரியம் யாம் கொள்ள
அப்பத்தில் நீர் மறைந் தெமை
அன்போடழைக்கின்றீர் (ஓ ! சேசு)

6 தீதெல்லாம் போக்கி எம்மை வான்
சேர்க்க வுமக்குள்ள
காதலினு லோயா திவண்
காத்திருக்கின்றீர் நீர். (ஓ ! சேசு)

29. *Air :*—"**Hail ! Thou living Bread.**"

Crown of Jesus music Book. No. 178. (ii)

1 அற்புத தேவ பரம
அபிரகசியமாம்
சத்ப்ரசாதத்திற் கே! ஒயாத்
தோத்ரஞ் சதாகாலமுமே. (அற்புத)

2 அகிலம் வானம் படைத்தோன்
அப்ப மொன்றி லன்பினுல்
மிகவே தாழ்ச்சியா லென்றும்
வீற்றிருக்கும் விமல. (அற்புத)

3 மண்ணுலகின் மீட்பினுக்கா
வானினின் றிறங்கியே
எண்ணரும் பாட்டின் நிர்ப்பந்தம்
ஏற்றுயிர்ப் பலியான. (அற்புத)

4 பூமியின் மனுகுலங்கள்
புரி பாவத்துக்காகத்
தாமப் பிணையாய்ச் சிலுவை
தன்னிற் பலியாகிய. (அற்புத)

5 கர்த்தன் சிலுவையிற் சிந்தும்
கவின் செந்நீர்ப் பலியே
நித்யமும் பூசைப்பலியாய்
நின்றிலங்கும் நிமல. (அற்புத)

6 தம்முயிரைத் தந்த நாதன்
தால மீதெஞ்ஞான்றுமே
எம்மிலன்பினுற் றுணையா
யிருப்ப வமைத்திடும். (அற்புத)

7 அமலன் நமக்கா வுயிர்
அளித்தது மலாதே
த்மையும் ஞான விருந்தாய்த்
தரு தயைப்ரசாத. (அற்புத)
8 ஆரில் வன்பற்றே இளைத்தோர்
ஆறுதலடைந்திட
வாரும் நம்மிடத்தி லென்று
வரவழைக்கும் திவ்ய. (அற்புத)
9 பாவிகள் மனந்திரும்பப்
பார்த் தரவணைப்ப மா
ஆவலொடு காத்திருக்கும்
அதிகோன்னதமான. (அற்புத)
10 பாவப் பிணியால் மெலிந்து
பலவீன முள்ளோர்க்கு
மேவும் ஞானத் திடனீயும்
விமல மருந்தான. (அற்புத)
11 புன்மைப் பவத்தில் வெறுப்பும்
புண்ணியத்தி னிலையும்
நன்மைகள் யாவு மளிக்கும்
நற்கருணை யென்னுமா. (அற்புத)
12 இத்தகை நலன்கள் பெறும்
ஈன நரரியாமே
நித்தமும் புரி பவத்தால்
நிகரில் துயர் கொள்ளும். (அற்புத)
13 எந்தை நன்றியை யறியா
வீனராம் எம்மா லிவண்
நிந்தை யவமானப்படும்
நிருமல ப்ரதாப (அற்புத)

30. *Air :*—**Jesus my Lord, my God, my all.**

I *Hymn Book by Christian Bros. No. 32.*

II *Crown of Jesus Music Book No. 170.*

சரணங்கள்.

1 சத்ப்ரசாதத்திலே யெழும்
சர்வேசனுன சேசுவே
அப்பமானதில் மறைந்த
ஆதி சுதனே தோத்ரமே.

பல்லவி.

ஓயாத தோத்ரம் தோத்ரமே
ஓ! ஸ்நேக தேவ தேவனே.

2 நீங்காத் துணையாய் எம்முடன்
நீர் அன்பினுல் வசித்தெம்மைத்
தீங்கில் நின்று தாங்குதற்கே
சிந்தை யுவந்தீர் ஆதலால். (ஓயாத)

3 வானோர் விருந்தே வேரீர்
வானுட்டினின் றிறங்கி மா
ஈனோ ரெமக்கே யுணவாய்
இங்குமைத் தந்தீர் ஆதலால். (ஓயாத)

4 திண்பற் றிளைத்தோர் யாவரும்
சீர் தேற்றரவைப் பெற நம்
அண்டையினில் வாருமென் றன்
பா யழைக்கின்றீர் ஆதலால். (ஓயாத)

---

31. *Air :*—**Jesus enfin va paraitre.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1 சேசுவே எம் ஸ்நேகமே நீர்
தேவநற்கருணையில்
நீசராம் எம் தோஷம் நீக்கிப்
போஷிக்க வென்றென்றுமே
ஆசை கொண்டெம் போசனமா
வாசமானீர் தோத்ரமே.

பல்லவி.

ஓ! தயையுள்ள கர்த்தாவே
உமது நேசத்தை மறந்து யாம் செய்யும்
பாவங்கள் நோக்காதெம்மில்
பரிவுடன் வாரீர் தோத்ரமே.

2 வானுலகி னின்றிறங்கி
வந்து சீவியந் தரும்
ஞானேதனமானேம் நம்மை
நாளு முண்ணும் உண்பீரேல்
ஈனமில்லாராவீ ரென்றே
ஏவுகின்றீர் தோத்ரமே. (ஓ! தயை)

3 பந்த பாவக் கேடடைந்து
நைந்திடாமல் நம்மையே
தந்தருள்வோம் போசனமா
மைந்தரே நீர் நாளும் நம்
பந்தி தன்னில் வாருமென்றே
பன்னுகின்றீர் தோத்ரமே. (ஓ! தயை)

4 சிவன் தந்து மீட்டோ மும்மைச்
சேதமா நீர் போவீரேல்
தேவன் நம் தாபஞ் சிறிதா
மோ வதனுல் நம்மையே
தாவி இன்றே வாருமென்றே
சாற்றுகின்றீர் தோத்ரமே. (ஓ! தயை)

5 தாயினும் பேரன்புடைய
தாதை யும்மைத் தீதுசேர்
மாய லோக வின்பம் நாடி
மைந்தர் யாம் பிரிந்து மா
தீயராகி மீண்டும் வந்தோம்
சேர்த்தணைப்பீர் தோத்ரமே. (ஓ! தயை)

6 புன்மை த்ரோகம் செய் தகன்று
போன மைந்தர் யாமிதோ
நன்மையுள்ள தாதை யும்மை
நாடி வந்தே யண்டினேம்
எம்மை க்ருபை கூர்ந்து நீர் கை
யேற்றருளும் தோத்ரமே. (ஓ! தயை)

7 ஈடில்லா நன் மேய்ப்பரே நீர்
தேடுமுந்த மந்தையின்
ஆடுகள்யா மீண்டும் வந்தோம்
அன்பிரக்கங் கூர்ந்து நும்
பாடுகளைப் பார்த் தெம்மீது
பட்சம் வையும் தோத்ரமே. (ஓ! தயை)

8 பாவிகள் யாம் செய் கொடிய
பாதகங்கள் யாவையும்
தேவ நும் கை கால் விலாவின்
திவ்ய காய மைந்தையும்
மாவருளால் நோக்கி இன்றே
மன்னித்தாளும் தோத்ரமே. (ஓ! தயை)

9 வாரு மெங்கள் நெஞ்சகத்தில்
மா வரப்ரசாதமே
தாருந் தீமை யாவும் போக்கும்
தாமதம் பண்ணுதேயும்
பாரும் வானும் ஒருரையாற்
பண்ணுந் தேவே தோத்ரமே. (ஓ! தயை)

10 உம்பர் கோனே எம் பிரானே
ஓ! எம் நேச சேசுவே
அன்பே எங்கள் கண்மணியே
ஆருயிரே நீயராம்
எம் பவங்கள் போக்க வாரும்
என்றென்றைக்குந் தோத்ரமே.(ஓ! தயை)

11 நெஞ்சகத்தில் எம் சர்வேசன்
நீரெழுந் தெம்மேலுள்ள
நஞ்சை நேரும் வஞ்சனை பொய்
வெஞ்சினம் ஆகாமியம்
புன் சுகத்தின் வாஞ்சை யாவும்
போக்கியாள்வீர் தோத்ரமே. (ஓ! தயை)

12 உம்முடைமையாக வெம்மை
ஒப்புவிக்கின்ருே மிவண்
எம்மரிய ஆத்துமங்கட்
கென்றும் வேண்டும் நன்மைகள்
தம்மை யீந்து காத்தருளும்
சந்ததமுந் தோத்ரமே. (ஓ! தயை)

32. *Air* :—**J'engageai Ma Promesse.**

Vade Mecum, 3rd Vol : No. 31.

சரணங்கள்

1 சேசுவே எங்கள் ஸ்நேக பிரானே
திவ்விய சற்பிரசாதத்தினில்
தாச ரெங்கட் குமை யுணவாகத்
தந்தீர் தோத்ரம் என்றுந் தோத்ரமே.

பல்லவி

தந்தீர் தோத்ரம் தந்தீர் தோத்ரம்
தந்தீர் தோத்ரம் என்றுந் தோத்ரமே. (*bis*)

2 தேவ நும் திருத் தேகஞ் செந்நீரைத்
தீயமான் மாபவ நோயினுற்
சாவடைந்து கெடா தௌஷதமாத்
தந்தீர் தோத்ரம் என்றுந் தோத்ரமே. (தந்தீர்)

3 நும் திரு ரத்தத்தால் மீட்படைந்த
நும் மகாரா மெமைத் தேற்றவே
தந்தை நீருமை மோக்ஷ விருந்தாய்த்
தந்தீர் தோத்ரம் என்றுந் தோத்ரமே. (தந்தீர்)

4 மண்ணையின் சமரில் வெல வெம்மில்
வன்மை பூப்ப ஞானகாரமாத்
தண்ணருள் கூர்ந்தெமக் கிவணும்மைத்
தந்தீர் தோத்ரம் என்றுந் தோத்ரமே. (தந்தீர்)

33. *Air* :—**Apres La Communion.**

Vade Mecum, 3rd Vol: No. 100.

1 வாரீர் எம்மில் எம் நேச சேசுவே நீர்
வாரீர் சற்ப்ரசாதத்தின் மார்க்கமாய்
வாரீர் ஐயே நும் மைந்தர்கள் யாம்
வாஞ்சை கொண்டோம் உமை யுட்கொள்ளவே
பாரும் விண்ணும் பரவு மெம் பிரானே
பரம போசனமே எம்மில் வாரீர்.

2 தீயேமை நீர் புரப்ப வாரின் மீதே
சீவன் கொடுத்ததும் போதாமல் நும்
காயம் செந்நீரை எம் ரக்ஷண்யக்
காதலினால் எமக் கெய்தும் பவ
நோயானதற் கௌஷதமாகத் தந்தீர்
நுமதன்பென் சொல்வோம் நீர் எம்மில் வாரீர்.

3 என் மாமிசம் உண்டென் செந்நீருட்
[கொள்வோன்
என்றென்றுஞ் சீவிப்பா னென்றீர் சர்வ
நன்மைக்கும் ஊற்றே நும்மேல் மகா
நாட்ட முற்றோம் எமிலுள்ள பவத்
தின்மை முற்று மொழித் தெமை யீடேற்றத்
திரு மரி புதல்வ எம்மில் வாரீர்.

4 வானீஸ்வரா வானாட்டி னின் றிறங்கும்
மன்னாவே பாவ வீவகற்றிடும்
ஞானமுதே நும் பந்திதனில்
நண்போடெமை யழைக்கின்றீர் மகா
ஈனோர்கள் யாம் புரிந்த தீமை நோற்றே
எமைக் கையேற் றெளிய ரெம்மில் வாரீர்.

5 தேவவுமை நோகச் செய் வெய்ய தீயேம்
செய்தீமை யோர்ந்து தாபத்தால் நொந்து
பாவ மினிமேல் ஓர்போதும் யாம்
பண்ணேமென்று ப்ரதிக்ஞை செய்துமைத்
தாவுகின்ரேம் எம் மீதிரங்கி யீறில்
சர்வேசனே தமிய ரெம்மில் வாரீர்.

6 பொன்ற முடல் பைசாசந் தாலஞ் செய்யும்
போரில் வெல்லத் திடந் தந்தே யிவண்
நன்ருன புண்ய மார்க்கந்தனில்
நாளுஞ் செலச் செய் தெந்தத் தீங்கிலும்
நின்றெங்களைக் காப்பாற்ற நித்யரான
நிமல தாபரனே எம்மில் வாரீர்.

---

34. *Air :*—**Serment De Marie.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1 ஓ! சேசுவே எம் ஸ்நேக தேவே
ஓ! தேவே சத்ப்ரசாதமே
ஓ! சீவிய மன்னவே எம்
உள்ளத்தே எழுந்தருளுவீர்.

பல்லவி.

பாவவாளர் ஆயினேமேனும்
தேவே யுன்னிருதயத்தே
வைத்தெமைக் காத்திடாயாகில்
சாவெய்வோ மாகையாலினிச்
சீவனெம்மை நீங்குமட்டும்
நீவாயெமை ஓ! நேச சேசுவே.

2 வாஞட்டி னின்றிவண் ணிறங்கி
வந்தான்மாவிற் குயிர் தரும்
ஞாஞமுதே எம் அன்பரே
நாதனே எழுந்தருளுவீர். (பாவவாளா)

3 சேஞடர் சூழ்ந்தென்றுமே போற்றும்
தேவ த்ரவ்யாநுமானமே
மாஞர் நித்ய பிதாவின் சீர்
மைந்தனே எழுந்தருளுவீர் (பாவவாளர்)

4 ரத்தஞ் சிந்தாதப் பலியே இன்
றெம் பாவங்களைப் போக்கியே
நித்ய கதிக்காளாக்கவே
நீ ரெம்மி லெழுந்தருளுவீர். (பாவவாளர்)

---

35. *Air :*—**Le ciel A Visite la Terre.**
Vade Mecum, 3rd Vol : No. 101.

பல்லவி.

ஒ ! சேசுக்கிறீஸ்துவே எக்கோவே
ஒ ! சத்ப்ரசாத் நாதரே
நீசர்களாம் எம் முணவானீர்
நேய தேவே வாரும் எமில். (*bis.*)

சரணங்கள்.

1 தேவநற்கருணைதனில் நும்
தேகஞ் செந்நீரை நீர் பவ
வீவுக் கௌஷதமாகத் தந்தீர்
விண்ணிறைவ வாரும் எமில். (ஒ ! சேசு)

2 பாவச் சார்புள்ளோரா மெமக் கெம்
பான்மை யுள்கிக் சுகானந்த
சீவி யாகாரமாகத் தந்தீர்
தேவ வுமை வாரும் எமில். (ஒ ! சேசு)

3 சீவிய ஜல மூறு மூற்றே
நீயே முமை யுட்கொள்ளவே
ஆவல் கொள்கின்ருேம் தாமதஞ் செய்
யாம லன்பாய் வாரும் எமில். (ஓ! சேசு)

4 மாசில்லாதவரே தயாள
வாரிதியே எம் மீட்பரே
ஓ! சர்வேசனே நீயரா மெம்
ஊனெழிப்ப வாரும் எமில். (ஓ! சேசு)

5 ஆத்மம் வீயச் செய்யும் வெம் பாவ
ஆசையை யீர்த்தெம்மாற் புண்யம்
பூத்திடச் செய்ய விண்ணுலகோர்
போசனமே வாரும் எமில். (ஓ! சேசு)

6 தீக்கூளியுல கெம் சரீரம்
செய்யும் வெம் போரில் யாம் வெல்ல
ஊக்கம் எங்களுக் கீந்தருள
ஓ! ஐயனே வாரும் எமில். (ஓ! சேசு)

---

36. *Air :*—**Cantique a St. Jean Berchmans.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1 ஓ! திவ்ய நாதனே வேதாவே
ஓ! தேவ சத்ப்ரசாதமே
நீதில் விண்ணோர் விருந்தே அன்பின்
தேவத்ரவ்யாநுமானமே
ஆதி தேவ சுதனே எங்கள்
ஆசைக்குரிய சேசுவே
மாதுன்பாழ்ந்தோம் எம்மீதிரங்கி
வாரீர் ஆண்டவரே எமில்.

பல்லவி.

வாரீர் எம்முள்ளத்தில் வாரீர் நீர்
மாசேதுமில் ரட்சகரே
வாரீர் தாமதம் பண்ணுதீதோ
வாரீர் தேவரீர் அன்பாய் வாரீர்.

2 பாரச்சுமை சுமக்கின்றோரே
பாங்காய் நீங்களனைவரும்
வாரு மென்னிற் றேற்றுவே னென்றீர்
வல்லபர னுமை விட்டுத்
தூர வகன் றின்றளவுஞ் செய்
தோஷங்கட்கா னொந்துருகிச்
சாருந் தீயேமை நீர் தள்ளாமல்
தண்ணன்புடன் வாரீர் எமில். (வாரீர்)

3 என்றன் சரீரமா மிஃதுண்பான்
என்றென் றுஞ் சீவிப்பானென்றீர்
வென்றி நின்மலனே தீயேமை
மீட்ட தயாள மீட்பரே
நன்றிகெட்டோர்களாய் நடந்தோம்
நாங்கள் செய் தீங்கனைத்தையும்
இன்றே மன்னித்துச் சத்ப்ரசாதத்
தின்மார்க்கமா வாரீர் எமில். (வாரீர்)

4 நீவிர் என் மாம்ஸ முண்டென்றன் செந்
நீரை மாந்திடிரேல் நித்ய
ஜீவனுங்கட்கிரா தென்றே நீர்
சீர்வாய் மலர்ந்தன் றுரைத்தீர்
மாவல்லோனே யுமை யுட்கொள்ள
மைந்தரான யாங்கள் மகா
ஆவல் கொண்டோம் அணைகடந்த
அன்பே ஐயே வாரீர் எமில். (வாரீர்)

37. *Air :*—**Le Voici L' agneau Si Doux.**

Vade mecum, 3rd Vol : No. 96.

பல்லவி.

ஓ! எம் நேச சேசுவே
உம்மையே யுட்கொள்ளத்
தாவும் எம்முள்ளத்தில் வே
தாவே வாரும் நீர்.

சரணங்கள்.

1 நாதனே நீர் திவ்ய
நற்கருணையில்
ஓதரிய வெம் மாத்
மோதனமானீர். (ஓ! எம் நேச)

2 பாரச் சும்மை தாங்கிப்
பாரிற் றேம்பினோர்
வாருந் தேற்றுவேனென்
மைந்தரே யென்றீர். (ஓ! எம் நேச)

3 மைந்தரே யென்றேகம்
வானுகாரமாத்
தந்தே னுண்பீர் பாவச்
சாவெய்தா தென்றீர். (ஓ! எம் நேச)

4 என் மாம்ஸமீ துண்பான்
என்னில் வாழ்கின்முன்
மன்னனுனில் யானும்
வாழ்கினறே னென்றீர், (ஓ! எம் நேச)

5 அன்பின் தேவத்ரவி
யாநுமானத்தில்
மன் பூவுள்ளளவும்
வைக வாஞ்சித்தீர். (ஓ! எம் நேச)

6 ராப்பக லோயா தெம்
ரக்ஷண்யத்தின் மேல்
தாற்பர்யங் கொண்டார்வத்
தால் வசிக்கின்றீர். (ஓ ! எம் நேச)

7 விஞ்சுமன் பெளியே
மீது வைத்திவண்
வன் சிறைப்பட்டோர் போல்
வாசஞ் செய்கின்றீர். (ஓ ! எம் நேச)

8 நன்மை யெங்கட்க் கீந்தே
ஞான்றுமாட் கொள்ளக்
கன்மிக ளெமக்காக்
காத்திருக்கின்றீர். (ஓ ! எம் நேச)

9 பாபச் சார்புள்ளோரெம்
பான்மை நீருள்கி
ஆபத்தில் யாம் நீங்க
ஆந்துணையானீர். (ஓ ! எம் நேச)

10 பாபோச்சாரணத்தால்
பாவ மன்னிப்பைத்
தாபத்தோ டடைந்தும்
சந்நிதி வந்தோம் (ஓ ! எம் நேச)

11 யாமினிச் செய்யோந் தீங்
கென்று ப்ரதிக்ஞை
நேமமாச் செய்கின்றோம்
நீரெம்மில் வாரும். (ஓ ! எம் நேச)

12 தாமதஞ் செய்யாதெந்
தம்மில் நீர் வந்தெம்
தீமை போக்கியே யா
சீர் வதித்திடும். (ஓ ! எம் நேச)

38. *Air* :—**Enfant Je t' aime.**

Music for this Canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

1 ஓ ! ஸ்நேக தேவே
உம்பரிறைவனே
நீசரெம் ஆத்ம
போசனமாக நும்
மாசில் தேகத்தையே
மாந்தும் படி தந்தீர்
ஈசனே நன்மைக் குன்றே
எம்மிலுமக்குள்ள
நேசமென் சொல்வோம்.

2 தாருலகோ ரெந்
தம் ரக்ஷண்யத்துக்கா
நீருயிர் தந்த
நீர்மையுமே யுந்தம்
பூரண க்ருபைக்குப்
போதா தென்றே வெம்மைச்
சாரும் பவ நோய்க் கும்மைத்
தந்தீர் மருந்தாய் நும்
பேரன்பென் சொல்வோம்.

3 மன்னு மென் மாம்ஸம்
மாந்தி யென் திவ்விய
செந்நீரைப் பானஞ்
செய்கின்றோனே யிவண்
கொன் நித்ய சீவியம்
கொண்டிருக்கின்றனன்
என்ன வுரைத்தீ ரன்பாய்
இன்னே யெம துள்ளந்
தன்னில் நீர் வாரும்.

4 வாரும் எங்கோவே
மாசற்ற சேசுவே
ஆருயிரே எம்
அன்பரே காருண்ய
ஊருணியே யிதோ
உம்மை யுட்கொள்ளவே
பேரவாக் கொள்கின்றனம
பீடை தீர்த்துத் தேற்ற
வாரும் எம்மில் நீர்.

---

39. *Air* :—**J'irai La Voir un Jour !**

Vade mecum, 3rd Vol : No. 120.

சரணங்கள்

1 எம் திவ்ய நாதனே
எம்மாத்ம போசனமாத்
தந்திருமை யுமக்கே
சதா துத்யம் துத்யம்.

பல்லவி

ஓ ! சேசுவே எங்கள்
உள்ளத்தில் வந்தெமை
ஆசீர்வதிப்பீரெம்
அன்பே எம் ஸ்நேகமே.

2 பரமாகாரமாப்
பாவ நோய்க் கௌஷதமாத்
தரைமிசை சத்ப்ரசா
தத்தை யுண்டாக்கினீரே. (ஓ ! சேசுவே)

3 எம் ரக்ஷண்யாவலால்
இருக்கின்றீரிங் கெம்மைச்
சம்ரக்ஷணை செய்ய நீர்
சத்ப்ரசாதத்தினில். (ஓ ! சேசுவே)

4 சத்ப்ரசாதத்தில் யாம்
தந்தை யுமை யுட்கொள்ள
ஒப்பில் விருப்புற் றெம்மை
உவந்தழைக்கின்றீர். (ஓ ! சேசுவே)

5 பயத்தால் யாமுமைப்
பருகப் பின்னிடாமல்
வயத்தை நீர் மறைத்தே
வதிந்தீர் அப்பத்தில். (ஓ ! சேசுவே)

6 எமை யகன்றிடா
தெம்மோ டொன்றிக்க வேண்டி
அமலனீவிர் ஞான்றும்
அமர்ந்தீர் அப்பத்தில். (ஓ ! சேசுவே)

7 வெய்யே ரெமக்குத் திவ்
விய சத்ப்ரசாதத்தில்
ஐயே நும் மட்டில்லாத
அன்பைக் காண்பிக்கின்றீர். (ஓ ! சேசுவே)

8 ஓ ! நேய தேவனே
உமக்கு த்ரோகஞ் செய்தோம்
ஆனுலு மெம்மை நோற்றே
அன்பயெமில் வாரீர். (ஓ ! சேசுவே)

9 அபத்த வேனத்தில்
அமிழ்ந்திய வெமக்குத்
தபத்தின பேரில் நாட்டந்
தருதற்கு வாரீர். (ஓ ! சேசுவே)

10 சாவான பாவத்தால்
தள்ளோ மினி யுமையே
மீவானிறை நன்கெம்மில்
விளைவிக்க வாரீர். (ஓ! சேசுவே)

11 உமதிதயத்தில்
ஒளிர் ஸ்நேகாக்னியால் நீர்
எமதிதயந் தம்மை
எரித்திட வாரீர். (ஓ! சேசுவே)

---

40. *Air* :—**Un enfant nous est ne. (Comire, S. J.**
Music for this canticle can be had from Mr. Manual Costa, Manapad.

சரணங்கள்.

1 சியோன் நகரமே ஆர்மேவும் பாரமே
ஆயன்மெய் ராயன் நின் தேவனைப் புகழ்ந்திடாய்
பாவாலவரின் மாட்சியை நீ பாடிப்போற்றி
[டாயோ
நாவாலவரின் நன்மையை நவின்றிடாயோ நீ.

பல்லவி.

ஓ! தேவே, ஓ! தேவே, ஓதேவ ராயன்
இங்கெழுந் தெமை ஆசீர்வதிப்பீர்
ஓ! தேவ நீர் ஆசீர்வதிப்பீர்
உன்னததேவனே ஓ! சேசுக்கிறீஸ்துவே. *bis.*
ஓ! தேவே, ஓ! தேவே, ஓ! தேவ ராயன்
இங்கெழுந் தெமை ஆசீர்வதிப்பீர்
ஓ! தேவே நீர் ஆசீர்வதிப்பீர். ஓ! தேவேநீர்

2 ஓ! திவ்ய அப்பமே எம்மான்ம தெப்பமே
ஆதிபன் யேசுக்கிறீஸ்துவின் திவ்ய மாம்சமே
பன்னிருவர் விநயத்தோடருந்திய விருந்தே
என்னிருதயத்தின் மாநோயசற்றும் மருந்தே.
(ஓ தேவே)

3 மதுரமே திகழ் பாவாலவா புகழ்
ஓதுமிந்நாளில் யாமக மகிழ்ந்திடுவோம்
சரூப ஈசனன்பினுல் திவ்யநற்கருணையை
நிரூபித் தின்னவ ரெமக் களித்ததா லென்றும்.
(ஓ தேவே)

---

41. *Air* :—" **St. Francis Assisi.**"

Crown of Jesus Music Baok No. 107.

1 சேசுவே எம் ஸ்நேகமே நீர்
தேவநற்கருணையில்
நீசராம் எம் தோஷம் நீக்கிப்
போஷிக்க வென்றென்றுமே
ஆசை கொண்டெம் போசனமா
வாசமானீர் தோத்ரமே.

2 வானுலகி னின்றிறங்கி
வந்து சீவியந் தரும்
ஞானேதனமானேம் நம்மை
நாளு முண்ணும் உண்பீரேல்
ஈள மில்லாராவீரென்றே
ஏவுகின்றீர் தோத்ரமே.

3 பந்த பாவக் கேடடைந்து
நைந்திடாமல் நம்மையே
தந்தருள்வோம் போசனமா
மைந்தரே நீர் நாளும் நம்
பந்தி தன்னில் வாருமென்றே
பன்னுகின்றீர் தோத்ரமே.

4 சீவன் தந்து மீட்டோ மும்மைச்
சேதமா நீர் போவீரேல்
தேவன் நம் தாபஞ் சிறிதா
மோ வதனுல் நம்மையே
தாவி இன்றே வாருமென்றே
சாற்றுகின்றீர் தோத்ரமே.

5 தாயினும் பேரன்புடைய
தாதையும்மைத் தீதுசேர்
மாய லோக வின்பம் காடி
மைந்தர் யாம் பிரிந்து மா
தீயராகி மீண்டும் வந்தோம்.
சேர்த்தணைப்பீர் தோத்ரமே.

6 புன்மை த்ரோகம் செய தகன்று
போன மைந்தர் யாமிதோ
நன்மையுள்ள தாதை யும்மை
நாடி வந்தே யண்டினேம்
எம்மை க்ருபை கூர்ந்து நீர் கை
யேற்றருளும் தோத்ரமே.

7 ஈடில்லா நன் மேய்ப்பரே நீர்
தேடுமுந்த மந்தையின்
ஆடுகள்யா மீண்டும் வந்தோம்
அன்பிரக்கங் கூர்ந்து நும்

பாடுகளைப் பார்த் தெம்மீது
பட்சம் வையும் தோத்ரமே

8 பாவிகள் யாம் செய் கொடிய
பாதகங்கள் யாவையும்
தேவ நும் கை கால் விலாவின்
திவ்ய காய மைந்தையும்
மாவருளால் நோக்கி இன்றே
மன்னித்தாளும் தோத்ரமே.

9 வாரு மெங்கள் நெஞ்சகத்தில்
மா வரப்ரசாதமே
தாருந் தீமை யாவும் போக்கும்
தாமதம் பண்ணுதேயும்
பாரும் வானும் ஒருரையாற்
பண்ணுந் தேவே தோத்ரமே.

10 உம்பர் கோனே எம் பிரானே
ஓ! எம் நேச சேசுவே
அன்பே எங்கள் கண்மணியே
ஆருயிரே தியராம்
எம் பவங்கள் போக்க வாரும்
என்றென்றைக்குந் தோத்ரமே.

11 நெஞ்சகத்தில் எம் சர்வேசன்
நீரெழுந் தெம்மேலுள்ள
நஞ்சை நேரும் வஞ்சனை பொய்
வெஞ்சினம் ஆகாமியம்
புன் சுகத்தின் வாஞ்சை யாவும்
போக்கியாள்வீர் தோத்ரமே

12 உம்முடைமையாக வெம்மை
ஒப்புவிக்கின்ருே மிவண்
எம்மரிய ஆத்துமங்கட்
கென்றும் வேண்டும் நன்மைகள்
தம்மை யீந்து காத்தருளும்
சந்ததமுந் தோத்ரமே.

---

42. *Air* :—“ **They youth who wealth and courts despised.**”

Hymn Book by Christian Bros. No. 104.

சரணங்கள்.

1 ஓ! சேசுவே எம் ஸ்நேகமே
ஓ! தேவ சத்ப்ரசாதமே
ஓ! சீவிய மன்ஞவே எம்
உள்ளத்தில் நீவிர் வாரும்.

பல்லவி

ஓ! ஆண்டவரே அடியேம்
உள்ளத்தில் வாரும் நீர்
ஓ! ஆண்டவரே விரைவாய் வாரும் எம்
உள்ளத்தில் வாரும் நீர்.

2 வாஞட்டினின் றிறங்கியே
வந்தான் மாவிற் குயிர் தரும்
ஞாஞமுதே எம் அன்பரே
நாதனே நீவிர் வாரும். ஓ! ஆண்டவரே

3 சேனுடர் சூழ்ந்தே போற்றிடும்
தேவ த்ரவ்யாநுமானமே
மாணர் நித்ய பிதாவின் சீர்
மைந்தனே நீவிர் வாரும் ஒ! ஆண்டவ

4 ரத்தஞ் சிந்தாப் பலியே இன்
றெம் பாவங்களைப் போக்கியே
நித்ய கதிக்காளாக்கவே
நீர் எம்முள்ளத்தில் வாரும். ஒ! ஆண்ட.

---

43. *Air :*—**Tu n'as Point d'asile.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1 ஒ! எம் திவ்ய நாதனே எங்கோவே நீர்
உம்மகராம் எம் துரோகம் பாராமல்
உன்னத சத்ப்ரசாதத்தில் நாளுமே
அன்பினல் வாசஞ் செய்கின்றீர் தோத்ரமே.

பல்லவி.

வாரும் எம் சேசுவே வல்லவனுதியே
கருணை வாரிதியே கர்த்தனே எம் தேவே
வாரும் எம் ஈதயத்தே வாரும் எம் சேசுவே.

2 வானுலகினின்றிறங்கி வந்தே நீர்
வாகுள ஜீவிய போசனமாக
மைந்த ரெங்கட் கும்மைத் தந்திட மன
முவந்தீர் அன்பே என்றென்றுந் தோத்ரமே.

3 சீவன் தந்து மீட்டதும் போதாதென்ருே
தேகஞ் செந்நீரை இவன் யாம்போஷிக்க
திவ்ய நற்கருணே யநுமானித்துத்
தாதையே தந்தீர் என்றென்றுந் தோத்ரமே.

---

44. *Air* :—**Suivous Les Rois Dans L'etable.**
Vade mecum, 3rd Vol. No. 42.

சரணங்கள்.

1 சேசுவே எம் ஸ்நேக தேவே
தேவுலக ராயனே
மாசில்நும் ஈதயந் தன்னில்
வைத்தெமை நீர் ஆட்கொள்வீர்.

பல்லவி.

வந்தோ மீதோ எந்தையே நும்
சந்நிதி வந்தோம்
எம்மை நீர் ஆட்கொள்வீர்
வந்தோம் நீர் ஆட்கொள்வீர்.

2 கன் மனத்தோ ரென்று எம்மைக்
கர்த்தனே தள்ளுவிரேல்
இந்நிலத்தில் காப்பார் யாரே
அன்பனே நீர் ஆட்கொள்வீர். (வந்தோ)

3 எம் பவத்தாலே யாம் ஐயே
உம்மை யிழந்தோம் மெய்யே.
ஆயினுங் கைவிடா தெம்மை
அன்பனே நீர் ஆட்கொள்வீர். (வந்தோ

---

45. *Air*:—**Mon cœur soupire De'L'aurore.**

Music for this canticle can be had from
Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்

1 ஓ! சேசுவே எம் ஸ்நேக தேவே
ஓ! தேவுலகோர் அப்பமே எம்
ஆன்மாவின் வீவகற்ற வெம்மில்
அன்போடெழுந்தருளுவீரே,

பல்லவி

வாரும் எமில் ஓ! நேச சேசுவே
வல்லவநாதி நாதனே
பாரும் விண்ணும் பரவுந் தூயனே
பாவி யெம் பாவம் நோக்கிடாதே—*bis*.
வாரும் எமில் ஓ! சேசுவே.

2 என் மாம்சமுண்டென் செந்நீரையே
வன்னகாரமாக வருந்தும்
அன்னனில் யான் வசிப்பேனென்றீர்
அன்போடெழுந்தருளுவீரே. (வாரும்)

3 தேவ வுமை மறந் தலைந்து
பாவச் சுமையாலே நலிந்து
வந்தோ முமது சந்நிதியே
அன்போடெழுந்தருளுவீரே. (வாரும்)

... THE REGISTRAR OF ...
12 MAR 1941
MADRAS

46. *Air :*—**Enfant je t'aime.**

Music for this canticle can be had from Mr. Manual Costa, Manapad.

1 ஓ ! குழந்தாய் வா
உன்னை ஸ்நேகிக்கின்றேன்
மாகத்தை நீங்கி
வந்தேன் உனைத் தேடி
தாகம் கொண்டு சத்ப்ர
சாதத்தில் பீடத்தென்
தேகமுணவாய்த் தந்தேன்
சேய் உண்ணவா உன்னை
ஸ்நேகிக்கின்றேன் யான்.

2 மன் புது நன்மை
வாங்க வாஞ்சை கொண்டாய்
அன்பின் தேவத்ரவ்
யாநுமான மிதை
உன் பொருட்டாற்றினேன்
உண்டு நீ பூரிப்பத்
தென் பரவென் இதயம்
தேடு துன்பம் உன்னை
ஸ்நேகிக்கின்றேன் யான்.

3 தீங்கில் விழாமல்
தேவஷ்டப்ரசாதம்
பாங்குட னுய்யப்
பன்னும் திடனீவே
வாங்குவாய் நீ யென்னை
வானிறையா மென்னில்

தேங்கும் நன்மை யடைவாய்
சேசு உனையே யென்றும்
ஸ்நேகிக்கின்றேன் யான்.

4 பாவ வீவெய்தாய்
பான்மைதானே ஆன்ம
ஜிவிய மீயும்
தேயுணவா யுன்றன்
காவலனு ஞான்றும்
காத்திருக்கின்றனன்
தீவிரித்தன் விருந்தைச்
சேசு உண்ணவா உன்னை
ஸ்நேகிக்கின்றேன் யான்.

சேசுநாதருடைய திரு இருதயத்தின் பேரில்.

47. *Air :—* **" Holy Queen we bend before Thee."**

Hymn Book by the Christian Bros. No. 195.

சரணங்கள்.

1 சேசுவின் இருதயமே
தேவ ஸ்நேகச் சூளையே
தாசராம் எமக்கிவ்வேளை
தஞ்சம் நீர் தந்தாள்வீரே.

பல்லவி.

ஓ! திவ்ய இருதயமே
ஓ! தயையின் ஊற்றே எம்
தீதுகள் நோக்காது க்ருபை
செய்தெமை நீர் ஆள்வீரே.

2 தீ நரகில் வீழ்த்துந் தீமைச்
சேற்றிழாழ்ந் துள்ளம் நையும்
ஈனரா மெமைக் கைதூக்கி
என்றும் நீரே யாள்வீரே. (ஓ! திவ்ய)

3 பாவத்தா லுமைப் பிரிந்தே
பாசத்தைப் பின்சென்றெண்ணில்
ஆபத்துக் குள்ளாகி மீண்டும்
அண்டினேம் நீர் ஆள்வீரே. (ஓ! திவ்ய)

4 தந்தையை யகன்றுழன்றே
தாழ்வடைந்த ஊதாரி
மைந்தரானேம் எங்கள் பாவ
மாசகற்றி யாள்வீரே. (ஓ! திவ்ய)

5 நித்தனே யாம்செய் தீங்கால் நும்
நிர்மல விதயத்தைக்
குத்தி நோகச் செய்தனம் எம்
குற்றம் பொறுத்தாள்வீரே. (ஓ! திவ்ய)

6 இற்றை நாண்முதல் யாம் பாவத்
தின்வழி யகன்றென்றும்
முற்றுநும் மிதய வன்பில்
மூழ்கச் செய்தேயாள்வீரே. (ஓ! திவ்ய)

7 எம்மிதயங்கட் கரசா
வென்று நீரிருந் தெம்மைச்
செம்மை மோக்ஷ மார்க்கந் தன்னிற்
சேர்த்தினிதிருள்வீரே. (ஓ! திவ்ய)

8 ஈட்டியா லெற்றுண்ட வுந்தம்
ஹ்ருதயத்திற் றங்கி நும்
பாட்டின் பேறடைய வெம்மைப்
பாத்ர ராக்கியாள்வீரே. (ஓ! திவ்ய)

9 வெள்ளமா நீ ரெங்கட்காக
வே சொரிந்த செந்நீரில்
விள்ளுமோர் துளி தீயாரெம்
மேல்விழச் செய்தாள்வீரே. (ஓ ! திவ்ய)

10. கர்த்தனும் மிதயத்துள்ள
காணரிதான பரி
சுத்த நேசத்தால் நீரெம்மைச்
சுட்டெரித்தே யாள்வீரே, (ஓ ! திவ்ய)

---

48. *Air :*—**Pitie' mon Dieu.**

Vade Mccum, 3rd Vol : No. 64.

சரணங்கள்

1 ஓ ! சேசுவின் மதுர இதயமே
ஓ ! தேவ ஸ்நேகாக்கினி மயமே
ஓ ! ஜீவிய ஜலஞ் சுரக்கும் ஊற்றே
உம்மில் வைத்தாள்வீர் எம்மைக் கையேற்றே.

பல்லவி

ஓ ! ஸ்நேக தேவே
ஓ ! சேசுவே
மாசில் நும் இதயத்தில்
வைத்தெம்மை யாட்கொள்வீர். } *bis*

2 வந்தோம் உமைப் பிரிந்தோராம் ஊதாரி
மைந்தர் நும் சந்நிதியில் எம்பேரில்
எந்தாதை நீ ரிரங்கி விழிபாரும்
இன்பர் நும் இதயத்திடந்தாரும். (ஓ ! ஸ்நேக)

3 நீசரெம்மேல் நும் இதயத்துண்டான
நேசத்தா லெங்கட் கும்மையே ஞான
போசனமாத் தரத் தயை புரிந்தீர்
பொல்லாதார் யாம் வரக்காத்திருந்தீர்.(ஓ! ஸ்நே)

4 இம் மண்ணுல கின்ப சுகத்தை நண்ணி
எங்கோனுமை யகன்றகம் பண்ணி
நும் இதயத்தை நோகச் செய்தோ மெய்யே
நோற்பீர் எந்தீங்கனைத்தையும் ஐயே. (ஓ! ஸ்நே)
5 பங்கமுறும் பவ மினிமேல் யாமே
பண்ணோ மெய் ப்ரதிக்ஞை செய்கின்ருேமே
எங்கள் சத்ராதிகளிடத்தினின்றே
எம்மை ரட்சை செயுங் குணக்குன்றே. (ஓ!ஸ்)

---

49. *Air* :—**Reine De France.**

Vade Mecum, 3rd Vol : No. 139.

சரணங்கள்

1 ஓ ! சேசுவின் திரு இருதயமே
ஓ ! ஸ்நேகத்தின் வற்ருத கேணியே
மாசேதுமில் சர்வேசனுமை யாம் எம்
வாழ் நாளெலாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்.

பல்லவி

ஓ ! சேசுநாதா எம் மீட்பரே
உம்மை மனநோகச் செயுங் கொடிய
நீசர் பொல்லார் யாம் ஏனும் எமை
நீர் நோற்றுமை யாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்

2 எந் தாதை யும்மை யெந்தை யென்றழைப்ப
எந் தீமையால் அபாத்ர ராகியே
வந்தோம் கடைக் கண்ணேக்கி நீர் கையேற்றிம்
மைந்தருமை ஸ்நேகிக்கச் செய்குவீர். (ஓ!சேசு)
3 பாவாக்ரமத் தின்றளவு முழன்றே
பாவிகளாயினோ மென் றெம்மை யெம்
தேவே தள்ளாமற் ருெண்டாகவே நும்
சேர்த்துமமை யாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ ! சேசுநாதா)

4 தீயே முமக் குளுற்றுந் த்ரோக மோர்ந்தே
சிந்தை நலிந்து துதிக்கின்றனம்
தூயோ நுமை யின்று தொட் டென்று மேனம்
த்வேஷித்தி யாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ! சேசுநாதா)

5 எநத்ரோகந் தேவரீர் பாரா தெமக்கா
இம்மண்ணில் நீர் கடின பாடுற்றுச்
சிந்துந் திருரத்தத்தைப் பார்த்து க்ருபை
செய்தும்மை யாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ! சேசுநாதா)

6 மாநீச ரெங்கட்கா ரத்தம் நீர் சிந்தி
மாய்ந்ததுமல்லா தெங்கட் கும்மையே
ஞானேதனமா தந்தீரன்பில் முள்கி
ஞான்று முமை ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ! சேசுநாதா)

7 இம்மாநிலத்தெம் மாத்துமா கெடாமல்
என்றுந் துணையாய்ச் சத்ப்ரசாதத்தில்
எம்மோடு நீரிருக்கும் பான்மை தன்னை
யாமோர்ந் துமை ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ! சேசுநாதா)

8 பாவத்தில் நீங்கி யுமது விருந்துப்
பந்திதனில்யாம் வரஞான்று நீர்
ஆவலுடன் காத்திருக்கும் பேரன்பை
ஆய்ந்தும்மை யாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்.
(ஓ! சேசுநாதா)

9 என்மாம்ஸ மாந்தி யீறில் நித்ய மோக்ஷ
வின்பத்தை நீர் சுகிப்ப வாஞ்சையாய்
வம்மின் மாகாகரென் றெமையழைக்குந் தே
வா வும்மையாம் ஸ்நேகிக்கச் செய்குவீர்
(ஓ! சேசுநாதா)

சேசுநாதருடைய திருவிரத்தத்தின் பேரில்.

50. *Air :*—**Reine De France.**

Vade Mecum, 3rd vol: 139.

சரணங்கள்.

1 சேசு பிரானே பேயின் கையில் நின்றே
தீயேமை மீட்டளவில் பேரின்ப
வாசஸ்தலந் தனிலெமை நீர் சேர்ப்ப
மண் மீது சிந்துதிரம் வாழ்கவே.

பல்லவி.

ஓயாத தோத்ரம் எம்நாதனே
உம்பரிறைவ வுமக் கென்றென்றுமே
தீயாம் விழாமல் நீரெங்கட்காச்
சிந்தும் ரத்தத்தின் பேறெமக்கிடுவீர்.

2 பூங்காவினிற்பரம ப்தாவை வேண்டும்
போதெம் பவக்குரூர மோர்ந்து நீர்
தாங்காத் துன்பாழ்ந்து வேர்வையாகச் சொரிந்த
தாவில் திருவுதிரம் வாழ்கவே. (ஓயாத)

3 சேயார்களாம் யூதராலோர் கற்றூணிற்
சேர்க்கப்பட்டே கசைகள் சாட்டையால்
தூயோனே நீரடிபட்டங்கம் பிண்டு
சோர் வெய்திச் சிந்துதிரம் வாழ்மவே. (ஓயாத)

4 அம்போருக நிகர்நுங் கால் கரங்கள்
ஆணிகளாற் சிலுவை மீதிவண்
எம்பாவநீவ வறை யுண்டு நீர் சிந்
தீடில் திருவுதிரம் வாழ்கவே. (ஓயாத)

திருச்சிலுவையின் பேரில்.

51. *Air* :—**'T'is the month of our mother.**

Hymn Book by the Christian Bros. No. 52.

சரணங்கள்.

1 ஆதி தேவனின் மைந்தன்
ஆன பரம குருவே
வாதையோடு சுமந்த
மாமாட்சிமைசேர் தருவே.

பல்லவி

அர்ச்சனை செய்வோமே
அர்ச்சனை செய்வோமே
ஆரில் யாம் நினக்கே
அர்ச்சியசிஷ்ட சிலுவையே.

2 பாரின் ரட்சகா சாய்ந்த
பகரரிய மஞ்சமே
சீருதிரமே தோய்ந்தாய்
திக்கற்றவரின்; தஞ்சமே. (அர்ச்சனை)

3 ஓதரும் பரன் மாய்ந்த
உன்னத திருப் பீடமே.
மாதகை புகளார்ந்த
வானுலகின் கபாடமே (அர்ச்சனை)

---

52. *Air* :—**" Macula Non est In te. "**

Hymn Booh by the Chiristian Bros. No. 58.

சரணஙகள்

1 மெய்ப் பரமன் பாவிகட்கா
மேருவில் அறையுண்ட
அற்புதச் சிலுவைக் கென்றும்
அர்ச்சனை புரிகுவோம்.

பல்லவி

அர்ச்சனை புரிகுவோம்
அர்ச்சனை புரிகுவோம்
அர்ச்சனை புரிகுவோம்
அர்ச்சனை புரிகுவோம்

2 தம்முயிரைத் தந்த நாதன்
சாய்ந்திடுஞ் சீர் மஞ்சமாம்
அம்முயர் சிலுவைக் கென்றும்
அர்ச்சனை புரிகுவோம். (அர்ச்சனை)

3 ஏகனின் பத்ராசனமும்
ரட்சண்ய நம்பிக்கையும்
ஆகிய சிலுவைக் கென்றும்
அர்ச்சனை புரிகுவோம். (அர்ச்சனை)

4 தோன்றலார் முடியின் மீது
தோன்றிடுங் கிரீடமாம்
ஆன்றலார் சிலுவைக் கென்றும்
அர்ச்சனை புரிகுவோம். (அர்ச்சனை)

---

53 *Air* :—"**On this day, O beautiful Mother**."

Hymn Book by the Christian Bros. No. 51.

பல்லவி

திவ்விய சிலுவையே வாழ்க
தேவன் பொற்பீடமே வாழ்க
செவ்வைத் திரு விருக்ஷமே மோக்ஷத்
தின் பாதையே நீயே வாழ்க.

சரணங்கள்

1 எவ்வுலகுந் தாங்குங் க்றீஸ்
தீச்சுரனைத் தாங்கியே
தெவ்வர் செய் துன்பாலவர்
சிந்திய ரத்தந் தோய்ந்த. (திவ்விய)

2 பேய் செய் ராஜ்யபாரத்தின்
பீடொழித் தெம்மை மீட்ட
தூய் மெய் வேதனின் வென்றித்
தோகையாய்த் துலங்கிடும் (திவ்விய)

3 தீய பேய்க் குறுகணுந்
தீனர்கள் சகாயமும்
நோயுற்ருர்க் கவிழ்தமும்
நொந்தார்க் கின்பமுமான (திவ்விய)

4 நாதன் நின்னை யன்புடன்
நன்கரவணைத்துத் தோள்
மீது தாங்கியே யுன்னில்
வீந்திடப் பாக்யம் பெற்ற. (திவ்விய)

---

54. *Air :*—**"To Jesus Heart all burning."**
Hymn Book by the Christian Bros. No. 45.

சரணங்கள்.

1 தேவாதி தேவ மைந்தன்
திவ்ய சிலுவையே
ஆவா யென்றும் நினக்கே
அர்ச்சனை செய்வமே.

பல்லவி.

திவ்ய சிலுவையே
சேசுவின் செங்கோலே
அவ்வை மஞ்சே நினக்கே
அர்ச்சனை செய்வமே. } *bis.*

2 மோக்கத் திறவுகோலே
மூவா முதலோனின்
ஆர்க்கந் தோய்ந்த நினக்கே
அர்ச்சனை செய்வமே. (திவ்ய)

3 நோயன் பேழையே யெங்கள்
நோய்க் காறுதலே நல்
லாயன் தானே நினக்கே
அர்ச்சனை செய்வமே. (திவ்ய)

4 மோசசின் கைச்சூரலே
முன்னர்ப் பவந்தீர்த்தோன்
ஆசனமே நினக்கே
அர்ச்சனை செய்வமே. (திவ்ய)

---

55. *Air* :—**Visite Episcopale.**
Vade Mecum, 3rd Vol: No. 199.

பல்லவி

திவ்ய சிலுவையேதேவ சுதனும்
சேசுவின் செங்கோலே நீ வாழ்க வாழ்க.

சரணங்கள்

1 இவ்வுலகத்தின் மீட்பர் இங்குயிர் தந்த
ஏர்பலிப் பீடமே நீ என்றும் வாழ்க. (திவ்ய)

2 வல்ல பரமன் சாய்ந்த மஞ்சமே மோக்ஷ
மார்க்கமே நீ யெஞ்ஞான்றும் வாழ்க வாழ்க.
(திவ்ய)

3 மாக்களீடேற வுன்னில் மாய்ந்த மெய்வேதன்
வாகைத்து வசமே நீ வாழ்க வாழ்க. (திவ்ய)

4 தோடமில் நாதன் சிந்தும் தூய புண்ணீரால்
தோய்ந்தனே நீ யெஞ்ஞான்றும் வாழ்க வாழ்க.
(திவ்ய)

---

56. *Air* :—**Adressons notre Hommge.**

Vade Mecum, 3rd Vol : No. 109.

சரணங்கள்.

1 ஆதி தேவசுதனுர் ஆரிற் பாடுபட்ட
மாதகைச் சிலுவையே வாழ்க நீயே வாழ்க.

பல்லவி.

சேசுபர னெமக்கா
ஜீவ பலியான
மாசிலுவையே திரு
மரமே நீ வாழ்க } *bis.*

Duet :—வான் வேந்தன் வான் வேந்தன்
மண்ணேரெம் மண்ணேரெம்
மாசொழித்தாருனேக் கொண்டே—*bis.*
மகிழ்ந்துன்னில் நம்பிக்கை வைக்கின்ரும் யாம்
மகிழ்ந்துன்னில் நம்பிக்கை வைக்கின்ரும். } ,,

2 உன் மீதே யறை யுண்டுலோக மீட்ட தேவ
செம்மறிப் புருவையின் சீர்ப்பீடமே வாழ்க.
(சேசு)

3 மூவுலகமுந் தாங்கும் முன்னோனைத் தாங்கிய
சீவியத் தருவே மொய்சேனின் தண்டே வாழ்க.
(சேசு)

4 பேயின் ராஜ்ஜியபாரப் பீடேர்த் தெம்மை மீட்ட
தூய நாதனின் வென்றித் தோகை நீயே வாழ்க
(சேசு)

---

57. *Air :*—**A Notre Saint Pere Le Pape.**
Vade Mecum, 3rd Vol : No. 192.

சரணங்கள்.

1 ஆதாம் செய் தீமையைப் போக்கி
அன்னோர் சந்ததியை மீட்பத்
தீதாரும் பூதர்பால் வந்த
சேசுவைத் தாங்கும் சிலுவையே

பல்லவி.

திவ்ய சிலுவையே வாழ்க
சீர்வான் கபாடமே வாழ்க
தேவன் பொற்பீடமே வாழ்க
செவ்வைத் திரு விருக்ஷமே
செவ்வைத் திரு விருக்ஷமே வாழ்க.

2 பாதகப் போஞ்சு ப்லாத்தன் கீழ்ப்
பாடுபட் டெங்கட்கா மாய்ந்த
ஏதமிலாத வெம்பரன்
யேசுவைத் தாங்கும் சிலுவையே. (திவ்ய)

3 மண்ணையின் ராச்சியபார
வல்லமை தேய்த் தெம்மை மீட்ப
விண்ணிருந்திங்குற்றே மாய்ந்த
வேந்தனைத் தாங்கும் சிலுவையே. (திவ்ய)

---

58. *Air :*—**O Marie O Mere Cherie.**

Vade Mecum 3rd Vol : No. 149.

பல்லவி.

ஆதிதேவ மைந்த னெமக்கா
வாரிற் பாடுபட்ட திவ்ய சிலுவையே
மாதகை நாதனின் வாகைத்துவசமே
வானின் வாசல் நீயே வாழ்க.

சரணங்கள்.

1 மேதினியோராம் எம்மை மீட்ப
விண்ணிறைவன் எண்ணில்லாத
வாதையுற் றுன்னில் மாய்ந்ததால் நீ
வாழ்க வென்றென் றுமே வாழ்க. (ஆதிதேவ)

2 உன்னிலறை யுண்டையன்கை கால்
ஒண்மை விலாவில் நின்றே சீர்
மன்னுதிரம் சொரிந்ததால் நீ
வாழ்க வென்றென் றுமே வாழ்க. (ஆதிதேவ)

3 மீயுலக வேந்தானோன் உன்னை
வேதிகையாகக் கைக்கொண்டே
மாயப் பைசாசை வென்றதால் நீ
வாழ்க வென்றென் றுமே வாழ்க. (ஆதிதேவ)

பரிசுத்த தேவமாதாவுக்கு ஸ்தோத்திரப்
பாடல்கள்.

"சமுத்திரத்தின் நட்சத்திரமே" என்னும் மந்திரம்.

59. *Air :*—**Ave Maris Stella.**

1 வாழ்க வாரி மீனே
வாழ்க தேவ தாயே
வாழ்க என்றுங் கன்னி
வாழ்க மோட்ச வாசல்.

2 தேவ தூதன் ஓது
சீர் வாழ்த்துநீர் கேட்டே
எவையின்பேர் மாற்றி
ஈயுஞ் சமாதானம்.

3 ஆக்கினைக்கட் டீரும்
அந்தகர்க் கெல்லாயும்
நீக்கும் எம் பொல்லாங்கை
நேரில் நன்மை தாரும்.

4 தாய் நாமென்றே காட்டும்
தால மீட்பராம் நும்
சேய்எம் வேண்டற் கும்மாற்
சீர் காதிவாராக.

5 நன்மைக் கன்யாஸ்த்ரீயே
நன்னர்ச் சாதுவே யெம்
தின்மையாவும் போக்கிச்
சீர் சார்ந்தங் கற்பீயும்.

6 சேசுவினேர் பாதச்
சீர்ப்பூ யாங்கண் டுய்ய
மாசில் நன்னடக்கை
மார்க்கந் தந்தே யாளும்.

7 ஆதி தேவ தாதை
அன்பார்ந்த க்றீஸ்த் யேசு
தீதில் ஸ்ப்ரீத்து சாந்து
த்ரியேகர்க்கே தோத்ரம்.

"மகிமையில் இலங்கி என்றேன்றைக்தும்"
என்னும் மந்திரம்.

60. *Air :*—**Que cette Voute Retentisse.**

Vade Mecum, 3rd Vol: No. 70.

1 மாமகிமை யொளிர்ந் தென்றும்
மாண்பு சமாதானத் தோங்கும்
தோமில் தமத்ரீத்துவத்தின்
தூய் வெண்மை லீலியே வாழ்க. } *bis.*

2 மாசேதுமில்லாத மோக்ஷ
வாசிகட் கானந்தமான
ரோசாவெனு மாமலரே
ஓது நும் பாதமே வாழ்க. } *bis.*

3 வானுட்டிறை நும்பாற் ருேன்ற
வண்கரத் தேந்திப் பாலூட்டித்
தானுனவன்ருனே யினி
தாய் வளர்க்கப் பெற்றீர் வாழ்க. } *bis.*

4 சாற்று நுந்தெய்வீகமான
தண் வரங்களினின்பெங்கள்
ஆத்மாக்களுக் காகாரமா
வன்போ டீயுந் தாயே ஆமென். } bis.

61. *Air* :—"**All ye who seek a sure relief.**"

Hymn Book By Christian Bros. No. 43.

சரணங்கள்.

1 ஓ! தேவதாயே ஓ! அம
லோற்பவியே எங்கள்
ஆதாரம் நீயே நீயலால்
ஆதரிப்பார் யாரே.

பல்லவி.

ஓ! தேவ கன்னித்தாய் மரி
ஓ! மோக்ஷ ராக்கினி
தாதர் நின் தாள்வந்தோம் அம்மா
தாபரிப்பாய் நீயே.

2 பண்ணாத தீமை பண்ணுமா
பாதகர் யாமேனும்
கண்ணோக்கி நீ யாளாயெனிற்
காத்தருள்வார் யாரே. (ஓ! தேவ)

3 தீயார்களானோ மாயினும்
சேயருனக்கல்லோ
நீ யீதுளத்தோரா யெனில்
நீசரிங் குய்வோமோ. (ஓ! தேவ)

4 தீதே செய்தாலும் அன்னை தன்
சேயை வெறுப்பாளோ
மாதாவே நீ ஈதோர்ந் தெமை
மன்னிக்க வொண்ணாதோ. (ஓ! தேவ)

5 பொல்லாத மைந்தரான வெம்
புன்மைப் பவம் போக்கி
நல்லார்களாக்க வல்லபி
நாயகி நீயல்லோ. (ஓ! தேவ)

6 ஈனோர்களான வெண்ணிலார்
ஏனமதை நீக்கி
வானாட்டி லுய்யச் செய் தயை
வாரிதி நீயல்லோ. (ஓ! தேவ)

---

62. *Air* :—**L'ombre s'etend sur La terre.**

Vade mecum, 3rd vol : No. 129.

சரணங்கள்.

1 தாயே நீயே யன்றி எம்மைத்
தாபரிப்பார் வேறுண்டோ
ஆயே தூயே தீயாரானேம்
ஆட்கொள்வாய் நீ யாட்கொள்வாய்.

பல்லவி.

ஓ! தேவ தாய் மரியே
ஓ! வானிறைவியே
மாதீயராம் எம் பாவ
மாசகற்றி யாட்கொள்ளுவாய்.

2 மாய லோக வின்பந் தன்னில்
மன்னு முள்ள மாழ்ந்து தீப்
பேயடியாராகி மோக்ஷப்
பேறிழந்தோம் பேதையேம். தேவ)

3 எம் சரீர வாஞ்சையாலே
எம்மான்மாக்களைக் கொல்லும்
நஞ்செனும் பவக்கடலில்
நாங்கள் வீழ்ந்தோம் நாயகி. (ஓ! தேவ)

4 இன்னலால் நலிந் துனையே
எய்தினோர்க் கிரங்கிடும்
அன்னை நின் க்ருபாசனத்தை
அண்டினோம் தேவாதனி. (ஓ! தேவ)

5 பாவிகட் கடைக்கலமே
பன்னு நின் பதமலர்
தாவினோர் எந்நீசரேனும்
தள்ளாய் மெய்யே தாபரி. (ஓ! தேவ;

6 நீசரா மெமக்கா வுன்றன்
நேச மைந்தன் முன்மனுப்
பேச வல்லப முள்ளாள் நீ
பேதமில்லை யாதலால். (ஓ! தேவ)

63, *Air* :—"**Immaculate**."

Crown of Jesus music book No. 82. (ii)

சரணங்கள்.

1 ஓ! கன்னித்தாய் மாமரியே
உம்பரென்றும் போற்றும்
ஏக பிதாவின் செல்வியே
எம்மை நீ யாட்கொள்வாய்

பல்லவி

தாயுன்றன் பாதம் நம்பினேம்
தாபரன் முன் நீயே
தீய ரெமக்கா வேண்டி எம்
தீவினை தீர்த்தாட்கொள்வையே.

2 பன்னிரு வேந்தர் மரபி
பாவிகளாய் நொந்தே
நின்னடி வந்தோம் எமை நீ
நேயம் வைத்தாட்கொள்வாய். (தாயுன்றன்)

3 மாவினை வாரி நீந்த யாம்
வந்தவோரேர்த் தோணி
தாவி வந்தோம் நீ அபயம்
தந்தெமை யாட்கொள்வாய். (தாயுன்றன்)

4 மாசற்ற ரோசாப் புஷ்பமே
வைகறை வான்மீனே
பாசத்தின் போரி லெம்மை நீ
பாதுகாத்தாட்கொள்வாய். (தாயுன்றன்)

5 சீர் வளர் சூசை பாரியே
சேசுவின் மாதாவே
போர்வளரும் பூவின்பெமில்
பொன்றச் செய்தாட்கொள்வாய். (தாயுன்றன்)

6 பூவின் சிற்றின்ப வாஞ்சையாற்
போக்கடித்தோம் குன்றுத்
தேவுலகின் பங்கதை எம்
தீதொழித் தாட்கொள்வாய். (தாயுன்றன்)

7 தேவ வரப்ரசாதத்தின்
திவ்ய ஊற்றே மோக்ஷ
சீவியமார்க்கத் தெம்மை நீ
சேர்த்தென்றும் ஆட்கொள்வாய். (தாயுன்றன்)

64. *Air* :—**Holy Queen we bend before thee.**

Hymn Book by the Christian Bros. No. 195.

சரணங்கள்

1 தேவதாய் எம் தேவதாயே
தீதில்லாப் பரன் சேயே
பாவவாளராேனும் நீயே
பாதுகாத்தருள்வாயே

பல்லவி.

வாழ்க வாழ்க எம் மாதாவே
மாசிலா ரோசாப்பூவே
வாழ்க வாழ்க எம் மாதாவே
மைந்தரெங் துயர் நீவே.

2 பாவவாளரை ஈடேற்றிப்
பன்னும் வானிற் சேர்க்க மா
ஆவல் கொண்டவள் நீ மெய்யே
ஆதலாற் க்ருபை செய்யே. (வாழ்க)

3 இங்கவ வழி நடந்த
எண்ணில்லாத பாவிகள்
தங்களைத் தயவாய்ப் பார்த்தாய்
சாற்றரு மோக்ஷம் சேர்த்தாய். (வாழ்க)

4 காரணி யுன் மன்ருட்டின் ச
காயங் கேட்டடையாதார்
தாரணி மாந்தருள் யாரே
தண்டயை வான் பெய்காரே. (வாழ்க)

5 மன்னுமென் தாயாக வுன்னை
வான நாதன் ஈந்ததை
அன்னை நீ இவ்வேளை யோர்ந்தே
ஆண்டருள் தயை கூர்ந்தே. (வாழ்க)

---

65. *Air* :—" **Jesus, My life** "

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1 எம்தாய் எம்தாய் எம்தாய்
ஏதமில் கன்னித்தாய்
நின்தாள் தந்தாதரி எம்தாய்
நிகரில் நிமல தாய்.
Duet.—வந்தோம் உன்றன் மைந்தரிதோ
மாண்பார் உன் தஞ்சமா
மன்தாவி தென்பார் கோத்ரியே
மாக்ருபை நேத்ரியே.

பல்லவி

ஓ! தாய் மாமரியே
உன்னத மோக்ஷ ராஜேஸ்வரியே
ஓ! தாய் மாமரியே
உன் மகவை யிரந்தாதரியே

2 சாலோமோ னுலயி
தாரகைச் சிரத்தி
மாலான பாவத்தில் வீழ்ந்தே
மனம் பரிதபித்தே. (வந்தோம்)

3 நோயன்றன் பேழையே
நோவுற்ருர்க் கின்பமே
பேயின் றந்த்ரமா மாயையில்
பெரிதும் அயர்வுற்றே. (வந்தோம்)

4 சர்வேசன் மாதாவே
தண்ணலெ வான்மீனே
துர்வாஞ்சை நீங்குதற் கின்றே
துணைச்செய்குவை யென்றே. (வந்தோம்)

---

66. *Air* :—**Volez, Volez Anges De la Priere.**
Vade Mecum, 3rd Vol : No. 177.

பல்லவி.

ஓ! தேவதாய் மரியே ஆதரி
ஓ! க்ருபாகரி ஆதரி
ஓ! தயாபரி தீயாராளும்
உன்பதம் தந்தெம்மை யாதரி.—*bis*.

சரணங்கள்.

1 ஆதாரம் ஏழைகட்கு நீ தாய்
அல்லாமல் வேறுண்டோ சொல்லாய்
மாதாவே நின் சரணமாக
மைந்தர் வந்தோம் நீ ஆதரி. (ஓ! தேவ)

2 மண்ணுகும் காயம் பேய் பூவின்ப
மாயையில் வீழ்ந் துழன்றிவண்
பண்ணுத தீமை பண்ணியே மா
பாதகராளுேம் ஆதரி. (ஓ ! தேவ)

3 பாவக்கடலினி லாழ்ந்தீதோ
பன்னும் உள்ளந் தயங்கியே
தாவும் தீயேமை வான்வழி நீ
தன்னில் நடத்தி யாதரி. (ஓ ! தேவ.)

4 பொன்றும் சரீர வாஞ்சைதன்னில்
பூவுல கின்ப வாஞ்சையில்
என்றும் யாம் நீங்கவே வரம் நீ
ஈந்தாரில் எம்மை யாதரி. (ஓ ! தேவ)

5 பன்னும் பவத்தில் வீழ்த்த ஈனப்
பாசம் ஓயாது செய் தந்த்ரம்
தன்னே வெல பெலன் எமக்கு
தந்தென்றும் நீயே ஆதரி (ஓ ! தேவ)

---

67. *Air* :—**Adressons notre Hommage.**

Vade Mecum 3rd Vol : No. 109.

சன்ம மாசற்ற கன்னித்தாயே பரன் சேயே
எம்மை நீ விழிநோக்கி இவ்வேளை ஆள்வாயே.

பல்லவி

ஓ ! தேவ கன்னித்தாயே ஓ ! மரியாயே யாம்
மாதீயாரேனும் எம்மேல் மனதிரங்காயோ—*bis*

Duet.—மாதாவே......மாதாவே
மைந்தர் யாம்......மைந்தர் யாம்
நம்பினேம் நம்பினேம் உன்னை.—*bis.*
மறுவிலாத் தாயெமைக் கைவிடாய் நீ } *bis.*
மறுவிலாத் தாயெமைக் கைவிடாய் }

2 அன்றேகன் உனக்கெம்மை ஆர்மீதிவர் மகார்
என்றோதும் வாய்மை யோர்ந்தே இவ்வேளை
யாள்வாயே.

3 முட்கள் உந்தியில் தோன்றும் மோதமமர் லீலிப்
புட்பமே யாம் செய் தீமை போக்கி நீ யாள்
வாயே

4 தீயார்ந்த வெறிப் பாம்பின் சென்னி மிதித்
தொளிர்
தாயே நாயகியே எம் துன்பம் தீர்த்தாள்வாயே

---

68 *Air* :—**Je suis Chretien.**

Vade mecum, 3rd Vol : **No. 1.**

பல்லவி.

ஓ! தேவதாய் நீயே வாழ்க!
ஓ! வானரசியே வாழ்க
மாதா மரியாயே சன்ம
மாசற்ற கன்னியே வாழ்க.

சரணங்கள்

1 வேதா பிதாவின் சீர்க் குமாரி
வெய்யவனணி சரீரி
ஆதாம் பவ சம்ஹாரி எம்மை
அன்பாய் ஆள்வாய் நீயே வாழ்க. (ஓ! தேவ)

2 வாகார் தாவீ தென்பார் தங்கோத்ரி
வானுலகோர் போற்றும் தோத்ரி
ஆகாவழி செலாம லெம்மை
அன்பாய் ஆள்வாய் நீயே வாழ்க. (ஓ! தேவ)

3 இன்னுவடைந் துணே யடைந்தோம்
எம் தாயே யாம் உள்ளுடைந்தோம்
அன்னுள் ஜொக்கீம் சுபுத்ரி எம்மை
அன்பாய் ஆள்வாய் நீயே வாழ்க. (ஓ! தேவ)

4 நீயே பாவிகளுக் காதாரம்
நீக்குவாய் எம் பாவப் பாரம்
ஆயே தாயே இவ்வேளே எம்மை
அன்பாய் ஆள்வாய் நீயே வாழ்க. (ஓ! தேவ)

---

69. *Air* :—**As the dewy shades of even.**
Hymn book by Christian Bros. No. 78-2.

சரணங்கள்.

1 ஓ! சர்வ தயாபரி வா
ஞோர் துதி க்ருபாகரி
மாசிலா மஞேகரி தாய்
மாமரி நீ வாழ்கவே.

பல்லவி

வாழ்க மரியாயே வாழ்க
வாழ்க நித்ய கன்னியே
வாழ்க மோக்ஷ வாசலே நீ
வாழ்க என்றும் வாழ்கவே.

2 சீரி உபகாரி சூசை
பாரி தாவீதன் குல
நாரி மாவுதாரி தயை
வாரி நீயே வாழ்கவே. (வாழ்க)

3 சேணுலக ராணி எழில்
நீணிலத்தோர் வானோறும்
ஏணி ஞானக் கேணி மோக்ஷக்
சாணி நீயே வாழ்கவே. (வாழ்க)

4 சீலி வேத நூலி ஜீவ
மூலி நம்பினோர்க் கநு
கூலி பரிபாலி ஜெப
மாலி நீயே வாழ்கவே. (வாழ்க)

5 நீதிசேர் அநாதியைப் பூ
மீதி லீன்றிடுஞ் சத்ய
வேதி சன்மக் கோதிலா வான்
வீதி நீயே வாழ்கவே. (வாழ்க)

---

70. *Air* :—**Etends Nos Voux.**

Music for this canticle, can be had from Mr. Manuel costa, Manapad.

சரணங்கள்.

1 உன் சேவடி தந்தெம்மை யாதரி
ஓ! தேவ கன்னித்தாயே மாபரி
தஞ்சம் நீ யென்றுன் பாதமே யடைந்தோம்
தார் வேந்தர் கோத்ரியே உள்ளுடைந்தோம்.

பல்லவி.

தேவ கன்னித்தாயே உன் தஞ்சம்
தாதர் வந்தோம் பாதுகாரம்மா.

2 மன்னும் விண்ணோர் தாரா கிரீடியே
வந்தோ முன் பூம்பதத்தை நாடியே
நின்னை யல்லா லுண்டோ ஆதாரமே
நீ நீக்குவாய் எம் பாவப் பாரமே. (தேவ)

3 தேவ பிதாவின் சீர்க் குமாரியே
தேசாருஞ் சூசையப்பர் பாரியே
பாவிகளானோர்க் கென்றும் தம்பமே
பாராய் தீயேமைச் சூழுந் துன்பமே. (தேவ)

4 தந்த்ரப் பைசாசின் கூட்டம் நண்ணுதே
தாங்காப் பெருஞ் சோதனை பண்ணுதே
எந் துர்ப்பலம் நன்றா யறிவையே
இவ்வேளை நீ துணை புரிவையே. (தேவ)

5 தீதார்ந்த பேயினம் புவி யுடல்
செய் மாயையால் வீழ்ந்தோம் பவக்கடல்
மாதாவே இவ்வேளை கைதூக்குவாய்
வான் சேர வெம்மைப் பாத்ரராக்குவாய். (தேவ)

---

71. *Air* :—**Mother dear, O! pray for me.**
Hymn Book by the Christian Bros. No. 57.

சரணங்கள்

1 தேவதாய் மரி நலஞ்
சிறந்த பூரணி
தினகர னுடையணி
திரு வுடலி சீர்

மேவும் பராபரன் செல்வி
விண்ணோர் பணிந்திடும்
விமலி தாத ரெம்மை இவ்
வேளை நீ யாதரி.

பல்லவி.

மாமரி கிருபாகரி
மாசில் ராஜேஸ்வரி
மைந்தன்முன் இரந்தெமை
மாதாவே யாதரி.

2 வாரியின் தாராவணி
வானோ ரி ராக்கினி
மன்னன் தாவீது கோத்ரி மீன்
மலைந்த சேகரி
பாரின்பவ மகற்றிடும்
பரம தாய் மதி
பதத் தணிந்த சீரி எம்
பவந் தீர்த்தாதரி. (மாமரி)

3 மாட்சி சேர் தயாட்சி சீர்
வளன் மணாளி மா
வலோன் சலோம ஞலயி
மகத்வ நாயகி
மோக்ஷ ப்ரதாபி கன்னியர்
முதல்வி எலியாஸ்
முனிவர் கண்ணுறுந் திரு
முகில் நீ யாதரி. (மாமரி)

4 தன்மத்தின் கண்ணாடி எம்
சந்தோஷ காரணி
சதா கன்னி தேவாதனி
தகை நிரஞ்சனி

நன்மை ப்ரவாகி பூமிசை
நர தெய்வீகனே
நல்குந் தயாபரி எமை
நாளும் நீயாதரி. (மாமரி)

---

72. *Air* :—**Jesus the very thought of Thee.**
Hymn book by the Christian Bros. No. 13.

1 எம் தாய் எம் தாய் எம் தாய் அதி
பன் தாவீது கோத்ரி
நொந்தார்க் கிரங்குந் தாபரி
நின் தாதரான யாம்
அந்தோ பரற் கெங் தீமையால்
நிந்தை வருவித்தே
இந்தார்ந்திடும் நின் தாளலர்
வந்தோம் நீ யாதரி.

2 நாவாற் சொல்லொண்ணு வேனஞ் செய்
ஏவாள் மகா ரெங்கள்
ஓவாத் துயர் நீ பார்த்தெமை
ஜீவாமுதே ரோசாப்
பூவே புண்யக் காவே நித்ய
சாவானதை நீக்கு
ஆவே மறைப் பாவே எம்மா
தாவே நீ யாதரி.

3 நல்லாய் நீயே யல்லா துண்டோ
சொல்வாய் ஆதாரமே.
தொல்லார் பூ வான் எல்லாந் தந்த
வல்லோன் தனக்கேலாப்

பொல்லாதார் நீரல்லோ வென் முன்
நில்லாது போமென்றே
சொல்லாமல் மாபுல்ல ரெங்கள்
அல்லல் தீர்த்தாதரி.

4 தீயார்கள் யாமே யேனும் நின்
சேயா ரென்ப துண்மை
யே யாதலால் நீ யீதுளத்
தே யோர்ந் திவ்வேளை எம்
ஆயே நல்லோர் நேயே சுரர்
ஓயா திரைஞ்சிடும்
தாயே கன்னித் தாயே சரண்
நீயே தந்தாதரி.

5 தானுன வெங்கோ னுதனி
பானுருந் தேகி சீர்
ஞானேற்பன்னி வானேர் சென்னி
ஆனுள் புதல்வி மா
ஈனே ரெமக்கே நாதன் யோ
வானே டுரைத் துன்னை
மாநேயத் தாயாய் ஈந்த தோர்ந்
தே நாளும் ஆதரி.

---

73. *Air* :—**O Jesus let thy anger cease.**
Hymn Book by the Christian Bros. No. 113.

1 ஓ ! மாசிலாத கன்னித்தாய்
ஓ ! வானுலகிறைவி மா
|| : தீமையி லாழ்ந்தோம் ஆயே நின்
சேயை இரந்தாள்வாய் நீயே : ||

2 தாவீது மன்னர் குலத்தி
தாராகண மகுடத்தி
|| : பாவிகள் தஞ்சம் நீயே எம்
மாவினை போக்கி யாள்வாயே : ||

3 வானவர் போற்று முதல்வி
மாண்பார் ஜொக்கீனு புதல்வி
|| : தி நரகில் யாம் வீழாச் சேய்
ஆனனம் நோக்கி யாள்வாயே: ||

4 இன்னலடைந்து வெம்பினோம்
எம் தாயுன்னையே நம்பினோம்
|| : பொன்னுலகேகும் நன்மார்க்கந்
தன்னி லெமைச் சேர்த்தாள்வாயே : ||

5 பேயெம் முடல முலகம்
பின்னமுறச்செய் கலக
|| : மாயையில் யாம் வீழா தென்றும்
ஆயருள் நீ செய்தாள்வாயே : ||

---

74. *Air :—* **"The youth who wealth and courts despised"**

Hymn Book by the Christian Bros. No. 104.

சரணங்கள்.

1 ஓ! மாசில்லா ராஜேஸ்வரி
ஓ! வானுலுக ராக்கினி
மா மோக்ஷ வாசலே பத
மா மலர் தந்தாட்கொள்வாய்.

பல்லவி.

ஓ! தேவனை மாமரியே
உன் பாதம் நம்பினோம்
ஓ! தேவனை மாமரியே நம்பினோம்
உன் பாதம் நம்பினோம்.

2 தாவீது மன்னர் கோத்ரியே
சாலோமனி ஞலயமே
ஜீவாமுதே தீயேம் புரி
தீங்ககற்றி யாட்கொள்வாய். (ஓ! தேவனை)

3 ஏகாதி நாதற் கேற்றிடா
திப்பூவின் மீதின்றளவும்
ஆகா வழி சென்ரு மெய்யே
ஆயினும் நீ யாட்கொள்வாய். (ஓ! தேவனை)

4 தியா ரொன்ருலும் நீ யருள்
செய்யா தகற்றிடல் நன்ரு
ஆயே நின் தஞ்சமா வந்தோம்
ஆதலால் நீ யாட்கொள்வாய். (ஓ! தேவனை)

5 மண்ணோரில் எண்ணில்லாத் தீயார்
மாதாவே யுன் றன் க்ருபையால்
விண்ணு டடைந்தா ருண்மையே
வேண்டு மெம்மை யாட்கொள்வாய்(ஓ! தேவனை)

75. *Air :*—**I. Dieu Des vertus**
Vade mecum, 3rd Vol: No. 73.
II Air :—**II. Hail Heavenly Queen**
Hymn Book By the Christian Bros. No. 74.

சரணங்கள்

1 ஓ ! நாயகி வானோர்கள் ராக்கினி
ஞானோற்பனி நிதானனைத் தந்த
பானுருடலி ஆனுளருள் செல்வி
ஈனோர்களாம் எமை நீ யாதரி.

பல்லவி.

ஓ ! தேவதாய் மரி ஓ ! தாபரி
மாதீயரானோம் நீயே யாதரி.—*bis.*

2 மாவேந்தனும் தாவீது கோத்திரி
மீவானொளிர் பம் பேவுஞ் சேகரி
ஜீவாய் வினைசெய் ஏவாள் மகாரெமை
மூவாதவான் முதல்வி யாதரி. (ஓ தேவ)

3 தீதார் புவிமீ தேனவாள ரோம்
ஆதாரம் நீயல்லாது வேறுண்டோ
மாதா மரியே வேதாவின் சேயே எம்
ஏதந் தவிர்த் தென்றென்றும் ஆதரி. (ஓ தேவ)

4 ரோசாவெனுந் தே சார்ந்த புஷ்பமே
மாசேதுமில் சர்வேசன் முன் மனுப்
பேசா அனையின் நேசஞ் சுரந் தெமை
ராஜேஸ்வரி இனிதினுதரி. (ஓ ! தேவ)

---

76. *Air*:—**Arm for deadly fight**
Crown of Jesus music Book. No. 18.

பல்லவி

ஓ ! தயாபரி
ஓ க்ருபாகரி
உன் தாளிணை தந்தாட்கொள்வாயே
ஓ ! ராஜேஸ்வரி
ஓ ! அனைமரி
உன் தாதரெம்மை யாட்கொள்வாயே.—*bis.*

சரணங்கள்.

1 வேதா பிதாவின் சுகுமாரி
விண்ணோர்க் கரசி நீயே பாரில்
தீதே புரிந்து நொந்த வெம்மைச்
செவ்வே நடத்தி யாட்கொள்வாயே (ஓ! தயா)

2 பாவாந்தகாரம் போக்கும் ஞானப்
பானூதய ப்ரகாசமான
தேவாதி சேயை வேண்டி யாங்கள்
செய் தீங்ககற்றி யாட்கொள்வாயே. (ஓ! தயா)

3 சென்ம மாசில்லாத சுசீலி
சீத மதி மிதி பொற்காலி
நன்மைப்ரவாகி நீயே எம்மை
நல்லோர்களாக்கி யாட்கொள்வாயே. (ஓ! தயா)

4 நோயன் பேழையே லீலிப்பூவே
நொந்தார்க் காதரவே மாதாவே
மாயப் பேய் கைப் புகாம லுன்றன்
மைந்த ரெமை நீ யாட்கொள்வாயே. (ஓ! தயா)

5 உன்றருளிணையை நம்பினோர்கள்
ஓர் காலும் கைவிடப்படார்கள்
என்றோதும் வாய்மை வீண் போகாமல்
இவ்வேளை எம்மை யாட்கொள்வீரே. (ஓ! தயா)

---

77. *Air*:—**Dieu le veut**
Vade mecum, 3rd vol: No. 148.

சரணங்கள்

1 கனமுள பவ
வினையில் மூழ்கியே
உனை யடைந்தனம்
ஓ! தேவனைப் பெற்ற

பல்லவி

சருவதாபரி தகை மனோகரி
தருணம் ஈதம்மா தயை செய்தாதரி
தருணம் ஈதம்மா தயை செய்தாதரி
தாயே, தாயே, தயை செய்தாதரி.

2 மரணந் தீர்வையை
மனத் தெண்ணாமலே
இருள் செய் வாஞ்சையால்
ஈன வழிப்பட்டோம். (சருவ)

3 பொருணசையிலும்
புலிநசையிலும்
அறிவிலாமல் யாம்
ஆழ்ந்தே நலிந்தனம். (சருவ)

4 கடந்த நாளில் யாம்
நடந்த மார்க்கமே
தொடர்ந்திடாமல் மா
தாயோரைப் பின்செல்ல. (சருவ)

5 தவத்தினாலுஞ் செய்
செபத்தினாலுமே
பவத்தில் நீங்கி யாம்
பரகதி பெற. (சருவ)

6 தினையளவும் எம்
மனதில் ஏனம் யாம்
இனி நினைந்திடா
தென்றுந் தவஞ் செய. (சருவ)

7 கண்ணீரினாலியாம்
பண்ணும் பவங்களை
மண்ணிற் றுடைத் துயர்
வானாட்டிலே யுய்ய. (சருவ)

Air :—**I. Reine des cieux**.
Vade mecum 3rd Vol. No. 117.

78. *Air*:—**II. Come Holy Ghost**
Hymn book by the Christian Bros. No. 28.

1 ஓ! ஜீவ தயாபரியே
ஓ! அன்புள்ள எம் மாதாவே
ஓ! சாது குணகரியே
உன் பதந் தந்தாதரியே.

2 மாவேந்தரானோர் கோத்ரியே
மாசேதுமில் ரோசா வெனும்

பூவே புண்யக் காவே எங்கள்
புன்கணீக்கி யாதரியே.

3 பாதகராஞேம் ஆயினும்
பாவிகளின் தஞ்சம் நீயே
ஆதலாலெம் தீதுபோக்கி
ஆயே எம்மை யாதரியே.

4 பாரும் வானும் போற்றுந்தூயே
பாச மெம்மோ டோயாது செய்
போரிலெம்மை நின் அபயப்
போர்வைக்குள் வைத்தாதரியே.

5 நாங்களினிமே லெம் ஜீவ
நாள் மட்டுமிங் கோர்காலுமே
தீங்குகளில் வீழா தென்றும்
செவ்வழி சேர்த்தாதரியே.

6 சீரி தீதார் எம்மை நீ எம்
ஜீவகாலத்தும் சாவிலும்
நேரும் பொ:ல்லாப்பில் நின் க்ருபை
நீழலில் வைத்தாதரியே.

---

79. *Air:*—**My Jesus from His throne above.**

Hymn bcok by the Christian Bros. No. 42

1 நித்ய கன்யாஸ்த்ரியே தேவ
கர்த்தனை ஈன்ற மாதாவே
சத்துரு செய் தந்த்ரத்தால் யாம்
தத்தளித் துன்ருளில் வந்தோம்

அத்தியந்த தயையுள்ள
உத்தமியே நீயே உன்தன்

புத்திரன் முன்னம் வேண்டி எம
கஸ்தி துன்பந் தவிர்த்தாள்-வாய்.

2 மீயுலகோர் என்றும் போற்றும்
நாயகியே ரோ சாப்பூவே
சேயராம் மெம் பலவீனம்
நீ யறிவாயல்லோ வெம்மைத்
தீயினில் வீழ்த்தவே நாளும்
பேயினஞ் செய்கின்ற தந்த்ர
மாயையைத் தாய் நீ நோக்கியே
தீ யெமுக்குன் தஞ்சம் ஈவாய்.

3 ஆதிபர் கோத்ரியே ஞான
போதமழை பெய்யுங் காரோ
மா தயை வாரியே சென்மத
தீதணுகா நல்லாயே நின்
தாதராம் எம்மை நீ மோக்ஷ
பாதை நடாத்தியே நேரும்
சோதனை தந்திரங்களில்
ஆதரவா யிருந்தாள்வாய்'

4 பானுடைத் தேகியே சீர் வான்
மீனணி சேகரி யுன்சீர்
ஆன கண்ணலெமை நோக்கி
மாநில மீதியாம் செய்த
ஏனம் விலங்கு தற்கா யாம்
தான தவஞ் செயச் செய்தே
ஆனந்த மோக்ஷப் பேற்றையே
வானரசி பெறச் செய்வாய்.

80. *Air* :—**On this day O ! beautiful Mother.**
Hymn book by the Christian Bros. No. 51.

பல்லவி

தேவ கன்னித்தாய் மரியே எம்
ஜீவமே எம் மதுரமே
தாவினேம் எம்மைத் தாமரை நேருன்
தாளிணை தந்தே யாளுவாய்.

சரணங்கள்.

1 சாவை யோர்ந்திடா திவண்
மாவினையில் மூழ்கியே
பாவவாள ராயினேம்
நீ விழி பார்த்தே நித்ய. (தேவ கன்னி)

2 மாநிலத்தியாம் செய்த
ஈனமாம் பவத்தொடு
தீநர கெய்தா தென்றும்
நீ நடத்தியே நித்திய. (தேவ கன்னி)

3 நாதனை நீ வேண்டி யாம்
பேதமையினுற் செய்த
தீதகற்றிடாயே லோர்
போதும் உய்யோமே நித்ய. (தேவ கன்னி)

4 தீய ரெங்கட்கா வுன்னில்
நேயமுள்ள நின் றிருச்
சேயின் முன் நீ கேட்பதை
ஈயாரோ தூயே நித்ய. (தேவ கன்னி)

5 நின் மன்ருட் டுதவியை
இந்நிலத்திரந் துன்னல்
நன்மையைப் பெருருண்டோ
தன்ம ரூபியே நித்திய. (தேவ கன்னி)

6 மண்ணில் ஏனவாளரில்
எண்ணிலார் உன் வேண்டலால்
விண்ணடைந்த தில்லையோ
புண்ய வாரியே நித்ய. (தேவகன்னி)

---

81. *Air* :—How kind it is of you to come.
Hymn book by the Christian Bros. No. 109.

1 தேவகன்னி ராஜேஸ்வரி
தீதணுகாத தாபரி
மாவருள் சேர் தாய் மாமரி
|| : மைந்தர்களெம்மை யாதரி : ||

2 சுந்தரி புண்ய வாரியே
தொல்பவ நீங் காதாரியே
எந்துகள் போக்காய் சீரியே
|| : யோக வளன் றன் பாரியே : ||

3 சேசுவின் சீர் நிவேசமே
தேவ ஸ்பிரீத்து நேசமே
நீசரெம் பாவ தோஷமே
|| : நீக்கி ஈவாய் வான் வாசமே: ||

4 பம் முடி பூண்ட காரணி
பன்னரும் ஞான ஊரணி
எம்மில் நின்றே நீ தாரணி
|| : இன்பொழித் தாள்வா யாரணி: ||

5 வெஞ்சுடரின் குப்பாயமே
வேய்ந்த தாயே யாம் மாயமே
மிஞ்சு பேய்த் தந்த்ரோபாயமே
|| : வெல்ல நீ செய் சகாயமே: ||

---

82. *Air:*—**Benissons Marie.**

Vade Mecum, 3rd Vol: No. 167.

சரணங்கள்

1 தேவ கன்னித்தாயே
தீதில் மரியாயே
ஜீவ மூலி நீயே
தீயேமை யாள்வாயே.

பல்லவி

தாயே தாயே தாய் மாமரியே
தாயே தாயே நீ யாதரியே.

2 வானுலக ராணி
மன்னும் யாக்கோ பேணி
ஞான மூறுங் கேணி
நன்னர் மோக்ஷக் காணி. (தாயே)

3 தாவீது குமாரி
சஞ்சூசையின் பாரி
பாவியுய் வாதாரி
ப்ரானணி சரீரி. (தாயே)

4 பாவ நோய் மிகுந்து
பாவிகள் நலிந்து
தாவினேம் நின் இந்துத்
தாளலரைத் தந்து. (தாயே)

5 பிள்ளைகளெம் மீது
பேரன்பு வையாது
தள்ளுவையேல் யாது
தம்ப மெங்கட் கோது. (தாயே)

6. தன்னலே வான்மீனே
சாற்றுந் தெய்வ மானே
மண்ணோ ரெம்மை வானே
வாழ்விப்பாய் நீ தானே. (தாயே)

---

83. *Air* :—**Yes Heaven is the Prize.**
Hymn Book by Christi an Bros No. 129.

சரணங்கள்.

1. சருவ தாபரி
தகை மனோகரி
தருணம் ஈதம்மா
தயை செய்தாதரி.

பல்லவி.

தாயே தாயே தயை செய்தாதரி

2. கனமுள பவ
வினையின் மூழ்கியே
உனை யடைந்தனம்
ஓ! தேவனைப் பெற்ற. (தாயே)

3. மரணந் தீர்வையை
மனத் தெண்ணமலே
இருள் செய் வாஞ்சையால்
ஈன வழிப்பட்டோம். (தாயே)

4. பொருணசையிலும்
புவிநசையிலும்
அறிவிலாமல் யாம்
ஆழ்ந்தே நலிந்தனம். (தாயே)

5. கடந்த நாளில் யாம்
நடந்த மார்க்கமே
தொடர்ந்திடாமல் மா
தூயோரைப் பின் செல்ல. (தாயே)

6. தவத்தினுலுஞ் செய்
செபத்தினுலுமே
பவத்தில் நீங்கி யாம்
பரகதி பெற. (தாயே)

7. தினையளவும் எம்
மனதில் ஏனம் யாம்
இனி நினைர்ந்திடா
தென்றுந் தவஞ் செய. (தாயே)

8. கண்ணீரினுலி யாம்
பண்ணும் பவங்களை
மண்ணிற் றுடைத் துயர்
வானுட்டிலே யுய்ய. (தாயே)

---

84. *Air :*—**Sing Praises to Mary.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1. ஓ ! தயாபரியே
ஓ ! க்ருபா கரியே
மாதயை புரியே
மாமரி நீயே.

பல்லவி.

எம்தாய் மாமரியே
மரியே மரியே
எம்தாய் மாமரியே
தயை செய்குவாய்

2. பாபத்தில் விழுந்தே
பன்னு முள்ளம் நைந்தே
ஆபத்து மிகுந்தே
அண்டினேம் வந்தே. (எம்தாய்)

3. நீயே எம்மாதாரம்
நீக்கு பாவப் பாரம்
தீயே முக் கிந்நேரம்
செய் யுபகாரம். (எம்தாய்)

4. தீயாரென் றெம்மீது
சீர் விழி நோக்காது
நீ இருந்தாற் றீது
நீங்குமோ ஓது. (எம்தாய்)

5. தீதென்னுந் தூர்க்கந்தச்
சேற்றினிற் புதைந்த
பாதகர் திருந்தப்
பாதப் பூ தந்த. (எம்தாய்)

85. *Air:*—"**Tis the month of Our Mother.**"

Hymn Book by the Christian Bros. No. 52.

சரணங்கள்.

1. ஜென்ம மாசணுகாத
தேவதாயே காரணியே
நன்மை சேரும் ப்ரசாத
ஞான மூறும் ஊருணியே.

பல்லவி.

வாழ்க தேவதாயே
வாழ்க தேவதாயே
வானநாதன் சேயே
மைந்தரா மெமை ஆட்கொள்வாயே.

2. தூய சூசையின் பாரி
சோதிபரன் ஆதனியே
மாயப் பேயின் சங்காரி
வானோர் போற்றும் ராக்கினியே. (வாழ்க)

3. பேய் செயு மாயத் தின்மை
பெயர்த் தெறியு மலையே
தாய் நீயே யன்றி எம்மைத்
தாபரிப்பார் வேறில்லையே. (வாழ்க)

4. தின்மை மார்க்கத்திற் சென்றே
தேம்பி யுள்ளமே யுடைந்தோம்
எம்மை ஆட்கொள்வை இன்றே
ஏழை மகார் வந்தடைந்தோம். (வாழ்க)

5. பாவ பாசம் நீ தீராய்
பானுடை யணி காத்ரியே
தேவ நேசமே தாராய்
தேர் வேந்தரானோர் கோத்ரியே. (வாழ்க)

86. *Air* :—"**Sing O my lips**."

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1. மாசற்ற நித்ய கன்னித்தாய்
மரியே தாபரி
யேசுக்கிறீஸ்துவை யிரந்
தெமை நீ யாதரி

பல்லவி

தாய் மரியே தயாபரியே
தாத ரெமை யாதரியே

2. தீமைக் குணுங்கின் மாயையாற்
றியங்கி நின் பதம்
யாமக்களோடி வந்தனம்
இரங்குவாய் நிதம் (தாய்மரி)

3. திக்கற்ற பேர்க்குத் தஞ்சமே
தீயா ரெமக்குற்ற
இக்கட்டில் நீ தயை செய்வாய்
எந்தேவனைப் பெற்ற (தாய்மரி)

4. பாபச் சகதி மூழ்கியே
பரிதபிக்கின்ரோம்
ஆபத்திதனி லாட் கொள்வாய்
அங்கை குவிக்கின்ரோம். (தாய்மரி)

5. உன்னுதர வடைந்திட
உவகை கூரம்மா
இன்னுவொழித்து வான்வழி
யிலெம்மைச் சேரம்மா. (தாய்மரி)

---

87. *Air*:—"**Hail Virgin dearest Mary.**"
Hymn book by the Chirstian Bros. No. 54.

பல்லவி.

ஓ! தேவ கன்னித்தாயே
உலக ரட்சகி
தீதாரெம் பாவ நோயே
தீர்த்தாளெம் நாயகி.

சரணங்கள்.

1. ஆதாம் பவ சம்ஹாரி
ஆஞள் புதல்வி நீ
மாதீய ருய்வாதாரி
வானோர் முதல்வி நீ. (ஓ! தேவ.)

2. ஆதிக் கனியின் மாசில்
லாதே பிறந்தனை
மாதர்க்கு ளென்றும் ஆசி
வரஞ் சிறந்தனை. (ஓ! தேவ.)

3. முட்கண் மத்தியத்தின் மேலாய்
முளைத்த லீலி நீ
வெட்கப் பேய் பாம்பைக் காலால்
மிதித்த சீலி நீ. (ஓ! தேவ.)

4. மெய்யான வேத நூலி
மேலோக ராணி நீ
வெய்யோ னணிந்த மேலி
விண்ணோறு மேணி நீ. (ஓ! தேவ.)

---

88. *Air* :—"**Macula non est in te.**"

Hymn Book by the Christian Bros. No. 58.

சரணங்கள்.

1. ஆதிதேவ தேவை ஈன்ற
அன்னையே க்ருபாகரி
மாதயை செய் தாத ரெம்மேல்
மாசிலாத மாமரி.

பல்லவி

மாசிலாத மாமரி
மாசிலாத மாமரி
மாசிலாத மாமரி
மாசிலாத மாமரி.

2. தீமை வாரி வீழ்ந்துலைந் துன்
சேயருன்னை யண்டினோம்
மாமலர்த்தாள் தந்துதவாய்
மாசிலாத மாமரி. (மாசிலாத.)

3. சீரி சூசை பாரி எங்கள்
தீமை போக்கி யாதரி
வாரியின் சீர் தாரகையே
மாசிலாத மாமரி. (மாசிலாத.)

4. தாசரெங்கள் தோஷம் நீங்கத்
தஞ்சந் தந்து தாபரி
வாசம் வீசும் ரோசாப்பூவே
மாசிலாத மாமரி. (மாசிலாத.)

5. தீயரெம்மைத் தூயராக்கிச்
சேர்த்திடுவாய் மோக்ஷமே
மாயப் பேயை வென்ற சன்ம
மாசிலாத மாமரி. (மாசிலாத.)

89. *Air :*—**Reine Des elus**.

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி

வானோரின் ராணியே மாநன்மைக் கேணியே
வல்ல பரமன்முன் மன்றாடியே
ஈனோரா மெங்களின் நீச மண்ணாசைகள்
யாவு மொழித்தருள் பங்கிரீடியே—*bis.*

சரணங்கள்.

1. தீதாரலகை யோய்விலாமற்
செயு மாயையிற் றேம்பி நும்
பாதாரவிந்தந் தஞ்ச மென்றே
பானாருந் தேகியே வந்தோம்
தாதாவின் சேயே தேற்றுவீர்
சர்வேசனெமக்கே தந்த
தாய் நீர் தாய் நீர் தஞ்சம் நீரம்மா
சஞ்சலம் யாவு மாற்றுவீரே. (வானோரின்.)

2. சேயரெம்மைக் கெடுப்ப ஞான்றும்
தீப்பேயோ டெம் முடலமும்
மாய ப்ரபஞ்சமும் செய் வஞ்சம்
வானோர்கணாயகி திவ்ய
தாயகியே கண்ணோக்குவீர்
சர்வேசனெமக்கே தந்த
தாய் நீர் தாய் நீர் தஞ்சம் நீரம்மா
கற்பனை யாவும் நீக்குவீரே. (வானோரின்.)

3. பூவாழ்வினி லெமக்கு நேரும்
பொல்லாங்கிலும் விசேஷமாய்ச்
சாவானதில் பேய் செய் தந்த்ரத்தும்
தாஞன தாபரனின் மா
தாவே யன்பாய் காப்பாற்றுவீர்
சர்வேசனெமக்கே தந்த
தாய்நீர் தாய்நீர் தஞ்சம் நீரம்மா
தாத ரெம்மைக் கையேற்குவீரோ. (வானோரின்.)

---

90. இங்கிலிஷ் இராகம்.

சரணங்கள்

1. ஓ! தேவனை நீயே
ஒரு பரமன் சேயே—நீ
உள்ளம் வைத்தாட்கொள்வாய் நிதமே
மாதாவே மஞ்சாயே
மாசிலா தெழுந் தூயே—நின்
மைந்தர் வந்தோம் நொந்துன் பதமே

பல்லவி

தாய் தாய் தாய் தேவதாய்
தாய மலோற்பவத் தாய்—நின்
தாட்பூவை நாடிவந்தோம் தாதர் ஓடித்
தயைசெய்வாய் தயைசெய்வாய் கன்னித்தாய்

2. தீதார் பேயின் வாது
தின மிகு தெம்மீது—க்ருபை
செய்யா யன்பு வையா யுவந்தே
ஆதாரம் வேறேது
அனை யுனை யல்லாது—நீ
ஆளாய் நாளுந் தாளிணை தந்தே (தாய்.)

3. ஏவை யென்னும் நாரி
இடரறுத்த சீரி—என்
றென்றுந் துத்ய மென்றுந் துத்யமே
பாவ மோட்டுதாரி
பகர் கருணை வாரி—நீ
பட்சம் வைத்தாள் நித்தம் நித்யமே (தாய்)

4. தாவீ தேந்தல் கோத்ரி
தயை வளரு நேத்ரி—நீ
தஞ்சமா யெம்மை யாதரியே
மூவாத சற்பாத்ரி
முப்போதினுங் கன்யாஸ்த்ரி—ஓ
முற்றும் பரிசுத்த மரியே. (தாய்)

5. வானுளும் ப்ரதான
மாராணியே மெய்ஞ்ஞான—நல்
வாசம் வீசும் ரோசா புஷ்பமே
ஆனுளருள் மோன
அருமை மகளான—துன்
பாழ் கடல் கடக்குந் தெப்பமே. (தாய்)

6. விண்ணோர் போற்றுஞ் சீலி
வெய்யோ னணியு மேலி—தார்
வேந்தன் சாலமோ னாலயமே
மண்ணோர் பரிபாலி
மதி மிதித்த காலி—சீர்
மன்னுந் தூய சொர்ன மயமே. (தாய்)

91. இங்கிலீஷ் இராகம்.

பல்லவி

தாய்மரியே விழிபார்—தேவ
தாய்மரியே விழிபார்—தேவ
தாய்மரியே விழிபார் விழிபார்—தேவ
தாய்மரியே விழிபார்.

சரணங்கள்.

1. பேய் மதி கொண்டலைந்தே—செய்யும்
தீமைகளா லுலைந்தே—இளஞ்
சோமனை மிதித்த பொற்றாமரை மலரடி
யாமடைந்தோம் அடைந்தோம்—தேவ. (தாய்)

2. எந்தை பரற் கேலாப்—பவ
நிந்தைகள் வருத்துவித்தே—இதோ
சிந்தை வருந்தியே நொந்தழுதனையுனை
மைந்தர்கள் வந்தடைந்தோம்—தேவ. (தாய்)

3. மீனணியுஞ் சிரசி—உயர்
வானவர்கட் கரசி—மிக
ஈன ரெமக்கருள் மோன மளித் துயர்
வான வழி செலவே—தேவ. (தாய்.)

4. அனை யுனை யல்லாது—இந்த
வினைஞர்க் குதவி யேது—திரு
மனமுவந்துன தருந் தனையனை இரந்திவண்
அனவரத மெம்மீது—தேவ. (தாய்)

5. தற்பரன் மாதாவே—திவ்ய
அற்புத மலர்க்காவே—எமை
இப்பொழுதினு மரணப்பொழுதினு மேதும்
சற்பனை யணுகாதே—தேவ. (தாய்)

---

92. *Air :*—**Berger, Berger voistula bas** ?

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி

ஓ! மாதாவே பாவிகட் கென்றுந் தஞ்சமே
உம்பர் போற்றும் உன்னத தேவன் றாயாரே
உயர் கதிக் கிறைவியே
ஓ! கருணை வாரிதியே
உமதடைக்கல மென
ஓடி வந்தோம் நும் மடியேம்
சமய மீதே தீயாராம்
எமை நீர் கைவிடாதேயும்.

சரணங்கள்

1. தீமை வழி யாம் நடந்தே
சிந்தை மிகவே நலிந்தோம்
பூமி யுடல் பேய் மயக்கும்
பொல்லாத மாயை யனந்தம்
நீர் மனதிரங்கிறு லல்லாதே
நீசர் யாங் கரையேறக் கூடாதே
சோமபாதிய பயந்தராதே
||: தாயனே யுமை விடுவதேதே.: ||
(ஓ! மாதாவே)

2. பாவிகளின் தாபரமே
பாவமாம் நோய்க் கௌஷதமே
தாவினோம் யாம் தேவனைநும்
தாமரை நேர் பொற்பதமே
ஜீவகனி தரு ரோசாப்பூவே
சிறந்த புண்ணிய மலர்க்காவே
ஏவைபெயரகற்றுமாவே
||: எங்கள் துயரை நீக்கு மாதாவே.: ||
(ஓ! மாதாவே)

3. தாசர் புரி தோஷ மறத்
தாரணியில் நீர் பயந்த
நேசமுள்ள சேசுவின் முன்
நீரோர் வார்த்தை சொன்னு லந்த
ஈசனெம் பிழையை மன்னிப்பாரே
இனிய வரங்கள் தருவாரே
மாசில்லாப் பரம தாயாரே
||: மகனை மன்றாடி யருள்வீரே.: ||
(ஓ! மாதாவே)

---

93. *Air* :—**Joy of my heart.**

Hymn book by the Christian Bros. No. 53.

1. ஓ! கன்னித்தாய் மாமரி வா
னோர் தொழுஞ் சுசீலி மஞ்சாம்
வாகனி தேவன் புதல்வி
மண்ணுலக மீட்பரின் தாய்
ஈகைபவர் மீபவராம்
இஸ்பிரீத்து-சாந்து வென்னும்
மாகருத்தன் மித்ரி யொளிர்
வைகரை நக்ஷத்ரி மகா
யோக வளன் பாரி எமை
என்று மன்பா யாதரியே.

2. வானுலக ராணி யெழின்
மன்னும் யகோ பேணி நன்மை
ஞான நிறை யூறணி மன்
னன் சலமோ னூலயி விண்
மீனணி யெண்மைச் சிரத்தி
வெண்மதி யாரும் பதத்தி
பானணிந்த தேகி வெய்ய
பாவிகட்குத் தஞ்சமே எம்
ஏனமுற்று நீவி யெமை
என்று மன்பா யாதரியே.

3. தாவலகையைச் சிதைத்த
சாயகி மா த்யாகி சன்ம
பாவமிலா துற்பவித்த
பாக்கியவதி பன்னு நித்ய
சாவொழித்த ஜீவாமுதே
தாப முற்றூர்க் காதரவே
பூவுலகுக் காண்டவளே
புத்திரனை நீ யிரந்தே
எவையின் மகார்க ளெமை
என்று மன்பா யாதரியே.

---

94. *Air* :—**Salve pater Jesu mei.**

'*Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.*

பல்லவி.

வாழ்க எம் திவ்ய மாதாவே
மைந்தரா மெம் துன்பம் நீவே
வாழ்க ஒ! ரோசாப்பூவே
வாழ்க! வாழ்க!!

சரணங்கள்.

1. ஆழ்கடலின் தாரகையே
ஆரின் மீது வெம்பவத்தில்
மாழ்கினோர்க் காதாரமே
வாழ்க ! வாழ்க !! (வாழ்க.)

2. சேசுவின் தாய் மாமரியே
தேசன்னாள் ஜொக்கீனின் சேயே
மாசற்ற கன்யாஸ்த்ரியே
வாழ்க ! வாழ்க !! (வாழ்க.)

3. ஏழையின் மகார்களான
எம் சந்தோஷ காரணியே
மாவருட் ப்ரவாகியே
வாழ்க ! வாழ்க !! (வாழ்க.)

4. வென்றி நோயன் பேழையே மெய்
வேத நூலியே ப்ரக்யாதி
மன்றவீது கோத்தரியே
வாழ்க ! வாழ்க !! (வாழ்க.)

5. பானுடை யணிந்த தேகி
பன்னிரு பம் க்ரீடியே
வானுல கிறைவியே
வாழ்க! வாழ்க !! (வாழ்க.)

---

95. *Air* :—**Contemplons le celest Archange.**
Vade mecum, 3rd Vol : No. 168.

சரணங்கள்

1. தீயார் பேய் புவி யோயா தென்றுஞ்
செய் வெம் போரினில் யாம் வெல்லச்
சேயரா மெமக்காயே க்ருபை
செய்வீர் ஆண்டவனே நல்ல.

பல்லவி.

தாயாரே தயைகூருந் தேவ
தாயாரே விழி நீர் பாரும்
தாயாரே தயைகூருந் தேவ
தாயாரே சரணந் தாரும்.

2. பொன்றுந் தீய சரீரப் பற்றுற்
புன்மைத் தீங் கெதுஞ் சாராதே
என்றுங் கற்புளோராகச் செய்வீர்.
எம்மைத் தாய்துணை வேறேதே. (தாயாரே.)

3. சாவான பவத்தில் வீழாமற்
சாகுங்காறு நீர் காப்பாற்றும்
தேவாதிபரன் சேயே எம்மைச்
சீர் வானும் புவியும் போற்றும். (தாயாரே.)

4. பொல்லாதார் வழி செல்லா தாரிற்
புண்யஞ் செய்துயவே நாளும்
நல்லாயே யருள் செய்வீ ரெம் மன்
றுட்டைக் காருண்யராய்க் கேளும். (தாயாரே.)

---

96. *Air* :—**C'est Le nom De Marie.**
Vade Mecum, 3rd Vol: No. 106.

பல்லவி.

ஓ! கன்னியர் முதல்வி
ஓ! அன்னை மாமரி
ஏகன் திருப் புதல்வி
எமை நீ ஆதரி.

சரணங்கள்.

1. சன்மப் பவ மிலாத
தாயே மஹேஸ்வரி
நன்மை ப்ரவாகி தஞ்சம்
நல்கி நீ யாதரி. (ஓ! கன்னியர்.)

2. உன்றாளலரடைந் துன்
உதவியைக் கெஞ்சி
மன்றாடுவோர்க் கிரங்கும்
மாதாவே ஆதரி. (ஓ! கன்னியர்.)

3. ஏன வழிப் பட் டுள்ளம்
இனையு மெங்கட்கா
மோன முடிவில் நாதன்
முன் வேண்டி ஆதரி. (ஓ! கன்னியர்.)

4, பாபத் தமிழ்ந்தெம்மீதே
பரத் குண்டாகிய
கோபத்தை யாற்றி யெங்கள்
குறை தீர்த் தாதரி. (ஓ! கன்னியர்.)

5. அழியும் எம் சரீர
ஆவாலினித் தீயேம்
பழி வழி செலா்மற்
பாதுகாத் தாதரி. (ஓ! கன்னியர்)

6. பொல்லாப் பைசாசம் ஞான்றும்
புரி வெம் போரில் யாம்
வெல்லத் திடன் தந்தென்றும்
விமலி ஆதரி. (ஓ! கன்னியர்)

7. அபத்த லோக வின்ப
மதனில் த்வேஷமும்
தபத்தின் மேல் விழைவுந்
தந் தெமை ஆதரி. (ஓ ! கன்னியர்)

---

97. *Air :*—**O, Marie, O Mere Cherie.**
Vade Mecum, 3rd Vol : No. 149.

பல்லவி

அன்னையே உன்னை நம்பினோம் யாம்
ஆட்கொள்வாய் கைவிடாயம்மா இவ்வமயம்
ஆண்டவள் நீயலால் ஆதரவா யெமை
ஆரி லாதரிப்பா ருண்டோ.

சரணங்கள்.

1. ஓ ! மரியாயே பூ மீதே
உன் மகராம் நீயே மாற்றும்
தீமை தவிர்ப்பாய் ஓயாதே
தேவுலகில் வானோர் போற்றும். (அன்னையே)

2. இன்றளவும் தீங்கால் சென்ற
ஈனர் யாமேனும் எம்மீதில்
மன்றயை கூரம்மா வுன்றன்
மைந்த னிரங்கச் செய் நீதில். (அன்னையே.)

3. மாவருள் சேர் நின் மேலான
மன்றாட்டுதவி கேட்டோரில்
யாவர் அடையாதார் மீவான்
ராக்னி க்ருபை கூரெம் பேரில். (அன்னையே.)

4. தீயே மினிமே லெம் பாவத்
தீங்கில் விழாமற் காப்பாற்றே
நாயகி மாண்பாருன் தேவ
நந்தனி யெந்துயர் மாற்றே. (அன்னையே,)

5. மண்ணை வஞ்சத்தா லெம் தேக
வாஞ்சையால் நைகின்றும் பாராய்
எண்ணில் தயாளி அன்பாக
எங்கட்குன்றன் சரண் தாராய். (அன்னையே.)

6. நீ விழி நோக்கி யிவ்வைய
நீசப் பற்றுற் றீயேம் நெஞ்சம்
தீவினை நாடாமற் செய்யத்
தீவிரிப்பாய் நீயே தஞ்சம். (அன்னையே.)

---

98. *Air :*—**Le Monde en Vain.**
Vade mecum, 3rd vol : No. 29.

1. மாசில்லாத மாமரி நினையே நின்
மைந்தர்கள் யாம் கேட்கு மன்றுட்டத்தின்
ஓசைக் குன்றன் சீர்கா தீயாத தேனே
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

2, எண்மானஞ் சீர் இல்லார் மா நீசரென்றே
எம்மேற் க்ருபை வையாயேல் உய்யோமே
ஒண்மை சேர் தாய் நீயன்றித் தஞ்சமுண்டோ
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

3. ஈனமான வேனத்தில் வீழ்ந்தோ மெய்யே
யேனும் எம்மைத் தள்ளல் நன்றோ தீயேம்
ஊனப் பேயின் கைப் புகுந்தயர்வோமோ
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

4. தன்மைந்தர் செய் தா வன்னே பொருளாயின்
தாலமீது நோற்பார் யார் சொல்லம்மா
உன்மகன் சொல் வாக்கால் நின் மைந்தர் யாமே
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

5. இன்னலாழ்ந்துன் ஏர் சரண் வந்தோர் தம்மில்
ஈரம் பெருர் யாரோ வானிறைவி
உன்னலர்த்தாள் நம்பினோர் துன்புருரே
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

6. ஈறு மோனே யில்லா நாதன்முன் இந்த
ஏழைகட்கா நீ மன்ருடி யெந்தம்
ஊனெழிப்பத் தாமதம் செய்யலாமோ
ஓ! மாதாவே தாண்மலர் நீ தாராய்.

---

99. *Air* :—**L' etendard De Marie.**
Vade mecum, 3rd Vol : No. 127.

சரணங்கள்

1. தாயே யுன்றன் பாதார விந்தம்
தஞ்ச மென்றே தீயேம் வந்தோம்
நீயே எந்தம் துன்ப நிர்ப்பந்தம்
நீக்கியரு ளம்மா நொந்தோம்.

பல்லவி.

இந்த வேளே எந்துயர் தீர்
இந்தணிபாதி யுன்னேயே
யா மடைந்தோம் நீ யிரங்கத்
தாமதமேனே அன்னேயே. } *bis.*

2. தேதோமேதுமில் வான் வீதி யாரில்
தோஷம் புரிந்து வெம்பினோம்
வாமோற்பனி நீ யெங்கள் பேரில்
வை க்ருபை யுன்னை நம்பினோம். (இந்த வேளை.)

3, தானுனவன் செல்வி தயாளி
தண்ணார்மலர்க் கண்ணோக்குவாய்
மா நீதிமான் சூசை மணாளி
மைந்தரொமைக் கைத்தூக்குவாய். (இந்த வேளை.)

4. மா தீயராம் எம்மை நீ நோற்றே
மாதாமரி மன்றாடியே
வேதாவலோன் கோபத்தை யாற்றே
விண்ணிறைவி பங் க்ரீடியே. (இந்த வேளை.)

5. ஆதாரம் நீ யல்லாமல் யாரோ
அம்மா விடோம் நின் பாதமே
மாதேவனுன் சொல்லைத் தள்ளாரோ
யாற்றிரங் தின்றெம் ஏதமே. (இந்த வேளை.)

---

100. *Air :*—**Echos Du Sanctuaire.**

Vade Mecum, 3rd Vol : No. 130.

பல்லவி.

எந்தாய் சர்வேசன் தாய் மா
சில் கன்னித்தா யெமைக் கண்பார்
இந்தார் நின் சரண் நீ தந்
தெளியரா மெந்துயர் தீர்.

சரணங்கள்.

1. ஓ! மரியாயே வானோர் தொழுந் தூயே
உன்னத மோக்ஷத்தினி ராக்கினியே
சேய்முகம் நோக்கி யெந்தீ தொழிப்பாயே
தீதில் பரமன் திரு வாதனியே. (எந்தாய்.)

2. தேகத்தின் வாஞ்சையினல் நித்ய தேவ
தேவபிரான் திருவுரை கடந்தே
மா குற்றவாளர்களாயினேம் பாவ
மார்க்கந் தனிலின்றளவும் நடந்தே (எந்தாய்.)

3. ஈனப் பேய் மாயையில் வீழ்ந் துயர் வான
ராச்சியத்தின் நித்திய பேறிழந்தே
தீநர காக்கினைப் பாத்திரரான
தீய ரெமமீது தயை நீ சுரந்தே. (எந்தாய்.)

4. என்றுந் தீயார்களெமை யழல் வீழ்த்த
ஈனப் பைசாசந் தந்திரஞ் செய்யுதே
நின்றயை நாடினோர் தந்துயர் தீர்த்த
நேயி யோயாமலெம்முள்ளம்நையுதே.(எந்தாய்)

5. நாளு மிப்பூவுலகோ டழற் பேயால்
நண்ணுந் தந்திரத்திலும் எம் மரண
வேளையில் நேரும் வெம்போரிலு மீயாய்
வேலயி னிலவுடுவே சரணம். (எந்தாய்.)

101. *Air :*—**A Saint Louis De Gonzague**.

Vade Mecum, 3rd Vol: No. 184.

1. அன்னையே மாசற்ற மரி
யாயே நீயலால் வேறு தஞ்சம்
இந்நீணிலத் தெமக் குண்டோ
ஏர் வானீஸ்வரி யேசுவின் றாய்
உன்னையே நம்பினோம் நீயெம்
உன்றன் மைந்தன் முன் எமக்காகக்
கன்னித்தாய் நீ மனுப் பேசிக்
காத் தெமையாட் கொள்ளுவாயம்மா.

2. பூவிலெங் தேக வாஞ்சையாற்
புன்மைத் தீவழி சென்றிழைத்த
பாவங்களால் நித்யாக்கினைப்
பாத்ரராகி நின் பங்கயத்தாள்
தாவினோம் தாவினோர் தம்மைத்
தாங்குந் தன்மை யுள்ளவளான
நீவிழி நோக்கி எந்தீமை
நீத் தெமையாட் கொள்ளுவாயம்மா.

3. சால மோனலயி ஜொகீம்
சந்த வன்னம்மாள் தந்த செல்வி
வேலை நக்ஷத்ரி பானணி
மேலி தாவிது வேந்தர் கோத்ரி
ஞாலமீதுள்ள நைந் தீதோ
நல்லா யுன்னை நோக்கி யாம் கூவும்
ஓலங் கேட்டெம்மை நீ எந்தம்
ஊனொழித்தாட் கொள்ளுவாயம்மா.

4. பேயகந் தேக மோய் வின்றிப்
பீடை மேலிடும் பான்மை யாற்றும்
தீய வமரில் யாம் வெலத்
திண்மை தந்தெதுந் தீங் கெய்தாமல்
நேய தாயிவ் வமையமும்
நீசரான நின் மகார் யாங்கள்
மாயும் போதுந் தய வெம்மேல்
வைத் தெமையாட் கொள்ளுவாயம்மா.

---

102. *Air* :—**O Tendre Mere.**

Vade Mecum, 3rd Vol : No. 131.

சரணங்கள்.

1. தாராய் நீ தஞ்சம்
பாராய் பேய் வஞ்சம்
தாய்மரி யெமை வெய்ய தீவினை
சாராமற் காவே
ஓ! ரோசாப் பூவே
தாலமும் வானுந் தொழுந் தேவனே.

பல்லவி.

தாராய் தஞ்சம்
தாராய் மாதாவே

2. நாதன் சொன் மீறித்
தீதாரிற் சேறி
நாளெல்லாங் கழித்தனம் அன்னையே
மீதிக் காலத்தில்
ஓதும் புண்யத்தில்
வீறச்செய்வை நம்பினோ முன்னையே (தாராய்)

3. வானோரின் ராணி
மாநன்மைக் கேணி
வல்ல பரமன் முன் மன்ருடியே
ஈனோரா மெங்கள்
மாநீசப் பங்கம்
யாவு மொழித்தருள் பங்கீரீடியே. (தாராய்)

4. சென்ற நாட் போக
இன்று தொட்டேக
தேவனருண் மறையின் வீதியே
நன்ரு யாம் சேறி
வென்றியோ டீறில்
நாதன் பதம் பெறச்செய் க்யாதியே. (தாராய்)

---

103. *Air* :—**Tu meurs, Joseph !**
Vade mecum, 3rd Vol : No. 179.

சரணங்கள்.

1. ஓ ! நாயகி பரம தேவதாயே
ஓ ! வானவர் போற்றும் ராஜேஸ்வரி
ஈனோரெமைப் புரந்தருளுவாயே
இவ்வேளை நீ கைவிடாய் மாமரி.

பல்லவி.

மாமரி கைவிடாய் நீ
மாதாவே கைவிடாய் நீ
மாமரி நின் சரண் யாம் நம்பினோம்
யாம் நம்பினோம் எம்மை நீ கைவிடாய். *bis.*

2. வேதா வுரை கடந்து பாவ வாரி
வீழ்ந்தோ மெமை ஜீவ தயாபரி
நீ தாமதஞ் செய்யாது தாங்குதாரி
நீசரென்று கைவிடாய் மாமரி. (மாமரி.)

3. பன்னுந் தயை மகோததி யெந்தீமை
பாராமலுன் அன்போர்ந்து தாபரி
மன்னன் சலோம ஞலயி தீயேமை
வை க்ருபை நீ கைவிடாய் மாமரி. (மாமரி.)

4. ஈராறுடுக் கிரீடி யாம் செய் நன்மை
எண்மானுமில்லை தீமையே பரி
வேருன்றெமி லினியெனு நற்றன்மை
வீறச் செய்வாய் கைவிடாய் மாமரி. (மாமரி.)

5. அந்தோ செய முயலுதே பொருமை
ஆர் பேய் பொலாங் கென்றுஞ் சுபாகரி
எந்தா யறிகுவாயே எம் ஏலாமை
ஈறுமட்டுங் கைவிடாய் மாமரி. (மாமரி.)

---

104. *Air* :—**Je L'ai Jure**.

Vade Mecum, 3rd Vol : No. 133.

சரணங்கள்.

1. சென்ம மாசில்லாத கன்னிமாதாவே
சேணுடும் பூவும் போற்று மீஸ்வரி
நன்மை ப்ரவாகி ரோசா வென்னும் பூவே
நன்மார்க்கஞ் சேர் தீயேமை மாமரி

பல்லவி.

ஓ! மாமரி ஓ! மாமரி க்ருபாகரி
ஓ! வான ராக்கினி
ஓ! மாமரி ஓ! மாமரி
உன் மகாரா மெமை
இன்னே நன்மார்க்கஞ் சேராய்.

2. அராவுருப் பேயை நசுக்குங் காலி
அநாதியின் செல்வி மனோகரி
நராதிபர் குலத்தி மாசுசீலி
நன்மார்க்கஞ்சேர் தீயேமை மாமரி (ஓ! மாமரி.)

3. பானுருந் தேகி தொல் பவ சம்ஹாரி
பங்க்ரீடி சோமபாதி தாபரி
ஞானோற்பனி சூசை முனீந்த்ரர் பாரி
நன்மார்க்கஞ்சேர் தீயேமை மாமரி (ஓ! மாமரி.)

4. பவவினை மூழ்கி நைந்துன்னை நாடிப்
பரமதாயே வந்தோம் யாம் புரி
நவை பிரான் மன்னிக்க நீ மன்றாடி
நன்மார்க்கஞ்சேர் தீயேமை மாமரி (ஓ! மாமரி.)

5. இவ்வாரிதி யழிந் திவண் மண்ணுங்கும்
எம் அங்கஞ் செய் போரிற் றயாபரி
நவ்வாய் நீயே காப்பாற்றி மோக்ஷமேகும்
நன்மார்க்கஞ்சேர் தீயேமை மாமரி. (ஓ' மாமரி.)

105. *Air :*—**Nous Voulons Dieu !**

Vade Mecum, 3rd Vol: No. 150.

சரணங்கள்.

1. ஓ! கன்னித்தாய் நன்மை ப்ரவாகி
உன் திருப்பூம் பாதந்தாவே
ஏகனின் சேய் பானுடைத் தேகி
எந்துயரிவ் வேளை நீவே.

பல்லவி.

எந்தாய்மரி இவ்வேளை எம்மைக் கண் பாரம்மா
நொந்துன் சரண் வந்தோ மீதோ நின்
மைந்த ரெம் துன்பந் தீரம்மா. } *bis*

2. பாவ வினையால் மன நோகப்
பண்ணினோம் வேதாவை நீயே
தேவ முனை வாற்றி யன்பாகச்
செவ்வழி யெம்மைச் சேர்ப்பாயே (எந்தாய்.)

3. தீ நரக பாத்திரரான
தீயர்க ளெம்மைக் காப்பாற்றே
வானிறைவி யாம் புரி யேனம்
மாயச்செய் நீ செய்யற்பாற்றே. (எந்தாய்.)

4. பூவும் விண்ணும் போற்று முரோசாப்
பூவே தய வெம்மேல் வையே
பாவ மனஸ்தாபந் தன் தாசா
பாசத்தை வென்றுய்யச் செய்யே. (எந்தாய்.)

5. பாவமினிச் சீவன் போனாலும்
பண்ணாமல் யாமாவலோடே
ஜீவிய நாட் புண்ய மேன்மேலும்
செய்யச்செய் நீவாய் வான்வீடே. (எந்தாய்.)

---

106. *Air :—* **Il Est Ne Le Divin Enfart.**

Vade Mecum 3rd Vol : No. 37.

"மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் மந்திரம்.

பல்லவி.

தேவதாய் பதந் தந்தாள்வீர்
தீமைக் குள்ளான எந்துன்பந் தீர்த்
தேவதாய் பதந் தந்தாள்வீர்
தேயா நும் சரண் வந்தோம் யாம்.

சரணங்கள்.

1. தாவில் தாயிரக்கமுள்ள
தாயுந்தந் தஞ்சமா வந்தெம்மைக்
காவென்றிங் கிரந்தோ ரும்மாற்
கைவிடப்பட்டாரோ அம்மா. (தேவதாய்.)

2. கன்னிய ரிறைவி தூய
கன்னியே க்ருபைத் தாய் நும் தானில்
இன்ன நம்பிக்கையால் யாமே
ஏவப்பட்டிதோ வந்தோமே. (தேவதாய்.)

3. தீப்பாபத் துழன்றே நொந்த
தீயே மூச்செறிந் தேங்கித் தாய் நும்
காற்பூவில் நும் க்ருபைக்காகக்
காத்தாவலா நிற்கின்றோமே. (தேவதாய்.)

4. ஓதார்மீ தவதாரஞ் செய்
யுந்தே வார்த்தையின் தாய் எம் வேண்டல்
மாதா வன்பொடு கேட்டிந்த
மைந்தர்க் கீவீர் யாவுந் தந்த. (தேவதாய்.)

"க்ருபை தயாபத்து" மந்திரம்

107. *Air :*—**O Sacerd Heart.**
Crown of Jesus music book No 180. (ii)

1. ஒ! க்ருபை தயாபம் நிறை
உயர் தாய் மாமரியே
உத்தமி எம் ராக்கினியே
உன் சீர் பத விந்தம் வாழ்க.
நிதம் வாழ்க, நிதம் வாழ்க.

2. எம் சீவியமே, தஞ்சமே
எம் மதுரமே வாழ்க
இகபர மெந்நாளுமே
இனிது போற்றனே வாழ்க
தினம் வாழ்க, தினம் வாழ்க.

3. ஏதமுறு மடியவர்
ஏக பரதேசிகள்
ஏவாளின் மைந்தர்களியாம்
இனி துனைநோக்கி இதோ
அழைக்கின்றோம், அழைக்கின்றோம்.

4. மாய இந்த கண்ணீர் கணவாயிலே நின்றயர்ந்து
மன்னி ப்ரலாபித் தேம்பியாம்
வருந்தியே அழுகின்றோம்.
எறிகின்றோம், எறிகின்றோம்.

5. ஆதலா லெங்கட்கா வேண்டும்
அன்னையே தேவாதனி
அருண் நிறை நின்சீர் விழி
அடியவர் பேரில் ஈவாய்
அருள் செய்வாய், அருள்செய்வாய்.

6. ஈதன்றியே ஈனர் யாங்கள்
இப் பரதேசமதை
இவண் கடந்த பின்னருன்
ஏக சுதன் றரிசனம்
எமக்கீவாய், எமக்கீவாய்.

7. நீ க்ருபாகரி த்யாபரி
நீ நிகரில் பேரின்பம்
நிறை ரசமான கன்னி
நீ மாமரி நீ தாய் எம் தாய்
நீ தாய் எம்தாய், நீ தாய் எம்தாய்.

8. சேசுக்றீஸ்து நாதரருள்
சீர் வாக்குகளுக்கு யாம்
திருப்பேறு பெற்றிடவே
தேவனே நீ மன்றாடுவாய்
என்நாளுமே, என்நாளுமே.

108. *Air* :—**Regarde, O Vierge Immaculee.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1. தீமை வழியே யாம் தினம்
திரிந் தலைந்தே வந்தனம்
பூமியுடல் பைசாசஞ் செய்
பொல்லாத மாயையால் மிகவே நைந்தனம்
நீர் மனதிரங்கினு லல்லாதே
நீசர் யாம் மீறக் கூடாதே
சோமபாதிய நீர் தராதே
தூய அனை யுமை யாம் விடுவதேதே.

பல்லவி

சன்ம மாசற்ற கன்னித்தாயே பரன்சேயே!
எம்மை விழி நோக்கி இவ்வேளை யாள்வையே
ஓ! தேவ அன்னையே ஓ! மாமரியாயே
மாதீயரா மெம்மேல் மனதிரங்காயோ—*bis.*
மனதிரங்காயோ

2. பாவிகளின் தாபரமே
பாவமாம் நோய்க் கௌஷதமே
தாவினேம் யாம் தேவன்னை நும்
தாமரை நேர் மலர் பொற்பாதவிந்தமே
ஜீவ கனி தந்த ரோசாப்பூவே
சீரும் புண்ய மலர்க்காவே
ஏழை பெயரகற்று மாவே
எங்கள் துயரை நீ நீக்குவாய் மாதாவே (சன்ம.)

3. தாசர் புரி தோஷ மறத்
தாரணி தன்னிலே வந்த
நேசமுள்ள யேசுவின் முன்
நீரொரு வார்த்தைமாத்திரஞ் சொன்னாலந்த
ஈசனெம்மை மன்னித்திடுவாரோ
நேச ஆசீர் தருவாரோ
மாசில்லாத் தேவன்தாயே நீரோ
மகனை மன்றாடி எமக்கருள்வீரோ. (சன்ம.)

---

109. *Air* :—**A Notre Dame De Lourdes.**

Vade Mecum 3rd Vol : No. 158.

1. ஜென்ம மாசற்ற தாய்
சர்வேசனின் தாய்
நன்மை சேர் கன்னித்தாய்
நைந்தோம் க்ருபை செய்

பல்லவி.

மாதாவே மாதாவே
மாதாவே க்ருபை செய் } *bis.*

2. வானோர் போற்றும் ராணி
மாமோக்ஷ காணி
ஞான முறுங் கேணி
நல்லாய் க்ருபை செய். (மாதாவே.)

3. திங்களணி காலி
சீர் ஜெபமாலி
புங்கணுற்ரும் லீலி
பூவே க்ருபை செய். (மாதாவே.)

4. சுந்தரி ப்ரக்யாதி
தூய வான் வீதி
என் துன்பம் தீர்த் தாதி
பன் சேய் க்ருபை செய். (மாதாவே.)

5. மாமரி எம் யேதம்
மன்னித்தே போதம்
தா மைந்தருன் பாதம்
தாழ்ந்தோம் க்ருபை செய். (மாதாவே.)

---

110. *Air :*—**Laisse-moi Quitter cette terre.**
Vade Mecum, 3rd Vol : No. 128.

பல்லவி.

ஜென்ம மாசில்லாத சுசீலி
சேசுவை ஈன்ற தாய் மாமரி
நன்மைக் கேணி பானணி மேலி
நல்லாய் நீ யாதரி. } *bis*.

சரணங்கள்

1. அன்னையே உனை நம்பினோம் தீயேம்
அள்ளல் வீழும் பேயின் வஞ்சம்
தன்னிலெமைக் காப்பாற்றுவாயே
தாபரி வேறுண்டோ தஞ்சம். (ஜென்ம.)

2. என்றுமே எமைக் கெடுக்கக் கூளி
எண்ணிச் செய்த மாய்கை ஆபத்தில்
உந்தன் க்ருபை நாடித் தயாளி
ஓடி வந்தோம் நின் பாதத்தில். (ஜென்ம.)

3. வை தயை பாவிகளா மெம் பேரில்
வான ராக்னி பேயோ டொன்றி
மெய் தாரணி செய்யும் வெம் போரில்
வேண்டுமெமக் கீவாய் வென்றி. (ஜென்ம.)

4. யாமுயி ரளவு மினி வெய்ய
வேனத்தில் த்வேஷம் கொண்டிங்கே
தீமை யாது மிலாரா யுய்ய
செய்தருள் மோக்ஷத்தின் பங்கே. (ஜென்ம.)

---

111. *Air :*—**Tendre Marie.**
Vade Mecum, 3rd Vol : No. 126.

பல்லவி.

ஓ ! மரியாயே தீமைக்குள்ளாகி
உன் சரண் யாம் வந்தோம்
தாமதம் நீ செய்யாம லபயம்
தாராய் தாயே தீராய்
எந்தம் துன்பம் தீராய்.

சரணங்கள்.

1. சோமனணிந்த பாதி க்யாதி
தோன்றல் தாவீது கோத்திரி
யாமுனை நம்பினேம் வான் வீதி
எம்மை யன்பாய் நீ யாதரி. (ஓ ! மரியாயே.)

2. பானணி மேலி தேவன் சேயே
பம் முடி வேய் மஹேஸ்வரி
ஈன வலையில் வீழ்ந்தோம் நீயே
எம்மைக் கைதூக்கி யாதரி. (ஓ ! மரியாயே.)

3. பாவிகள் தஞ்சம் நீ யல்லாது
பாரினில் வேறுண்டோ பரி
தாபிகளாய் நொந்தோம் எம்மீது
தாய் தவிர்த் தெம்மை யாதரி. (ஓ! மரியாயே.)

4. உன்னை யிரந்தார் மீதுன்னாலே
ஒண்மை பெரு ருண்டோ மரி
யன்னை யெம் வேண்டல் கேட்டுன்காலே
அண்டும் எம்மை நீ யாதரி. (ஓ! மரியாயே.)

---

112. *Air :*—**Vois a Tes Pieds Vierge Marie.**

Vade mecum, 3rd vol : No. 134.

சரணங்கள்.

1. ஓ! மாசற்ற கன்னியே தாயே
உன்னத தேவனின் சேயே
தீமை தனி லுழன்று நையுஞ்
சேய் முகம் பார்த்தாதரிப்பாய்.

பல்லவி.

தாயே நீயே என் தஞ்சமம்மா
ஆயே தூயே மைந்தர் யாம் நம்பினோம்
தாயே தயை வாரிதி யருள் செய்வாய்
தன்னருள் நீயே செய்வாய்
தண்ணருள் நீ செய்வாய்.—தாயே! தாயே!

2. மாதவி தேந்தல் என்பார் கோத்ரி
வானவர் போற்று மாமரி
சீதமதித் தாளலர் நம்பும்
சேய ரெமை யாதரிப்பாய். (தாயே.)

3. பூவினன் சாலமோன் முன் செய்த
பொற் சினகரமே பேதைப்
பாவிகள் பாழ் நரகில் வீழாப்
பாது காத்தே யாதரிப்பாய். (தாயே.)

4. வாமமன் வெய்யோனணி தேகி
வான் மீன் ஞெளிர்ந்திடுஞ் சென்னி
நேமியின் தாரகையே எந்தம்
ஆமயந் தீர்த்தாதரிப்பாய். (தாயே.)

---

113. *Air* :—**Tendre Madone.**

Vade Mecum, 3rd Vol : No. 121.

பல்லவி

மங்களம் என்றும் மாமரியாயே
மாசணுகாப் பரன் சேயே
திங்களணி பாதந் தந்து நீயே
தாசர்க் கருள் செய்வாய் தாயே.

சரணங்கள்.

1. நீயே இரக்கத்தின் ரூய் என்று பூவே
இயம்புதல் வீணே புண்யக் காவே
ஆயே எம் வேண்டுதற்குச் செவிதாவே
வெம்பி நின் பாதம் வந்தோம் மாதாவே.
(மங்களம்.)

2. தீயார்களா யாயினேம் ஆகிலுமே
சிந்தை யுறப் பெற்ற தாயிலுமே
நேயமுள்ளாள் நீ யெனப் பார் சொலுமே
நீ கைவிடிற் சத்துரு கொலுமே. (மங்களம்.)

3. அன்றும் இன்றும் என்றுங் கன்யா ஸ்திரியே
பன்னிரு வேந்தர் தங் கோத்திரியே
என்றும் புவிவான் புகழ் தோத்திரியே
எந்துயர் தீர்ப்பாய் சற்பாத்திரியே. (மங்களம்.)

4. பாவிகளா மெந்தம் ஏனம் நீ போக்கு
பன்னுந் துன்பம் யாவையுமே நீக்கு
தேவுலகினுக்குப் பாத்திரராக்கு
தின்மை எமைச் சாராது கண்ணேக்கு.
(மங்களம்.)

---

114. *Air* :—**Je Suis L'enfante De Marie.**

Vade Mecum, 3rd Vol: No. 112.

பல்லவி.

ஓ! தேவதாய் மரியே நீ தாபரி
உன் மகாராம் எம்மை வான் சேகரி
உனதபயமே நம்பி யாம் வந்தோம்
ஓ! கன்னித் தாய் நின் பத விந்தம்
கருணை வாரிதி கிருபை நீ செய்வாய்.

சரணங்கள்.

1. அற்புத தேவ தாய் மரியே
அன்பாய் நீ யருள் புரியே
தேவாதி தேவன் தாதர்க் குன்னைத்
தாயாகத் தந்ததால். (ஓ ! தேவ.)

2. தீது புரிந் துளம் வெம்பினோம்
தாய் நின் சேவடி நம்பினோம்
தீயரா மெங்கட்கா விரங்தெம்
தீமை யகலச் செய். (ஓ ! தேவ.)

3. வஞ்சனை செய் பேயின் மாயையால்
வருந்து மெளிய ரேமேல்
மாதயை நீ புரியாதேயால்
மைந்த ருய்வோமோ சொல். (ஓ ! தேவ.)

4. முப்பொழுதுங் கன்யாஸ்திரியே
முனிவர் சூசை பாரியே
முத்தியின் நேர் வழிதனில் யாம்
நித்த மொழுகவே. (ஓ ! தேவ.)

---

115. *Air* :—**Chretiens Qui cherchez un appui.**
Vade mecum, 3rd Vol : No. 61.

பல்லவி.

ஓ ! வானரசி மாமரி
ஓ ! மாசிலா ராஜேஸ்வரி
ஜீவாமுதே தாயே தயாபரி
தீயேமை நீயே ஆதரி.—*bis.*

சரணங்கள்.

1. தேவாதி தேவனருள் செல்வியே
சேசுவை ஈன்ற மாதாவே
தாவே நீ யுன்றன் பங்கயத் தாளிணை
தாயே எம்தாய், தாய் நீ எம்தாய் } *bis.*

2. பாராளும் வேந்தர் தமின் கோத்ரியே
பானணி திவ்ய காத்ரியே
தாராயோ வுன்றன் பங்கயத் தாளிணை
தாயே எம்தாய், தாய் நீ எம்தாய். } *bis.*

3. சுந்தரி தாய் நீ புண்ய வாரியே
சூசை முனீந்த்ரர் பாரியே
தந்தாள்வா யுன்றன் பங்கயத்தாளிணை
தாயே எம்தாய், தாய் நீ எம்தாய் } *bis.*

---

116. *Air* :— **Ils ne L'auront Jamais.**

Vade Mecum 3rd Vol. No. 197.

பல்லவி.

தாய் மாமரி தயாபரி
தாதரெமை நீ ஆதரி
தார் வேந்தன் தாவீது கோத்ரி
தருணம் ஈதம்மா
தாய் நீ தயை செய் தாதரி.

சரணங்கள்.

1. மாய ப்ரபஞ்ச ஈனமாம்
வாழ்வை இவண் யாம் நண்ணி
தீயா ராயினோம் அந்தோ
தீதாம் மாபவம் பண்ணி. (தாய்.)

2. அந்தோ துன்ப முற்றன்னை நின்
அலர்த் தாளிணை நாடி
வந்தோ மிவ்வமையமே
மைந்தனை நீ மன்ருடி. (தாய்.)

3. மைந்தன் முன்னம் நீ கேட்கின்ற
மன்ருட்டைத் தாய் தள்ளாரே
இந்த வேளை தீயராம்
எம்மைத் தூயே கண்பாரே. (தாய்.)

4. பாராயோ வுன்னடியேம் யாம்
பாரிற் படும் நிர்ப்பந்தம்
தாராயோ இவ்வேளை நின்
சீர்ச் சரணார விந்தம். (தாய்.)

அர்ச் : லூர்து மாதா பேரில்

117. *Air :*—**Les Saints Martyrs.**

Vade Mecum 3rd Vol. No. 185.

சரணங்கள்.

1. மாசில்லாக் கன்னியே தேவனை மாமரியே
மைந்தன் றனை யிரங் தெம்மை நீ ஆதரியே
பாழ் நரகப்பேய் செய் பாசமதா லிவண்
பாவிகள் யாம் நலின் தனையுனை யடைந்தோம்
பாராயோ எங்குறை பரமனை நீ வேண்டி
தீராயோ தீதிலாத் தாயே.

பல்லவி.

ஓ! மாமரி ஓ! ராஜேஸ்வரி
உம்பரென்றும் போற்று மஹேஸ்வரி
ஓ! மாமரி ஓ! லூர்தனை மரி
உன்ருளிணை தந்தெம்மை யாதரி.—*bis.*

2. ஒதும் மசபியேல் குன்றினில் அன்று நீ தாய்
வீறுகுல மாது பெர்னதேத்தினுக் கீய்தாய்
மன்னர் குலக் கன்னிகையே தெரிசனை
வாமமார் மாமலரினை யணிந்த தாளே
பாராயோ எங்குறை பரமனை நீ வேண்டி
தீராயோ தீதிலாத் தாயே. (ஓ! மாமரி.)

3. பாவிகளின் தஞ்சம் என்றுந் தாய் நீ அலவோ
பன்னு மெந்தங் குறை யாவர் முன் யாம் சொலவோ
தேவுலக ரர்க்னி செல்வி மனோகரி
தாவில் நாமே அமல வுற்பவ மென்ருய் நீ
பாராயோ எங்குறை பரமனை நீ வேண்டி
தீராயோ தீதிலாத் தாயே. (ஓ! மாமரி.)

அர்ச். வியாகுலமாதாவின் பேரில்.

118. *Air :*—**N. D. Des Sept Dolueurs.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி

வியாகுலத்தாய் மாமரியே நீ
விள்ளரும் நின் புத்திரனும்
ஏகபரன் பாடுகள் எந்தம்
இதயத்திற் பதியச் செய் } *bis*

சரணங்கள்

1. தேவதிருச் சேய் பூவின் மீதே
தீயார்கள் யாம் செய்யும் வரைவிலாப்
பாவங்கட்காப் பட்ட வெண்ணில்லாப்
பாடுகள் நீ பார்த் தனு ரமிழ்ந்தும்
பான்மை யுள்கித் தயை செய்வாயம்மா. (வியா)

2. தீர்க்கமதா வாலயத் தன்று
சீமையோன் சொல் தீர்க்கதரிசன
வாக்கியத்தைக் கேட்டயர் வெய்தி
மன்னுண்ணேந்தே மாதுய ரமிழ்ந்தும்
மாசற்ற தாய் தயை செய்வாயம்மா. (வியா.)

3. தீயவெரோ தண்ணல் நின் திவ்ய
சேயைக் கொல்லத் தேடும் பொழு தன
ராயன் வெய்ய வஞ்சத்துக் கஞ்சி
எஜிப் தேகி இடுக்க ணமிழ்ந்தும்
ஈஸ்வரி நீ தயை செய்வாயம்மா. (வியா.)

அர்ச். உத்தரீய மாதாவின் பேரில்.

119. *Air :*—**Vous etes toute pure.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி.

ஓ! தேவ கன்னித்தாயே
உத்தரீய மரியே
மாதாவே நம்பினேம் உனை
மைந்த ரெம்மை நீ யாட்கொள்வாய்
மாதாவே மாதாவே
எம்மை நீ யாட்கொள்வாய். } *bis*

சரணங்கள்.

1. மோசே கண்ணுற்றிடு நவீன
முட்சாலமே ஞான
வாசம் வீசுமு ரோசாப்பூவே
மறுவில் குணப் பொறையே. (ஓ! தேவகன்னி)

2. கார்மேல் பருவத்தின் மாண்பே
கன்யர் முதல்வியே
சீர்மே வெலியாஸ் முனர்க்கண்ட
திருவார் முகிலுருவே. (ஓ! தேவகன்னி)

3. தீதில் சீமோ னெஸ்தோக் கென்பார்க்குச்
சீர்க்காட்சி தந்திவண்
ஆதரவாக வுத்தரீயம்
அளித்த வருட் சுனையே. (ஓ! தேவகன்னி)

4. வாயன்றலர்ந் தென்று மிவ்வாடை
மண்மீ தணிகுவோர்
தீயில் விழா ரென நவின்ற
திருவே பரன் சுதையே. (ஓ ! தேவகன்னி.)

5. உன்னத மோக்ஷ ராக்னியே நின்
உத்தரீயச் சபை
தன்னைச் சார்ந்த தமியரா மெந்
தமைத் தாபரித்தருளே. (ஓ ! தேவகன்னி.)

---

120 தமிழ் இராகம்

பல்லவி.

உனது பத மலர் நம்பி வந்தோம்—அம்மா
ஒரு துணை யில்லை மாதாவே
உனது பத மலர் நம்பி வந்தோம்.

அநுபல்லவி.

தனை நிகரில்லாத் தற்பரன் சேயே
சன்மப் பாவ மணுகா மரியாயே. (உனதுபத.)

சரணங்கள்.

1. கன்னியரை விளைவிக்கின்ற இன்பரசமே
கன்னியர்க் கரசியே கனிமை குன்றா மலரோ
கன்னியர் சூழ்ந்தென்றுந் தொழுஞ் செய
சீலியே

கற்பைச் சிநேகிக்கும் அற்புதத் தாயே
உன்னிடமா யடியேம்—ஈதோ
ஓடிவந்தே மனம் வாடி நொந்தே சொல்லும்
மன்னும் எம் வேண்டுதற்கு நீ திருச் செவி
சாய்க்க
மனதிரங்கிட வேண்டும் மாதாவே. (உனதுபத.)

2. சாவொரு நாளுண்டே யாவு மழிந்துபோமே
தரையி னின்பசுகங்கள் தபனன் முன் பனி
யாமே
பூவில் யாம் பேணி வளர்த்திடு முடலமு
மையோ
புழுக்களுக் கிரை யெனப் புழுத் தழிந்திடுமே
தேவனேயே இதை யாம்—என்றும்
சிந்தனை செய்து நிர்ப்பந்த வுலகின்பத்தை
நீவி யெங்களிலுள்ள யாவு முனக்களிக்க
நீ யருள்வாய் லீலி நிகர் தாயே. (உனதுபத.)

4. அற்ப உலக வாழ்வின் ஆசைதனை வெறுத்து
அழியுஞ் சரீர இச்சை வழியை மறுத்தெமது
கற்பை யுனது திருப் பொற்பதந் தனில் யாங்கள்
காணிக்கை செலுத்த நீ கருணைபுரிவாய்
பற்பல ஏதுவினால்—எம்மைப்
பரித்தியாகஞ் செய்யுங் கருத்திற் றளர்வுறுமல்
உற்பனியே விழி நோக்கி யெமக் கிவ்வேளை
உறுதி தாராய் ரோசாப்பூவே. (உனதுபத.)

4. தந்தை தாய் சகோதரர் உறவினர் நேசம்
சாம்போதுதவுமோ வீணுமல்லோ அவர் பாசம்
சிந்தை யுழலுஞ் சமுசார துன்பசாகரம்
சீவனளவும் பெருஞ் சிலுவை யதுவே

சுந்தரியே யடியோர்—இந்தத்
தொல்லேயில் நீங்கியே நல்லறஞ் செயவருள்
தந்து தாய்தமர்களால் நேரும்சோதனேயெலாம்
ஜயிக்க மனத்திடனேத் தருவாயே. (உனதுபத.)

அர்ச். சூசையப்பர் பேரில்.

121. *Air*:—" **Let us all Sing**. "

Music for this Canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி.

கைத்தாதையே கைத்தாதையே
கர்த்தாவின் கைத்தாதையே } *bis*.
காத்தாள்வாய் நீ எம்மையே

சரணங்கள்,

1. நித்தியாதி திருச்சுதனே
நிர்மல மரியாயி தனே
இத்தல மீது காத்தோய் எம்மை
ஏர் விழி பார்த்தருள் நீரய்யா. (கைத்தாதை.)

2. பாவ மார்க்கத் துழன் றுலேந்தே
பாச மாயையால் மிக நைந்தே
தாவினேம் நீ யாதார மென்றுன்
தாச ரெம் மாசறவே செய்வாய். (கைத்தாதை.)

3. தோமிலோய் கன்னித்தாய் மணாளா
சூசை மாதவ சுகுணாளா
தாமதம் செய்திடாம லுன்னருள்
தந்திது வேளை புரந்திடாய். (கைத்தாதை.)

---

122. *Air :*—**Volez, Volez, Anges De La Priere.**
Vade Mecum, 3rd Vol: No. 177.

பல்லவி

ஓ! சூசை மாமுனீந்த்ரனே தூயோனே
ஓ! கிருபைத் தயாளனே
மாசில் தேவை வளர்த்த தாதாய்
மாண் பொன்றும் வளனே வாழ்க நீ.—*bis*)

சரணங்கள்

1. ராசாக்கள் கோத்ரத்தில் வந்தோனே
ஈரறத்தும் பயன் பெற்றோய்
வாசமாமலர்க் கொடியோனே
வாழ்க என்றென்றும் வாழ்க நீ (ஓ! சூசை.)

2. தேவ வரங்களால் நிறைந்தோய்
தேவ தாயின் மணாளனே
மாவிரத்தனே நன்கமர்ந்தோய்
வாழ்க என்றென்றும் வாழ்க நீ. (ஓ! சூசை.)

3. தீமை யுததி மூழ்கி நைந்தே
தேம்புந் தீயேமை யாள் பத
மாமலரிவ் வமையந் தந்தே
வாழ்க என்றென்றும் வாழ்க நீ. (ஓ! சூசை.)

---

123. *Air* :—**A Saint Joseph patron De La Bonne mort.**

Vade Mecum, 3rd Vol : No. 178.

சரணங்கள்.

1. சூசை முனீந்த்ரரே
தோமில் கன்னி மாதாவின்
நேச பத்தாவே மாண்பார்
நீதிமானே திவ்ய
சேசுவைப் போஷித்த
செய்ய கைத்தாதையே எம்
மாசொழித் தீற்றில் நல்
மரணந் தாரும் நீர்.

பல்லவி.

நல்ல மரணந் தாரும்
நாதா நீயேங் கட்கே
தொல்லாரில் நீரல்லால்
துணையுண்டோ தாயோராம்
சூசை முனீந்த்ரரே.

2. நாதன் பொற் கையினில்
நன்னர் மரியாய் கையில்
நீதிலரே நீர் மாய்ந்து
தேவுலகில் மான்மியம்
சோதியினுற் பெற்றீர்
துஞ்சுவோர் தஞ்சமே எம்
மாதுன்ப வீற்றில் நல்
மரணந் தாரும் நீர். (நல்ல மரணம்.)

3. தீயெ மினிமே லெம்
சீவிய காலங் காறும்
தூய வழி சென் றெந்தம்
தோடங்கட் குவ் வாற்றி
நேய பிராணையே
நேசித் தொழுகச் செய்தே
மாயும் எம் மீற்றில் நல்
மரணந் தாரும் நீர். (நல்ல மரணம்.)

---

124. *Air :*—**Benissons a Jamais.**

Vade Mecum, 3rd Vol : No. 25.

பல்லவி.

மாமலர்க் கோலோனே
மாசில் சேசுவின் கைத்தாதையே
தேமருவுஞ் சூசை மாதவா
செய் க்ருபை ஐயனே
தீங்கில் மூழ்கி நைகின்ருேம்.—*bis.*

சரணங்கள்

1. பூமேதினியை நீத்தோய்
பொன்ஞட்டிறை சேயை
மாமரியைக் காத்தோய்
மாதிய ரெந்துயர் தீராய். (மாமலர்.)

2. தாவீ திறைவர் கோத்ரா
சகோ பென்பார் சேயே
மாவபய நேத்ரா
மாதிய ரெந்துயர் தீராய். (மாமலர்.)

3. தாவில் முனீந்த்ரா வேனத்
தாவில் வீழ்ந்தே தேம்பும்
மாவினைஞரான
மாதீய ரெந்துயர் தீராய். (மாமலர்.)

---

125. *Air* :—Montre-Toi Notre Pere.

Vade Mecum, 3rd Vol : No. 176.

சரணங்கள்.

1. சேசுவின் கைத் தாதாவே
திவ்ய கன்னித்தாயின்
மாசில் பத்தாவே வாழ்க
வாழ்க என்றும் வாழ்க.

பல்லவி.

நீர் வாழ்க என்றும் வாழ்க
நிமல தாதையே
சூர்மே வெம் தீமை நீவும்
சூசை முனீந்த்ரரே. } *bis.*

2. நாதனைத் தேவ தாயை
ஞால மிசை தாங்கும்
மாதகை நீதிமானே
வாழ்க என்றும் வாழ்க. (நீர் வாழ்க.)

3. மாமரி கையில் நாதன்
மாண் கரத்தில் மாய்ந்தே
வாம விண்ணு டடைந்தீர்
வாழ்க என்றும் வாழ்க. (நீர் வாழ்க.)

4. தேவனுக்குப் பின் வானில்
சிரேச்யசிஷ்டரில்
மாவிறல் கூர்ந்தோர் நீரே
வாழ்க என்றும் வாழ்க. (நீர் வாழ்க.)

---

126. *Air :—***I With Grateful Hearts.**
II. Holy Patron! Thee Saluting.

I Hymn Book by the Christian Bros. No. 98.
II ,, ,, No. 96.

சரணங்கள்.

1. சேசுவின் சீர்க் கைத்தாதாவே
செம்மை சேர் நீதிமானே
மாசில் கன்னித் தாய் பத்தாவே
மாதவரே தோத்ரமே.

பல்லவி.

சூசை மாமுனீந்த்ரே நும்
தூய தாளடைந்தோம் யாம்
தாசரெம்மேற் க்ருபை கூர்ந்து
தஞ்சமீவீர் தோத்ரமே. } *bis.*

2. தேவ தாய்க்குப் பின்னர் வானில்
சிஷ்டரின் மாப்ரதாபம்
கோவிறைவனு லடைந்தீர்
கோதிலாரே தோத்ரமே. (சூசை மா.)

3. வஞ்சப் பேயின் மாயை தன்னில்
மாழ்கித் தீயாராஞேம் யாம்
அஞ்ச லென்றிவ் வேளை யெம்மை
ஆண்டருள்வீர் தோத்ரமே. (சூசை மா.)

4. ஐயனே நும் பூங்கரத்தில்
ஆருந் தேவ மைந்தன் முன்
வெய்யவ ரெமக்கா வன்பாய்
வேண்டியாள்வீர் தோத்ரமே. (சூசை மா.)

---

127. *Air* :—**Glorious Mother.**
Hymn Book by the Christian Bros No. 55.

சரணங்கள்.

1. தவ மாமுனியே தாதாவே
தாய் மாமரியைத் தகைசேர்
புவி மீட்பரை யன்பாய்ப் பூவில்
புரந்தோய் வாழ்க என்றுமே.

பல்லவி.

சூசை மாமுனியே வாழ்க
தூய தேவன் கைத்தாதையே
மாசேது மில்லாதவா வாழ்க } *bis.*
வாழ்க நீ என்றும் வளனே. }

2. விறல் சேர் தவிதென்பார் கோத்ரா
வேலை யுலகை வெறுத்தோய்
நறு மாமலர்க் கோலோனே மா
நலத்தோய் வாழ்க என்றுமே. (சூசை.)

3. தரை வானுலகம் போற்றும் வே
தாவின் மலர் கைத்தலத்தில்
மரியன்னையின் சீர்ப்பூங் கையில்
மரித்தோய் வாழ்க என்றுமே. (சூசை.)

4. இரு சீரறத்தும் பேரோங்கி
ஏர்வான் முடி யீறிலனும்
பரனு லடைந்தோய் மா மான்மியம்
படைத்தோய் வாழ்க என்றுமே. (சூசை.)

---

128. *Air:*—"**Te Joseph Celebrent.**"

1. ஓ! சூசை மாதவா தாத ரெம்மீது மா
நேசம் வைத் தேகன் முன் நீ இரந்தே யெமை
மாசிலராக்கி வான் வாழ் வடையச் செய்வாய்
வாழ்க வாழ்க நீ வாழ்கவே.

2. தேவதாயின் மணவாளனே நாளும் யாம்
தீவினை வாரியில் வீழ்ந்து துன்பாழ்ந்து மா
பாவிகளாயினோம் பாரில் யாம் செய் மகா
பாவ மாசெலாம் நீவுவாய்.

3. மீட்பராம் நாதனே வேலை சூழ் பூவினில்
கீழ்ப்படிந்தாருனக் காதலாற் ருதை நீ
கேட்பதை வேதனே ஈயாதிருப்பரோ
க்ருபை செய்குவாய் ஐயனே.

4. உன்னுதரவினை நம்பி யிவ்வம்புவி
தன்னிலிரந்த தடைந்திடா தில்லை யென்
றுன்னக் கன்னி தெரேசம்மாள் நவின்றதை
ஓர்ந் தெம்மீ தருள் கூர்ந்திடாய்.

---

129. இங்கிலீஷ் இராகம்.

சரணங்கள்.

1. தேவாதி சுதனே
திரித்வைக தற்பரனே—இச்
சீருலகிலே வளர்த்தவா
பூவாற் கோல் தழைக்கப்
புவி எங்குங் களிக்க—மா
பூரண வரங்கள் பெற்றவா.

பல்லவி

ஓ! சூசைமாமுனியே
ஓ! சூசைமாமுனியே—வா
னோர் போற்றுந்தேவை உலகிற்காத்தோய்
[தாவே—ஐயன்
உன்றுள் ஐபனுன்றுள் முனியே.

2. தாவீ தேந்தல் பாலா
தகை சேருஞ் சுசீலா—எங்
தாய் மரியின் தூய் மணாளனே
நாவாற் சொல்ல வேலா
நவவருளின் மேலா—எந்
நாளு மெம்மை யாள் தயாளனே. [ஓ! சூசை.

3. தாய் மாமரி துய்ய
தற்பரன் பணி செய்ய—ஓ
தத்துவ மிகுத்த தூயனே
தீயேங் தம்ப மற்றும்
சிந்தாகுல மிங்குற்றும்—தயை
செய்வாய் தயை செய்வாய் நேயனே
[ஓ! சூசை.

அர்ச். யாகப்பர் பேரில்.

130. *Air* :—"**Let us all sing.**"

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி.

சந்த்யாகையா சந்த்யாகையா
த்ஞ்சம் நீ க்ருபை செய்வாய் } *bis*
தாதர் எங்கட்கே துய்யா.

சரணங்கள்.

1. அந்தம் ஆதியிலாற் குவந்தோய்
ஐயனே வரங்கள் நிறைந்தோய்
பந்த பாவத் துழன் றுலேந்தே
பாவிகள் உன் சரண் மேவினேம். (சந்த்)

2. சீருளோய் ரக்ஷகனும் ஏக
தேவனால் அப்போஸ்தலனாகப்
பேருலகிற் றெரிந்து கொள்ளப்
பெற்றவா வெம்மை ஆள் நற்றவா. (சந்த்)

3. தீதில் வேதோபதேசம் ஆரில்
செய்து நன்கிழைத்தோனே நேரில்
சாதுவே க்யாதனே மெய் வேத
சாட்சியே எம்மை ஆள் மாட்சிசேர். (சந்த்)

131. *Air* :—“ **Te Joseph Celebrent.**”

1. ஓ அர்ச்யசிஷ்ட யாகப்பரே பொற்புறும்
பூவிற் சேசுபரன் றேர்ந்த நற் சீடரே
பாவச் சகதியில் வீழ்ந்தோம் கைதூக்கும் எம்
பாதுகாவல ராஞேரே.

2. கலிலெயில் நுமைக் கர்த்த னழைத்திட
வலையைத் தாதையை விட்டவர் தம்மையே
நலமாப் பின்சென்றீர் யாமும்மைப் பின்செல
நல்குவீர் வரம் நல்குவீர்.

3. நாதன் மோக்ஷத்திஹுக் கேகிய பின்னிவண்
யூதா சமாரியா நாடுகளிற் றிரு
வேதம் போதித்திடுவோரே தாரும் அருள்
வேதத்தில் விசுவாசமே.

4. மாய வித்தைத் தொழிற் செய்திடு மாகொடுந்
தீயஞன எரமோசனைச் சேசுவின்
தூய திருமறை சேர்த்தீர் பேய் மாயையில்
தோல்வி யாமடையா தாள்வீர்.

5. உம்மைக் கொல்லக் கொடுசென்ற வோர் சேவகன்
செம்மைப்பட வரம் தந்து காத்தீரிவண்
எம்மிற் றயைசுரந் தென்று நல்லோர்களாய்
யாமுய்ய வரமீகுவீர்.

132. *Air* :—**Benissons a Jamais**.

Vade Mecum, 3rd vol : No. 25.

பல்லவி

ஐயனே யேசுவின்
துய்ய அப்போஸ்தலனுனே
துங்கனே சந்தியாகையனே
எங்குறை தீர்த்திடாய்
பங்கயத்தாள் நம்பினேம்—*bis.*

சரணங்கள்.

1. ஆரில் அமலன் அன்று
அழைத்திடவே சென்று
ஈறிலான் சீடனுய்
ஆன்ற வேதிகையுமானுய். (ஐயனே)

2. யூதா சமாரியாவின்
யாங்கு நாடுகள் யாவும்
வேதா போதேசஞ்செய்
வேதியனே சாட்சியே மெய் (ஐயனே)

3. தீய எரமோசன் உன்
தன்னுல் மனந்திரும்பி
தூய மறைசேர
தூயோனே நீக்ருபை செய்தாய்.(ஐயனே)

அர்ச். ஞானப்பிரகாசியார் பேரில்,

133. *Air* :—**Holy Queen We bend before thee.**

Hymn book by the Christian Bros. No. 195.

சரணங்கள்

1. தேவ ப்ரசாதம் நிறைந்த
தேசுறு முனிந்த்ரரே
மேவினே மடியேம் உம்மை
மென்பதந் தந்தாள்வீரே.

பல்லவி.

நாளும் எம்மை யாட்கொள்வீரே
நன்மை சேர் மாதூயோரே
நாளும் எம்மை யாட்கொள்வீரே
ஞானப்ரகாசியாரே

2. ஒன்பதாம் வயதிற்றுனே
உத்தம விரத்தராய்
உம்பர் கோனி னூழியத்திற்
கும்மைக் கையளித்தோரே. (நாளும்)

3. இந்நிலந் தனைத் துறந்தே
ஏர் பரன்மேல் நீர் வைத்த
பன்னரும் ஸ்நேகத்தினுலோர்
பத்திஜ்வாலகர் நீரே. (நாளும்)

4. சாலும் நும் சரீரந் தன்னைத்
தண்டித்தே பகைத் திவண்
வாலர் கன்னியர்க் கெஞ்ஞான்றும்
மாதிரிகையானேரே. (நாளும்)

5. தேசுறுஞ் சேசுசபையின்
தீபமே நீரே, பெற்றீர்
மாசிலா நடக்கையாலோர்
வானவ னெனப் பேரே. (நாளும்)

134. *Air* :—"**The youth who wealth and Courts despised.**"

Hymn book by the Christian Bros. No. 104.

சரணங்கள்

1. வானோனென ப்ரதாபிக்கும்
மாதூ யோராம் அர்ச்யசிஷ்ட
ஞானப்ரகாசியாரே நும்
நாண்மலர்ச் சரணீவீர்.

பல்லவி.

ஓ! தாதரின் ஆதரவே
தயை நீர் செய்குவீர்
ஓ! தாதரின் ஆதரவே செய்குவீர்
தயை நீர் செய்குவீர்.

2. மிக்குள்ள தேவ ஸ்நேகத்தின்
வேக மென்னு மழகிய
ரெக்கைகளாற் பறந்து பே
ரின்ப வீடடைந்தீர் நீர். (ஓ! தாதரின்.)

3. ஒன்பான் வயதில் நுங் கற்டைப
உம்பர் கோன்றனக் கீந்துல
கின்பம் வெறுத்தே வான்றலத்
தின் முடியடைந்தீர் நீர். (ஓ! தாதரின்.)

4. ஓதுந் தவ மார்க்கந் தனில்
உம்மைப் பின்பற்றி என்றும் யாம்
தீதின்றியே நடந்துயச்
செய்வீர் க்ருபை செய்வீர் நீர். (ஓ! தாதரின்.)

அர்ச். ஸ்தனிஸ்லாஸ் பேரில்.

135. *Air :*—**L'ombre S'etend Sur La Terre.**

Vade Mecum, 3rd Vol : No 129.

சரணங்கள்.

1. தேவுலக வாசிகளில்
சீர் துதியராகிய
மாவரம் உயர் தனிஸ்லாஸ்
மாதவரே வாழ்கவே.

பல்லவி.

நீர் வாலர் பாதுகாவல்
நீர் வாலரின் தஞ்சம்
பார் மீதெமை யருட்கண்
பார்த்தெஞ் ஞான்றும் ஆட்கொள்ளுவீர்.

2. உன்னத சேசுசபையில்
ஓதும் நும் வாழ் நாளெல்லாம்
சன்னியாசரா யிலகும்
சாதுவே நீர் வாழ்கவே. (நீர் வாலர்.)

3. இம்மையின் இன்ப சுகங்கள்
யாவையும் வெறுத் தொரு
சம்மனசைப் போல் நடந்த
தந்தையே நீர் வாழ்கவே. (நீர் வாலர்.)

4. எவ்வித பாவங்களிலும்
யாம் விழாமலே எமைச்
செவ்வை மோட்ச பாதை சேர்ப்பீர்
தீதிலாரே வாழ்கவே. (நீர் வாலர்.)

5. மோக பாவ தந்த்ரத்தில் யாம்
மோசம் போகா தெங்கட்கா
எகனே விசேஷமா நீர்
என்றும் வேண்டும் வாழ்கவே. (நீர் வாலர்.)

அர்ச். பேர்க்குமான்ஸ் அருளப்பர் பேரில்.

136. *Air :*—**L'etendard De Marie.**

Vade Mecum, 3rd Vol: No. 127.

சரணங்கள்.

1. ஓ! சேசுசபையின் தீபமே
ஓதரிய துறவோனே
மாசாதுவே தூயோனே நீரே
மைந்தர்கள் எம்மை யாள்வீரே.

பல்லவி.

தாதவிழ் நும் பாதவாரி
சந்தனே யாமடைந்தனம்
பேதைகளாம் எம்மையாள்வீர் } *bis.*
பெர்க்குமான்ஸ் அருளப்பரே. }

2. கீர்த்தி யடைந்தீர் எல்லாராலும்
கீழ்ப்படிதலால் நுங் கற்பை
காத்தீ ரற்பமுமே மாசின்றிக்
காணரும் வான் க்ரீடம்பெற்றீர். (தாதவிழ்.)

3. சாமளவுந் தேவ ஸ்நேகத்தால்
சாற்றும் பரவசங் கொண்டீர்
தோமில் பத்தி ஜ்வாலகராகத்
தோன்றினீர் வான்சுகம் பெற்றீர். (தாதவிழ்.)

4. தாதராம் யாம் பூமி தெஞ்ஞான்றும்
தாழ்ச்சி பொறை நல மோங்கும்
ஓதுங் கற்புள்ளோராகச் செய்வீர்.
உம்மையே நம்பினோம் யாமே. (தாதவிழ்.)

---

137. *Air :*—**Cantique a St. Jean Berchmans.**
Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்.

1. ஆதிபரன் தோத்ரத்துக்காக
ஆரின்பம் முற்றும் நீத்திவண்
தீதில் சேசுசபையைச் சார்ந்து
தேவ ஊழியம் புரிந்தே
நீதி நிறை சர்வேஸ்பரனால்
நீள் வான்முடி அடைந்தோரே
ஓதும் பெர்க்மான்ஸ் அருளப்பரே
உம்மை நம்பினோம் ஆட்கொள்வீர்.

பல்லவி.

பாதார விந்தம் எமக்கீந் தெம்
பாதுகாவல ரானோரே
பேதைகளெமைக் காத்தருள்வீர்
பெர்க்மான்ஸ் அருளப்பரே நீர்.

2. தோமில் பத்தி ஜ்வாலகர்போல் நீர்
தூய தேவ ஸ்நேகங் கூர்ந்தே
தாம பொறுத்து தரித்ரஞ் சீர்
தாழ்ச்சி சாந்தத் தொழுகினீர்
வாம வர்ச்சியசிஷ்டரே பெர்க்
மான்ஸ் அருளப்பரே இவண்
தீமை விலகியாம் நன்காத்த
செய்தென்றும் எம்மை யாட்கொள்வீர்.

3. பாடுபட்ட திருச் சுருபம்
பாங்காரும் ஜெபமாலை கை
ஈடில் ஜெபப் புஸ்தகமன்றி
ஏது மிலாராய் மரித்தே
பீடாறும் வீடடைந் துய்வோரே
பெர்க்மான்ஸ் அருளப்பரே மாண்
நீடும் அமலோற்பவ ஞாட்பை
நீர் காவலராய் ஆட்கொள்வீர்.

அர்ச் : அந்தோனியார் பேரில்

138. *Air* :—**O Marie, O Mere Cherie.**

Vade Mecum, 3rd Vol : No. 149.

பல்லவி

ஐயனே ஓ ! மாதுறவோனே
துய்யனே சிஷ்ட அந்தோனி மாதவனே
தாதவிழும் நின் பூந் தாளலரடைந்தோம்
மாதயை தாதை நீ செய்வாய்.

சரணங்கள்.

1. மாய வுலக வாஞ்சை வென்று
தூய சந்யாசியாய் ஐந்து
காய ப்ரான்சீஸ்கன் ஆயம் சேர்ந்தாய்
தீய ரெமக்கு க்ருபை செய். (ஐயனே.)

2. ஆதி பிரானை உம்பர் கோனை
நீதி லுன் அங்கை ஏந்தவே
ஓதரிய வரம் நீ பெற்றாய்
ஏத மிலானே க்ருபை செய். (ஐயனே.)

3. நீர்க்கடல் மீன்கள் நின் மெய்வேத
வாக்யத்தைக் கேட்கச் செய்தோனே
நாக்கழியாத ஞானியே இம்
மாக்களின் மீது க்ருபை செய். (ஐயனே.)

4. ஈடில் பரன் முன் நீ யெமக்கா
நாடிய நன்மை நல்குமே
கோடி யற்புதனே யாதலால்
ஓடி வந்தோம் மாக்ருபை செய். (ஐயனே.)

அர்ச். சவேரியார் பேரில்

139. *Air* :—**Cantique a St. Francisc.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

பல்லவி

இந்த வேளை நீர் க்ருபை செய்வீர்
ஏழை மகா ரெங்கட் கீதோ
தந்தருள்வீர் நும் தஞ்சம் தூயே
சவேரியாரே தாதாவே.—*bis.*

சரணங்கள்

1. சிந்து தேசத்தின் மக்களெம்மைத்
தீதில் மெய் வேதத்தில் சேர்த்தீர்
பந்த பவத் தாழ்ந்தோம் நீர் மோட்ச
பாதை நடாத்தும் எம்மையே
கந்த மலர்த்தாள் நம்பினோம் யாம்
காருண்ய கோமானே இவண்
சொந்த அடிமைக ளெமைக் கை
தூக்கி யருள்வீர் ஐயனே. (இந்த)

2. தேகம் வீதலின்றி இயங்கத்
தேவனுல் மாவரங் கொண்டீர்
ஏகனவர் தோத்ரத்துக்காக
இங்குழைத் தீற்றில் மோக்ஷத்தில்
வாகைச் கிரீடம் நீர் அடைந்தீர்
மன்னுநும் மாட்சி யென் சொல்வோம்
சூழ்கும் மோட்சத்தினி லெமைக் கை
தூக்கி யருள்வீர் ஐயனே. (இந்த)

3. உந்தியில் வீழ்கும் சிலுவை நும்
ஒண் கரத்தில் முன்னர் நண்டு
தந்திட உள்ளம் பூரித் தேற்றீர்
சாவடைந்தோர்க்கு ஜீவனை
விந்தயதாத் தந்தீர் நும் மேன்மை
விள்ள வெம்மாலாமோ தவச்
சுந்தரரே மைந்தரெமைக் கை
தூக்கியருள்வீர் ஐயனே. (இந்த)

---

140. *Air :*—**Sing praises to Mary.**

Music for this canticle can be had from Mr. Manuel Costa, Manapad.

சரணங்கள்

1 ஓ! ப்ரான்சிஸ் சவ்யேரென்
ஸ்ரேஷ்டு மாதவரே
மாப்ரதாபரே நீர்
வாழ்க நீர் வாழ்க.

பல்லவி

நீர் வாழ்க நீர் வாழ்க
நீர் வாழ்க நீர் வாழ்க
நீர் வாழ்க ப்ரான்சீஸ்
சவ்வேர் மாமுனியே.

2. சேசுசபை சார்ந்து
தேவ அன்பிலாழ்ந்து
மாசில் வானடைந்த
மாதவர் வாழ்க. (நீர் வாழ்க.)

3. சிந்து தேயத் தெம்மைச்
சீர் வேதத்துள்ளாக்கும்
சந்தமாரும் ஞானத்
தந்தை நீர் வாழ்க. (நீர் வாழ்க.)

4. உம்மால் நன்மை பெற்ரூம்
உம்மால் ஈனமற்ரூம்
எம்மாருயிரே நீர்
என்றென்றும் வாழ்க. (நீர் வாழ்க.)

5. நீரே எம் நற்ருதை
நீரே மோக்ஷ பாதை
ஆருமன்போ டெம்மை
ஆட்கொள்வீர் வாழ்க. (நீர் வாழ்க.)

அர்ச்: குழந்தை சேசுவின் திரேஸ் அம்மாள் பேரில்

141. *Air :*—**Chantons Les Combats.**

Vade Mecum, 3rd Vol : No. 182.

1. ஓ! சேசுவின் சீர் புஷ்பமாக
ஓதும் ப்ரதாபக் கன்னியே என்றும்
நன்மை வரங்கள் சிறந் தோங்கும்
நாயகி யுன் பாதம் வந்தோம்
ஈன வழிப்பட் டயர்ந் திவண்
இனையு மெம்மை நீ நோக்கி
இந்த வேளை மாக்ருபை செய்வாய் } *bis.*
யேசுவின் திரேஸ் நீயே யம்மா.

2. உம்பர் உறை வான்றலஞ் சேர்ந்தே
உரோசா மலர் பொழிகுவே னென்றாய்
நீதி பரனின் நிறை நேசம்
நீதமுடன் நீ கொண்டுளாய்
தீதில் உனையாம் பின் சென்றிவண்
தகு ப்ரசாதம் பெற்றுய்ய
தாரணி தன்னில் தயை செய்வாய் } *bis.*
சேசுவின் திரேஸ் நீயே யம்மா.

3. வஞ்ச வுலகம் சோகுடலம்
மாறாது செய் யுபாயங் களினல்
மிஞ்சு பவ வாரியில் வீழ்ந்து
மாதுன் பாழ்ந்தனம் நாயகி
பன்னு மெங் குறை யகற்றி வான்
பாதையில் யாம் நடந்திடத்
தாரணி தன்னில் தயை செய்வாய் } *bis.*
சேசுவின் திரேஸ் நீயே யம்மா.

காவலான சம்மனசுகளின் பேரில்

142. *Air* :—**Sing O my lips.**

சரணங்கள்.

1. எம்பாலிருந் தெமைப் புரந்
திடச்சீர் பெற்றேரே
அன்பாய் நிதமும் எம்மைக்காத்
தருளுவீர் நீரே.

பல்லவி.

காத்தருள்வீர் நீர் காத்தருள்வீர்
காவற் சம்மனசுகளே.

2. கருத்தரித்த நாள் முதற்
கர்த்தன் பூமி தொண்மை
உரித்துடன் காக்க வுமக்
கொப்புவித்தா ரெம்மைக் (காத்த)

3. எம்மேற் க்ருபை கூர்ந்தே யிடர்
எய்தாமலே துன்றும்
நன்மார்க்கமா விவணெமை
நடத்தியே யென்றும். (காத்த.)

4. உண்ணும்போதும் யாம் கண் துயி
லுகையினுந் தொழிற்
பண்ணும்போது மெவ்வேளையும்
பார்ப்பீர் எமை விழி. (காத்த.)

5. தீயாருந் தீக்குணங்குகள்
தினமு மாரினில்
ஓயாம லந்தந்தோ வெம்மோ
டுஞற்று போரினில். (காத்த.)

6. வையமு மெம் முடலமும்
மயற்குழுவுமே
செய்யுந் தெவ்வில் வெலச் செய்தெம்
ஜீவனளவுமே. (காத்த.)

7. பொல்லாத சிந்தை தீய சொல்
புன்மைப் பவ வினை
எல்லாத்தினுங் காத்தெமைச் சேர்த்
திடுவீர் வான் மனை. (காத்த.)

நமது பாப்பாண்டவருக்கு வாழ்த்து.

143. *Air* :—" **God Bless our Pope.**"
Crown of Jesus Music Book. No. 157.

1. மாவரப்ரசாத மார்ந்த
மாகுருவாய் நலத்தோங்கி
தேவ ராசாங்கம் செய் அர்ச்ய
சிஷ்ட பாப்பாண்டவர் வாழ்க.
" வாழ்க பாப்பாண்டவர் வாழ்க"

2, சத்ய திருச்சபை தன்னைத்
தாரணி மீதி ராயப்பர்
பத்ராசனத் தெழுந்தாளும்
பத்திநாத பாப்பு வாழ்க.

3. வான்றிறவு கோற்கைக்கொண்டே
மாண்பமர் ஞான மந்தையை
ஞான்றும் பரிபாலனஞ் செய்
நல்லாயனும் பிதா வாழ்க.

4. நாதன் பதிலாளியாக
நானிலத்திற் காணப்பட்ட
மாதலேவரான மேன்மை
வாய்ந்த பத்திநாதர் வாழ்க.

5. ஆபத்துள விப்பூ மீதெம்
ஆத்ம வயித்யரா யெம்மைத்
தாபரிக்கும் பரிசுத்த
தந்தை எஞ்ஞான்றுமே வாழ்க.

அட்டவணை.

		நம்பர்.
அன்னையே உன்னை நம்பினோம் யாம்	...	97
அன்னையே மாசற்ற மரி ...	...	101
அற்புத தேவ பரம ...	...	29
ஆ! ஈதென்ன மாநவம் ...	...	7
ஆதாம் செய்தீமையைப் போக்கி	...	57
ஆதி தேவ குழந்தாய்	...	17
ஆதி தேவசுதனுர் ஆரிற்பாடுபட்ட	...	56
ஆதி தேவ தேவனே	...	9
ஆதி தேவ தேவை ஈன்ற	...	88
ஆதி தேவனின் மைந்தன்	...	51
ஆதி தேவ மைந்த னெமக்கா	...	58
ஆதிபரன் தோத்ரத்துக்காக	...	137
ஆராரோ ஆரிரரோ பாலனே	...	10
இந்தவேளை நீர் க்ருபை செய்வீர்	...	139
உனது பதமலர் நம்பி வந்தோம்	...	120
உன் சேவடி தந்தெம்மை யாதரி	...	70
எந்தாய் சர்வேசன் தாய்	...	100
எம்தாய், எம்தாய், எம்தாய்	...	65
எம்தாய், எம்தாய் அதி	...	72
எம் திவ்ய நாதனே	...	39
எம்பாலிருந் தெமைப்புரந்திட	...	142
ஐயையோ உயிர்விட்டார்	...	21
ஐயனே யேசுவின்	...	132
ஐயனே ஒ! மாதுறவோனே	...	138
ஒ! அர்ச்யசிஷ்ட யாகப்பரே பொற்புறும்	...	131
ஒ! எம் திவ்ய நாதனே எங்கோவே நீர்	...	43
ஒ! எம்நேச சேசுவே	...	37

நம்பர்

ஓ! கன்னித்தாய் மாமரி வரனோர் ... 93
ஓ! கன்னியர் முதல்வி ... 96
ஓ! கன்னித்தாய் நன்மை ப்ரவாகி ... 105
ஓ! கன்னித்தாய் மாமரியே ... 63
ஓ! க்ருபை தயாபம் நிறை ... 107
ஓ! குழந்தாய் வா ... 46
ஓ! சர்வ தயாபரி ... 69
ஓ! ஜீவ தயாபரியே ... 78
ஓ! சூசை மாதவா தாதரெம்மீது மா ... 128
ஓ! சூசை மாமுனீந்த்ரனே தூயோனே ... 122
ஓ! சேசுவே எம் ஸ்நேக தேவே ...34–45
ஓ! சேசுவே எங்கோவே ... 24
ஓ! சேசுவே என்தேவனே நீர் ... 25
ஓ! சேசுவே எம் ஸ்நேகமே ... 42
ஓ! சேசு கிறீஸ்துவே எங்கோவே ... 35
ஓ! சேசுவின் சீர் புஷ்பமாக ... 141
ஓ! சேசுவின் திரு இருதயமே ... 49
ஓ! சேசுக்கிறீஸ்து நாதரே ... 27
ஓ! சேசுவின் மதுர இதயமே ... 48
ஓ! சேசு சபையின் தீபமே ... 136
ஓ! ஸ்நேக தேவே ... 38
ஓ! தயாபரி ஓ! க்ருபாகரி 76
ஓ! தயாபரியே, ஓ! க்ருபாகரியே ... 84
ஓ! தயையுள்ள கர்த்தாவே 22
ஓ! திவ்ய நாதனே வேதாவே ... 36
ஓ! தேவ கன்னித்தாயே 87
ஓ! தேவ கன்னித்தாயே உத்தரீய ... 119
ஓ! தேவ குழந்தாய் 15
ஓ! தேவ தாயே ஓ! அமலோற்பவியே ... 61
ஓ! தேவ தாய்மரியே ஆதரி 66

நம்பர்

ஓ! தேவ தாய்மரியே நீ தாபரி ... 114
ஓ! தேவதாய் நீயே வாழ்க ... 68
ஓ! தேவ தேவனே 4
ஓ! தேவனே நீயே 90
ஓ! தேவ சத்ப்ரசாதமே ... 28
ஓ! நாயகி பரமதேவ தாயே 103
ஓ! நாயகி வானோர்கள் ராக்கினி ... 75
ஓ! நிமல நாதனே 13
ஓ! ப்ரான்சீஸ் சவ்யேரென்றூது ... 140
ஓ! மரியாயே தீமைக்குள்ளாகி ... 111
ஓ! மாசற்ற கன்னியே தாயே... ... 112
ஓ! மாசில்லாத கன்னித்தாய் ... 73
ஓ! மாசில்லா ராஜேஸ்வரி ... 74
ஓ! மாதாவே பாவிகட் கென்றுந் தஞ்சமே ... 92
ஓ! வானரசி மாமரி ...115
ஓயாத தோத்ரம் தோத்ரமே ... 26
கனமுள பவவினையில் ... 77
கைத்தாதையே கைத்தாதையே ... 121
சத்ப்ர சாதத்திலே யெழும் ... 30
சன்மமாசற்ற கன்னித்தாயே ... 67
சந்த்யாகையா ...130
சருவதாபரி ... 83
சியோன் நகரமே ... 40
சூசை முனீந்த்ரரே ... 123
ஜென்ம மாசில்லாத கன்னிமாதாவே ... 104
ஜென்ம மாசில்லாத சுசீலி ...110
ஜென்ம மாசற்ற தாய் ... 109
ஜென்ம மாசணுகாத ... 85
சேசுவே எம் ஸ்நேகமே நீர் ...31–41
சேசுவே எங்கள் ஸ்நேகபிரானே ... 32

	நம்பர்
சேசுவே எம் ஸ்நேகதேவே ...	44
சேசுவின் இருதயமே ...	47
சேசுவின் கைத்தாதாவே ...	125
சேசுவின் சீர்க் கைத்தாதாவே ...	126
சேசுபிரானே பேயின் கையில் நின்றே ...	50
ஸ்பிரீத்து சாந்துவே வாரும் ...	3
தவ மாமுனியே தாதாவே ...	127
தாயே யுன்றன் பாதாரவிந்தம் ...	99
தாயே நீயே யன்றி எம்மை ...	62
தாய் மரியே விழிபார் ...	91
தாய் மாமரி தயாபரி ...	116
தாராய் நீ தஞ்சம் ...	102
திவ்ய சிலுவையே தேவசுதனும் ...	55
திவ்ய சிலுவையே வாழ்க ...	53
தீயார் பேய் புவி யோயாதென்றும் ...	95
தீமை வழியே யாம் தினம் ...	108
தேவ கன்னித்தாய் மரியே எம் ...	80
தேவ கன்னித்தாயே ...	82
தேவ கன்னி ராஜேஸ்வரி ...	81
தேவ-ஸ்பிரீத்து சாந்துவே ...	2
தேவதாய் எம் தேவதாயே ...	64
தேவதாய் மரிநலஞ் ...	71
தேவதாய் பதந்தந்தாள்வீர் ...	106
தேவ தேவன் தேவ தேவன் ...	14
தேவ ப்ரசாதம் நிறைந்த ...	133
தேவா எங்கோவே வாரீர் ...	6
தேவாதி சுதனே ...	129
தேவாதி தேவ தேவே ...	20
தேவாதி தேவமைந்தன் ...	54
தேவாதி தேவே லோகாதி கர்த்தாவே ...	18

	நம்பர்
தேவுலக வாசிகளில் ...	135
நித்ய கன்யாஸ்த்ரியே தேவ ...	79
பரமதேவன் நம் ...	12
பரலோகம் புவி ...	5
மங்களம் என்றும் மாமரியாயே ...	113
மாசற்ற நித்ய கன்னித்தாய் ...	86
மாசில்லாக் கன்னியே தேவனே மாமரியே ...	117
மாசில்லாத மாமரி நினையே நின் ...	98
மாசேது மிலாரே பொல்லா ...	19
மாமகிமை யொளிர்ந்தென்றும் ...	60
மாமலர்க் கோலோனே ...	124
மாவரப்ரசாத மார்ந்த ...	143
மூவா முதல்வன் பூவுலகை மீட்ப ...	16
மெய்ப்பரமன் பாவிகட்கா ...	52
மெய்ப்பரம த்ரித்துவத்தின் ...	1
வானோனென ப்ரதாபிக்கும் ...	134
வானோரின் ராணியே மாதன்மைக் கேணியே..	89
வானோர் போசனமே பூவில் ...	23
வாரீர் எம்மில் எம் நேச சேசுவே நீர் ...	33
வாரும் போற்றுவோம் ...	11
வாரும் வாரும் வணங்குவோம் ...	8
வாழ்க எம் திவ்ய மாதாவே ...	94
வாழ்க வாரிமீனே ...	59
வியாகுலத்தாய் மாமரியே நீ ...	118